விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 27 ஞாயிற்றுக்கிழமை (12.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## மனித உரிமை மீறலில் ஈடுபட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் 15☛

எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பில்

## அரசுக்கு மகிந்த அணி இறுதி எச்சரிக்கை!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அடைவதற்கான போராட்டங்கள் இனிமேல்தான் உக்கிரமடையும் என, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குண 15☛

## ஐ.தே.க உறுப்பினர்கள் மகிந்தவுடன் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மகிந்தவின் ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைவதற்கான 15☛

## ரயில் தொழிற்சங்க போராட்டத்தால் 100மில்லி. நஷ்டம்

(கொழும்பு)

சம்பள அதிகரிப்பினை வலியுறுத்தி புகையிரத தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக 100 மில்லியன் ரூபாய் புகையிரத திணைக்களத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக புகையிரத தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று பிற்பகல் கூடிய தொழிற்சங்க நிறை 15☛

மாகாணசபைத் தேர்தல்

## நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 24-ம் திகதி காலை 11 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இந்த விவா 15☛

ஐ.நா மனித உரிமை ஆணையாளராக

## சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மிசெல் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய ஆணையாளராக சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மிசெல் பாச்செலெட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை ஐ.நா. 15☛



## தனியார் பேருந்துகளின் பணிபகிஷ்கரிப்பு

கைவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)


இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படவிருந்த அனைத்து மாகாண பேருந்துகளின் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானி 15☛

மாகாணசபை தேர்தல் தொடர்பில்

# விக்னேஸ்வரன், இரா.சம்பந்தன் இரகசிய பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் இரகசிய சந்திப்புகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (15-ம் பக்.)



ஐ.ஓ.சி நிறுவனத்தின்

## எரிபொருளின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள ஏ இந்திய எண்ணெய் நிறுவனமும் (ஐ.ஓ.சி.) எரிபொருள் விலையை நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை நேற்று முன்தினம் நள்ளி 15☛

## குற்றவாளிகளை கைது செய்ய மக்களே! ஆதரவளியுங்கள்

பொலிஸார் கோரிக்கையுடன் அறிவித்தல்

பொலிஸ் அறிவித்தல்

யாழ்ப்பாண பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைக்கு தொந்தரவு செய்யும் குற்றவாளிகளை கைது செய்ய உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்
வடக்கு மாகாணம்
தொலைபேசி இலக்கம்
076-6093030

(யாழ்ப்பாணம்)

மக்களின் வாழ்க்கைக்கு தொந்தரவு செய்யக்கூடிய குற்றவாளிகளைக் கைது செய்ய ஆதரவு வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் 15☛

பெண்களின் பொருளாதாரத்தை

## கட்டியெழுப்புவதற்கு வேலைத்திட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள பெண்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம் 15☛

21 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் இளம் தம்பதியினர் கைது

## வடக்கு மாணவர்களுக்கு என விசாரணை மூலம் தகவல்!

(யாழ்ப்பாணம்)

21 மில்லியன் ரூபாய் பெறுமதியான 70 ஆயிரம் போதை மாத்திரைகளைக் கடத்திய இளம் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவை வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்காகவே என விசாரணை மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்புக்கு கடத்திச் சென்ற வேளையில் செட்டிக்குளம் பகுதியில் வைத்து 15☛

## கடதாசிப்பை பயன்பாட்டை சட்டமாக்க அரசு தீர்மானம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

(கொழும்பு)

கடதாசிப் பைகள் பயன்படுத்துவதை சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில், வெதுப்பகங்கள் மற்றும் மருந்தகங்களில் இந்த சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக குறித்த அதிகாரசபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொலித்தீன் பைகளின் பாவனை அதிகரித்துள்ளமையாலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், குடிபானங்களுக்காகப் பயன்படுத் 15☛

Parcel.lk மகாராஜா பொதிகள் சேவை GTV Express SRI LANKA
aramex
Parcel.lk GTV Express SRI LANKA
லண்டன் 450/-
கனடா 550/-
சுவிஸ் 450/-
1Kgக்கான கட்டணம்
(C-3486)
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |



## அமைச்சரவை தீர்மானங்களை எவரும் விமர்சிக்கக் கூடாது!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை



(கொழும்பு)

அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் எவரும் விமர்ச்சிக்க கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கும் தீர்மானங்களை வெளியில் உள்ள ஊடகவியலாளர்களிடம் விமர்சிக்கும் வகையில் அமைச்சர்கள் கருத்து வெளியிடுவதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான தீர்மானங்கள் வெளியில் விமர்சிக்கப்படுவதால், அரசாங்கத்தின் பல்வேறு 15☛

# யாழ் செம்மணிப் பகுதியில் பகல் வேளையில் பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி வீதியில் பகல்வேளையில் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறிக் கொள்ளையர்கள் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் செம்மணி வீதியால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரு இளம் பெண்கள் பயணித்துள்ளனர். இதன்போது பகல் நேரமாக இருந்தபோதும் குறித்த சமயம் வீதியில் யாரும் காணப்படவில்லை.

இந்த நிலையில் மிக வேகமாக ஓர் மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துள்ளார்.

இதன்போது நிலை தடுமாறி வீழ்ந்த இரு யுவதிகளும் சுதாகரித்து எழும்புவதனை அவதானித்த வழிப்பறி கொள்ளையர் யுவதியை காலால் உதைத்து வீழ்த்தியுள்ளார். இதனால் மீண்டும் வீழ்ந்த யுவதிகள் காலில் பலமாக அடிபட்டு படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து தங்கச் சங்கிலியை அபகரித்தவர்கள் தமது மோட்டார் சைக்கிளில் ஏ9 வீதியை நோக்கி வேகமாகத் தப்பிச் சென்றனர். இதன்போது இரு யுவதி களும் எழுப்பிய அவலக் குரலையடுதது அயலவர்கள். கூடி உதவி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதேநேரம் குறித்த பிரதேசத்தில் உள்ள வீடுகள் பலவற்றில் கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளமையினால் அதன் உதவியுடன் பொலிசார் கொள்ளையரை இனங்காண முயற்சிக்க வேண்டும் என அப் பகுதியைச் சேர்ந்தோர தெரிவிககின்றனர். (ம)

# புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் நியமிப்பு

(கொழும்பு)

இந்தியா. ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கான 10 புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவிற்கான தூதுவராக கலாநிதி தயான் ஜயதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகராக ஒஸ்டின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

நோர்வேக்கான புதிய தூதுவராக பேராசிரியர் அஷேரூஷா குரேவும், பிரேசிலுக்கான தூதுவராக எம்.எம்.ஜஃபீரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கனடாவிற்கான இலங்கை தூதுவராக எம்.ஏ.கே.கிரிஹாகமவும், போலந்திற்கான தூதுவராக சீ.ஏ.எச்.எம்.விஜேரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுவீடனுக்கான தூதுவராக எஸ்.எஸ். கனேகம ஆராச்சியும், வியட்நாமிற்கான தூதுவராக எச்.எச்.பிரேமரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவிற்கான உயர்ஸ்தானிகராக அநுருத்த குமார மல்லிமாராச்சியும் பாகிஸ்தானிற்கான உயர்ஸ்தானிகராக அநுர்தீன் மொஹமட் ஷகீட்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

# கலந்துரையாடலும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடலும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத் தலைவர் கலந்து கொள்கிறார்.

எனவே, அனைத்து வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம)

# எதிர்பாராத நேரத்தில் ஜனாதிபதி தேர்தல்

## தெற்கு ஊடகம் தகவல்

(கொழும்பு)

எதிர்பாராத நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெற்கு ஊடகமொன்று முக்கிய செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது குறித்து ஆளும் கட்சியின் அரசியல் தலைவர்கள் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு சாதகமான பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அரசியல் மற்றும் ஜோதிட அடிப்படையிலான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக கட்சித் தலைவர்கள் சிலர் தெற்கு ஊடகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

அரசியல் அமைப்பின் 31ம் சரத்து மற்றும் அதன் துணை சரத்துக்களின் இ ஏற்றுக்கொண்டு நான்கு ஆண்டு களின் பின்னர் எந்தவொரு நேரத்திலும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும்.

எவ்வாறெனினும், குறித்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி போட்டியிட்டால் மட்டுமே முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட முடியும்.

திடீரென ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக் கூடும் எனவும் இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவார் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும், கூட்டு எதிர்க் கட்சியின் சார்பில் கோத்தபாய ராஜபக்ஷவும் போட்டியிடுவர் என தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய சாத்தியம் உண்டு என குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் தாம் போட்டியிடப் போவதாக அமைச்சர் ராஜித சேன்ாரத்ன தெரிவித்துள்ளார். (ம)

# ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை கைவிடும்வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை

## நிதியமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களின் முறையற்ற வேலைநிறுத்தத்தை கைவிடும் வரையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திஎறசேரி தயாரில்லையென நிதி அமைச்சர மாங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அரசாங்கம் அதற்கு முகம் கொடுக்க தயார் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

ரயில்வே ஊழியர்களின் அசௌகரியங்களைக் குறைப்பதற்கு தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
**Hotel** ஒன்றுக்கு பணியாளர்கள் தேவை

1. **முகாமையாளர்**
2. **வரவேற்பாளர் (பெண்கள்)**
(மூன்று மொழிகளும் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது)
3. **Room boy**
4. **சமையலாளர்கள்**
(இந்திய உணவு வகைகள் மற்றும் கொத்து, றைஸ் தயாரிக்கக்கூடியவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:- **076 359 1514**
(மாலை 4.00 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்) (C-3490)


# வைத்தியர்களை விட புகையிரத சாரதிகளுக்கு சம்பளம் அதிகம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டு தொழிற்சங்கம் ஒன்று செய்த நியாயமற்ற வேலை நிறுத்தம் என்றால் அது இம்முறை புகையிரத வேலை நிறுத்தம் என்றும் சில அரசியல்வாதி கள் இந்த வேலை நிறுத்தத்தை தூண்டி விடுவ தாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

நேற்று பெலியத்தை சிட்டினாமலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான வேலை நிறுத்தம் ஒன்று இதற்கு முன்னர் இடம்பெற்றதாக நான் நினைக்கவில்லை என்றும், திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததாகவும் அவர் கூறினார்.

புகையிரத சாரதிகள் மாதம் ஒன்றுக்கு பெறும் சம்பளம் வைத்தியர்கள் பெறும் சம்பளத்தை விடவும் அதிகமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றின் அடிப்படை நோக்கம் அரசியல் தவிர வேறொன்றுமில்லை என்றும், இவர்களுக்கு ஒட்சிசன் வழங்கி தூண்டி விடுவது அரசியல்வாதிகளே என்றும் விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார். (ம)


**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியை
ஆகிய திருமதி **வானதி கதிர்காமலிங்கம்** அவர்களின்
பாசமிகு தந்தையார்

**ஆறுமுகம் பொன்னையா சுப்பிரமணியம்**

அவர்கள்
காலமடைந்ததையிட்டு
துயரடைகின்றோம்.
அவரது பிரிவால்
துயருற்றுள்ள
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5320)

ஆசிரியர் நலன்புரிக்கழகம் — யா/வைத்தீஸ்வராக் கல்லூரி



**VACANCIES**

**1 Yaarl Fitness - Female Trainee Instructor**
- Have participated in sports when in School
- Having done weight training, body building and any martial arts will be an advantage

**2 Yaarl Hostels - Male Receptionist**
- Part time (6 pm - 10 pm)
- Accomadation will be provided
- undergraduate and a good knowledge about Jaffna will be an Advantage

**3 Salary Negotiable and we will train Free of charge**

**Contact: 077 817 7817** (C-3491)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# தேர்தலைப் பிற்போடும் தேவை எமக்கில்லை; பாராளுமன்றம் பணியை நிறைவேற்றவில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம்

(கொழும்பு)

தேர்தலை காலம் தாழ்த்த வேண்டிய தேவை சுயாதீன ஆணைக்குழுவுக்கு இல்லை. பாராளு மன்றம் தேர்தல் தொடர்பில் தனது பணியை நிறைவேற்றாமையினாலேயே மாகாண சபைத் தேர்தல் தாமதமடைகிறது என சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளதாவது,

எமது நாட்டில் தற்போது மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது.

எனினும் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் சட்டத்தில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே இப்பிரச்சினையை பாராளுமன்றமே தீர்க்க வேண்டும் என உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

எனவே அது விடயத்தில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு முன்வைக்க முடியாது. பாராளுமன்றம் தனது பணியை உரிய முறையில் மேற்கொண்டு பிரச்சினையைத் தீர்க்குமாயின் உடனடியாக தேர்தலை அறிவிப்பதற்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தயார் நிலையில் உள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கோத்தாவுக்கு எதிராக விசேட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக, விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழ் ஒன்றில் இச்செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட டீ.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியக நிர்மாணப் பணிகளின்போது, அரச பணத்தைத் தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் கோத்தபாயவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் கோத்தபாய உள்ளிட்ட ஏழு பேரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## படகுச் சேவை நேரமாற்றம்

மக்களின் நலன் கருதி நெடுந்தீவிற்கான கடல் போக்குவரத்துச் சேவைகளில் 15.08.2018 இல் இருந்து நேர மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி அறிவித்துள்ளார். இதன் பிரகாரம்,

| நேரம் | நெடுந்தீவிலிருந்து குறிகாட்டு வான் | குறிகாட்டு வானிலிருந்து நெடுந்தீவு |
|---|---|---|
| காலை 6.00 | நெடுந்தாரகை | - |
| காலை 7.30 | தனியார் படகு | வடதாரகை |
| காலை 8.30 | - | நெடுந்தாரகை |
| காலை 9.30 | குமுதினி | - |
| மதியம் 1.30 | - | குமுதினி |
| மாலை 2.30 | நெடுந்தாரகை | - |
| மாலை 3.00 | - | தனியார் படகு |
| மாலை 4.30 | வடதாரகை | நெடுந்தாரகை |

## சமூக வலைத்தளங்களை கண்காணிக்க இராணுவத்தில் தனிசிறப்புப் படையணி!

(கொழும்பு)

சமூகவலைத்தளங்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை இராணுவம் ஆரம்பித்துள்ளது. இதற்காக விசேட பிரிவு ஒன்றை உருவாக்கியுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் ஊடாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சமூக வலைத்தளங்கள் ஊடாக வன்முறை பரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அனைத்து சமூக வலைத்தளங்களும் உடனடியாக முடக்கப்பட்டன. இதன்மூலம் வன்முறைகள் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் தடுக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தின் பின்னரே இலங்கையில் சமூக வலைத்தளங்கள் அனைத்தும் தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சமூக வலைத்தளங்கள் ஊடான பயங்கரவாதம் மற்றும் கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்கள் குறித்து கண்காணிப்பதற்காக இராணுவம் விசேட பிரிவினை ஸ்தாபித்துள்ளது.

இம் மாதம் இறுதியில் இடம்பெறவுள்ள பாதுகாப்புச் செயலமர்வில் சமூக ஊடகம் மற்றும் நம்பகத்தன்மை என்ற தலைப்பில் கீழ் விசேட ஆய்வினை மேற்கொள்ள உள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார். (இ-7)

## 65 இலட்சம் ரூபா பெறுமதியான பத்து தங்க பிஸ்கட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் நிறையுடைய 10 தங்க பிஸ்கட்டுகளை சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்குக் கடத்தி வந்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தங்க பிஸ்கட்டுகளின் பெறுமதி சுமார் 65 இலட்சம் ரூபா என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜெயரத்ன தெரிவித்தார்.

மகபாகே பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரும், கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் யூ.எல். 309 மற்றும் யூ.எல். 124 என்ற விமானங்களில் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இருவரும் தமது பயணப் பைகளிலும் இவற்றை மறைத்துக் கொண்டு வந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த தங்கக் கடத்தல் குறித்து சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## இலங்கை-சிங்கப்பூர் உடன்படிக்கை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழு

### ஜனாதிபதி மைத்திரி நியமிப்பு

(கொழும்பு)



இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினர் மத்தியிலிருந்து பல தரப்பட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே, ஜனாதிபதியால் இந்த நிபுணர்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பொருளியல் பேராசிரியருமான டபிள்யூ.டி.லக்ஷமன் தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை திறந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் சிறிமேவன் கொலம்பகே, களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல் சம்பந்தமான முன்னாள் பேராசிரியர் அஜிதா தென்னகோன், சுயாதீன ஆலோசகர் கலா நிதி சனத் ஜெயநேத்தி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் ஆர்.ஏ. ஜயதிஸ்ஸ ஆகியோர் இக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இரு தரப்பிற்கும் இடையிலான வர்த்தக பரி மாற்றங்களை எளிதாக்கும் முயற்சியாக இலங்கையும் சிங்கப்பூரும் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

ஆனால் குறித்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சட்ட விரோதமானது என தெரிவித்து அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்க ஒன்றிணைந்த எதிரணியினர் திட்டமிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஏழு மாநிலங்களில் மழை வெள்ளத்தில் 718 பேர் உயிரிழப்பு!

(டில்லி)



இந்தியாவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இதுவரை 718 பேர் உயிரிழந்துள்ளனர் என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறித்த அனர்த்தம் தொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உத் தரப்பிரதேசத்தில் 171 பேரும், மேற்கு வங்காளத்தில் 170 பேரும், கேரளாவில் 178 பேரும், மகா ராஷ்ராவில் 139 பேரும், குஜராத்தில் 52 பேரும், அசாமில் 44 பேரும், நாகலாந்தில் 8 பேரும் என மொத்தம் 718 பேர் பலியாகியுள்ளனர். மேலும், கேரளாவில் 21 பேரும் மேற்கு வங்காளத்தில் 5 பேரும் என மொத்தம் 26 பேர் மாயமாகியுள்ளனர் என்றும், 244 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மாகாணத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள மகிந்த இணக்கம்- மனோ தகவல்



(கொழும்பு)

இலங்கையில், மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். தன்னுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே முன்னாள் ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷவுடன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சந்திப்பு குறித்து அமைச்சர் மனோ கணேசன் தெளிவுபடுத்தினார்

மேலும், நாடாளுமன்றத்தில் மாகாண சபை சட்டத்தை திருத்த வேண்டுமாயின் அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு தங்கள் 70 உறுப்பினர்களையும் கூட வாக்களிக்க வைத்து ஒத்துழைப்பு வழங்குவோம் என மகிந்த குறிப்பிட்டதாகவும் மனோ தெரிவித்தார். (இ-7)

# இங்கிலாந்து பிடியில் இந்தியா

## கன்னிச் சதமடித்து அசத்தினார் வோக்ஸ்

லோர்ட்ஸ் டெஸ்டில் இந்திய பந்து வீச்சும் எடுபடவில்லை. வோக்ஸ் சதம் கடந்து அசத்த, இங்கிலாந்து வலுவான முன்னிலை பெற்றது.




இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றிருந்த நிலையில், இரண்டாவது டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸில் நடக்கிறது.

முதல் நாள் ஆட்டம் மழையால் ரத்தானது. நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், துடுப்பாட்டத்தில் தடுமாறிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 107 ஓட்டங்களுக்கு சுருண்டது.

### ஷமி அபாரம்

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து அணிக்கு அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி ஆரம்பம் வழங்கியது. ஷமி 'வேகத்தில்' ஜென்னிங்ஸ் (11) ஆட்டமிழந்தார். குக் 21 ஓட்டங்களில் திரும்பினார். அணித் தலைவர் ஜோ ரூட், போப் இணைந்தனர்.

வேகம், சுழல் என இரண்டு விதமான பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டனர். ஹர்திக் பாண்ட்யா பந்தில் போப்பிற்கு எல்.பி. டபிள்யு.. முறையில் அலிம் டார் ஆட்டமிழப்பு வழங்கினார். இது, 'ரிவியு' மூலம் உறுதியாக, போப் 28 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். ஷமி பந்தில் பட்லர் (24) சிக்கினார்.




### வோக்ஸ் சதம்

பின் இணைந்த பேர்ஸ்டோவ், வோக்ஸ் ஜோடி அசத்தலாக விளையாடியது. விக்கெட் சரிவை தடுத்து நிறுத்திய இவர்கள், அணிக்கு வலுவான முன்னிலையை பெற்றுக் கொடுத்தனர். இவர்களை பிரிக்க இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர். பேர்ஸ்டோவ் அரை சதம் கடந்தார். தன் பங்கிற்கு வோக்ஸ் முதல் டெஸ்ட் சதம் எட்டி அசத்தினார்.

6ஆவது விக்கெட்டுக்காக 189 ஓட்டங்களை சேர்த்தபோது, ஒரு வழியாக பேர்ஸ்டோவ் (93) ஆட்டமிழந்தார். போதிய வெளிச்சமின்மை காரணமாக, 3ஆம் நாள் ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 357 ஓட்டங்களை எடுத்துள்ளது. இதன்மூலம் 4 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில், 250 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

வோக்ஸ் (120), கர்ரன் (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக ஷமி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# ஏரிபி பைனல்ஸ்: நடால் தகுதி



லண்டனில் நடக்கவுள்ள ஏ.டி.பி., பைனல்ஸ் டென்னிஸ் தொடருக்கு ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் தகுதி பெற்றார்.

கனடாவில் உள்ள டொரான்டோ நகரில், ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் உலகின் 'நம்பர்-1' ஸ்பெயினின் ரபெல் நடால், 7வது இடத்தில் உள்ள குரோஷியாவின் மரின் சிலிச் மோதினர்.

அபாரமாக ஆடிய நடால் 2-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

### முதல் வீரர்

இதன்மூலம் வரும் நவம்பர் மாதம் லண்டனில் நடக்கவுள்ள ஏ.டி.பி., பைனல்ஸ் தொடரின் ஒற்றையர் விளையாட முதல் நபராக பெற்றார். தவிர இவர், பிரிவில் தகுதி தொடர்ந்து 14ஆவது முறையாக இத் தொடரில் விளையாட தகுதி பெற்றார்.

கடந்த 2005ல் நடந்த ஏ.டி.பி., பைனல்ஸ் தொடருக்கு முதன்முறையாக தகுதி பெற்ற நடால், இடது காலில் ஏற்பட்ட காயத்தால் விலகினார். பின் 2006ல் நடந்த இத்தொடரில் முதன்முறையாக பங்கேற்ற நடால் அரையிறுதி வரை சென்றார்.


கடந்த 2010, 2013ல் இறுதி வரை சென்றது இத்தொடரில் நடாலின் சிறப்பான செயல்பாடாக உள்ளது.

# துளித் துளியாய்...

இந்தியா முதல் இன்னிங்சில் 35.2 ஓவர்களில் ஆட்டமிழந்தது. இதன்மூலம், லோர்ட்ஸ் டெஸ்ட் வரலாற்றில் முதல் இன்னிங்சில் குறைந்த ஓவரில் சுருண்ட 2ஆவது அணி என்ற மோசமான சாதனை படைத்தது. இதற்கு முன், 2000ம் ஆண்டில் இங்கு நடந்த டெஸ்டில் சிம்பாப்வே 30.3 ஓவர்களில் சுருண்டது.

முதல் இன்னிங்சில் இந்தியாவின் அஷ்வின் 16 ஓட்டங்கள் எடுத்தபோது, சர்வதேச அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம், சர்வதேச அரங்கில் 3 ஆயிரம் ஓட்., + 500 விக்கெட் வீழ்த்திய 4ஆவது இந்திய வீரரானார். இதுவரை 217 போட்டியில் (60 டெஸ்ட்+- 2215 ஓட்., 111 ஒரு நாள்-675,46 'ரி20'-123 ) 3013 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஏற்கெனவே, கபில் தேவ், கும்ளே, ஹர்பஜன் இந்த இலக்கை எட்டி உள்ளனர்.

இங்கிலாந்தின் அண்டர்சன் முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன்மூலம், இந்திய அணிக்கு எதிராக அதிக டெஸ்ட் விக்கெட் (95) வீழ்த்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற பட்டியலில் பாகிஸ்தானின் இம்ரான் கானை (94) முந்தி முதலிடம் பிடித்தார்.




# கனேடியன் ஓபன்: அரையிறுதியில் ஹலெப்

ரோஜர்ஸ் டென்னிஸ் தொடரில் ருமேனிய வீராங்கனை சிமோனா ஹலெப், பிரான்ஸ் வீராங்கனை கார்சியாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் போட்டி கனடாவின் மாண்ட்ரியல் நகரில் நடந்து வருகிறது. இதில் முதல் தரநிலை வீராங்கனையான சிமோனா ஹாலெப் (ருமேனியா) தொடர்ந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

நேற்றுமுன்தினம் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆம் சுற்று ஆட்டத்தில் சிமோனா ஹாலெப் 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வீனஸ் வில்லியம்சை (அமெரிக்கா) தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சிமோனா ஹலெப், பிரான்ஸ் வீராங்கனை கரோலினா கார்சியாவை எதிர்கொண்டார்.

மிகவும் விறுவிறுப்பாக சென்ற இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஹலெப்பின் ஆதிக்கம் இருந்தது.

முதல் செட்டை சற்று போராடி கைப்பற்றினாலும், இரண்டாவது செட்டை எளிதாக வென்றார் சிமோனா.

இறுதியில் 7-5 6-1 என்ற செட் கணக்கில் ஹலெப் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

பிரெஞ்சு ஓபன் சாம்பியனான கார்சியாவை ரோஜர்ஸ் கிண்ண தொடரில் தொடர்ந்து இரண்டு முறை சிமோனா ஹாலெப் வீழ்த்தி உள்ளார்.

அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பார்த்தியை ஹலெப் எதிர்கொள்ள உள்ளார்.

# வட மாகாண G.C.E (O/L) க.பொ.த (சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் வழங்கப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

## நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2018 வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பிற்பகல் 3.00 |
| 10.08.2018 வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 11.08.2018 சனி | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பிற்பகல் 3.30 |
| 12.08.2018 ஞாயிறு | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பிற்பகல் 3.30 |
| 13.08.2018 திங்கள் | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 6.30 - பிற்பகல் 3.00 |
| 14.08.2018 செவ்வாய் | கிளிநொச்சி பல நோக்கு கூட்டுறவு மண்டபம் (A-9 வீதி அருகில்) | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 15.08.2018 புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 16.08.2018 வியாழன் | மன்னார் நகரசபை மண்டபம் | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 17.08.2018 வெள்ளி | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பிற்பகல் 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே.தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2. K.வசந்தன் (Trained Teacher Colombo)<br>3. S.மணிமாறன் (Trained Teacher Jaffna)<br>4. M. லிங்கேஸ்வரன் B.Sc, PGDE, Teacher St.John's College Jaffna |
| விஞ்ஞானம் | 1. வே.சுந்தரேஸ்வரன் Rtd. D.G.M தேசிய லொத்தர் சபை<br>2. V.பிரேம்குமார் P.H.I யாழ்ப்பாணம்<br>3. N.மகேந்திரன் (Trained Teacher Jaffna) |
| தமிழ், வரலாறு | 1. S.நடராஜா B.A (Hons) |

- நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- அனைத்து பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

**"அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறவும்"**

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்
சட்டத்தரணி வே. தேவசேனாதிபதி LLB
தொ.பே இல.: 077 113 3400, 011 232 7524

தொடர்பு:
1) பே.இளமுருகன் B.Sc - 077 907 3593
2) ஆ.முருகானந்தன் - 071 856 1252
3) கே.சக்தீதரன் AD - 077 842 9649
4) எஸ்.ஜங்கரன் - 077 715 7779

**குறிப்பு: அனைத்து மாணவர்களும் (இருபாலாரும்) கண்டிப்பாக பாடசாலை சீருடையில் வருகை தருதல் வேண்டும்.**

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர் மு.க.சின்னையா சௌபாக்கியவதி நினைவாக தமிழ்த்தாய் மன்றம் லங்கா, மாதா அமைப்புடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை பொற்கமலதேவி வாசாவில் இல.31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக பிரதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஈ.தேவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி ஆலய மற்றும் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம் நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும். (இ-7)


# மணமகள் தேவை

**ஆண், 10.3.1972**
**3.41 பி.பகல்**
**பூராடம்-3ஆம் பாதம்**
**செவ்வாய்-இல்லை**
**பாவம் -38,1/2**
**வேலை-அரச உத்தியோகம்**

**தேவை:**
**வேலை இல்லாத பெண் (கூடின விருப்பம்) அல்லது அரச உத்தியோகமும் விரும்பப்படும்.**

**தொடர்பு:**
**சூரியன் திருமண சேவை.**
**561, K.K.S. வீதி,**
**மனோகரா சந்தி,**
**யாழ்ப்பாணம்.**
(5328)

# வைத்தியம்

தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல்(வயிறு/மார்பு/கை) முள்ளந்தண்டு பிரச்சினைகள், ஆண்மை குறைபாடுகள், குழந்தையின்மை போன்ற சகலவித நோய்களிற்கும் பக்கவிளைவின்றி சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு:Shan's Health Care,
255,K.K.S.Rd, Kokuvil.
T.P:077 035 7307
(5087)


# இராசி பலன்

**மீனம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும்.

**மேடம்:** பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபசெலவுகள் கூடும்.

**மிதுனம்:** சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், புதிய, பொருள் சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும்.

**மகரம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | சூரி, புத. ராகு |
| செவ். கேது | சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம் | | |
| சனி | | குரு | சுக் |

12.08.2018
ஆடி 27, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.10 மணிவரை
மகம் பின்னிரவு 12.46 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

வளவன்

**தனுசு:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், அரைகுறையாக இருந்த பணிகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** சுபகாரிய பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும், மதிப்பும் மரியாதையும் உயரும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் உதவ முன்வருவர்.

**கன்னி:** சுப விரயங்கள் கூடும், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

# நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகர முதல்வரின் விசேட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 16 ஆம் திகதி வியாழக் கிழமை காலை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி அடு த்த மாதம் 11 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை முடிவடைகின் றது. இக்காலப்பகுதியில் ஆல யச் சூழலில் ஏற்படும் பக்தர் கள் கூட்டம் அதிகரிப்பு ஆகிய வற்றைக் கருத்திற் கொண்டு பருத்தித்துறை வீதி வழியாக செல்லும் வாகனங்களுக்கு மான மாற்றுப்பாதை ஒழுங்கு ஆண்டு தோறும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

2018.08.14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் 2018.09.11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிவரை யாழ் ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் ஆனைப்பந்தி சந்தியைச் சென்றடைந்து பின் னர் நாவலர் வீதியூடாக நல் லூர் குறுக்கு வீதிச் சந்தியினை அடைந்து அவ்வீதியூடாக சென்று மீண்டும் பருத்தித் துறை வீதியினை அடைந்து செல்வது என்றும் பருத்தித் துறை வீதியிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி வரும் வாக னங்கள் பருத்தித்துறை வீதியி லிருந்து நல்லூர் குறுக்கு வீதி யினை அடைந்து அதனூடாக நாவலர் வீதியை அடைந்து யாழ்ப்பாண நகர்ப் பகுதிக்குச் செல்வது என்றும் போக்குவர த்து மாற்று ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என யாழ். மாநகர சபை முதல்வர் அறிவித்துள்ளார்.

எனினும் சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய விசேட தினங் களில் பருத்தித்துறை வீதியி லிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வாகனங்கள் பருத்தித் துறை வீதியூடாக முத்திரைச் சந்தியை அடைந்து அதனூ டாக கச்சேரி நல்லூர் வீதியை அடைந்து அதன் பின்னர் கச்சேரி வீதியை அடைந்து கண்டி வீதி ஊடாக யாழ்ப்பா ணம் நோக்கிச் செல்வது என் றும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் பருத் தித்துறை வீதியூடாக ஆனைப் பந்தி சந்தியைச் சென்றடை ந்து நாவலர் வீதியூடாகச கச் சேரி நல்லூர் வீதியை அடை ந்து பின்னர் முத்திரைச் சந் தியை அடைந்து பருத்தித் துறை வீதியினை அடைந்து செல்வது என்று நடைமுறை அமுல்படுத்தப்படும்.

அன்னதான மடங்கள், தண்ணீர்ப் பந்தல் நடத்து வோர் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித் தும் அறிவித்துள்ளார்.

தாங்கள் பொதுமக்களு க்கு வழங்கும் உணவுப் பதார் த்தங்கள், குடிபானங்கள் சுத்த மானவை என்பதை உறுதிப் படுத்திக் கொள்வது தங்களது தலையாயகடமையாகும் எனவே,

1. தங்கள் வளாகத்திலுள்ள, கிணறுகளை திருவிழா தொட ங்க முன்பு இறைத்து தண் ணீர்த்தாங்கிகளை கழுவி சுத் தம் செய்வதோடு அவற்றிக்கு குறைந்தது வாரந்தோறும் குளோரினேற்றம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

2. உணவு கையாள்வோ ரும் குடிபானங்கள் வழங்கு வோரும் தொற்று நோய்க ளுக்கு ஆளாகாமல் இருப் பதை உறுதிப்படுத்துமுகமாக தற்காலிக மருத்துவ சான்றி தழை யாழ். மாநகர சபை யின் சுகாதார வைத்திய அதி கார பணிமனையில் பெற்றி ருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

3. குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்படும் நீரானது தர மானதாக இருப்பதை உறுதிப் படுத்தும் பொருட்டு தரச் சான்றி தழ் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அல்லது மாநகர சபையால் வழங்கப்படும் குடி நீராக இருத்தல் வேண்டும்.

4. பிளாஸ்ரிக், பொலித் தீன் (லஞ்சீற், ஒருநாள் கப் (Oneday cup), பிளாஸ்ரிக் போத்தல்கள்) பாவனை களை முற்றாக தவிர்த்துக் கொள்ளவும்.


5.கழிவுகள் தரம்பிரிக்கப் பட்டு அப்புறப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். இது தொடர்பில் முறைப்பாடு கள் இருப்பின்பின்வரும்தொலை பேசி இலக்கங்களுடன் தொட ர்பு கொள்ளவும். பொது சுகா தார பொறியியல் பிரிவு, நல் லூர் பொது சுகாதார பரிசோ தகர்- 071 862 8519, சுகா தார வைத்திய அதிகாரி பணி மனை- 021 222 2645

6. தங்களது கழிவு நீரின் தேக்கத்தினால் இலையான், நுளம்பு போன்றவை பெரு காதிருக்க உரிய முறையில் கிடங்குகளில் கழிவுநீரை சேமி த்து குறித்த தவணை இடை வேளைகளில் தகுந்த முறை யில் அப்புறப்படுத்தி சுற்றா டல் சுகாதாரத்தை பேணவும்.

7. எந்த நேரத்திலும் மேற் குறித்த நடைமுறைகள் பேண ப்படாமலோ சுகாதார நடைமு றைகள் பின்பற்றப்படாதவிட த்தோ தங்களது பொது மக்க ளுக்கான சேவை இடை நிறு த்தப்படுவதோடு சட்ட நடவடி க்கையும் எடுக்க நேரிடலாம்.

8. பொதுச் சுகாதார பரி சோதகர்களின் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குதல் வேண் டும் எனயாழ்.மாநகர முதல்வர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# 30 வருடங்களின் பின்னர் வீதிப் புனரமைப்பு



(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை சனசமூக நிலைய வீதி முப்பது ஆண்டு களின் பின்னர் புனரமைப்புச் செய்யப்படுகிறது.

இந்தப் புனரமைப்புப் பணி களை யாழ்.மாநகர சபை மேற்கொண்டுவருகிறது.

வீதி சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலை யில் பல வருடங்கள் மக்க ளின் போக்குவரத்துக்கு தடை யாகக் காணப்பட்ட வடிகால் குழாய்கள் அகற்றப்பட்டு புதிய வடிகால் குழாய்கள் அமைக் கப்பட்டு வருவதுடன் வீதி அபிவிருத்திப் பணியும் நடை பெறுகின்றது.

இவ்வீதியின் அவல நிலை குறித்து வலம்புரி பத்திரிகை கடந்த சில மாதங் களிற்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-105)

# தாயக சர்வதேச உறவுகளின் மேம்பாட்டுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

பீலர் ஞானோதய சங்கத் தின் ஏற்பாட்டில் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத் தலைவிளான் தாயக சர்வ தேச உறவுகளின் கிராம மேம்பாட்டுக்கான ஒன்றுகூ டல் இன்று ஞாயிற்றுக்கி ழமை காலை 9 மணிக்கு (ஈழ கேசரி பொன்னையா வீதி மரு ங்கில்) அண்மையில் விடுவிக் கப்பட்ட மைதானத்தில் சங்கத் தலைவர் த.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினர் களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், யாழ்மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், கௌரவ விருந் தினர்களாக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் விரிவுரை யாளர் ச.விநாயகமூர்த்தி, வலி. வடக்கு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் த.றஜீந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# ஆசிரியர் இடமாற்றம் குறித்து அவசர கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பயிற்றப் பட்ட ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் இடமாற்றம் தொடர் பான அவசர கலந்துரையா டல் நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் முத்தி ரைச்சந்தி சங்கிலியன் சிலை யடியில் இடம்பெறும். (இ-7)




# குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் இரு இளைஞர்கள் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கச்சாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் காற்றுக்கு குளவி கலைந்த தில் இரு இளைஞர்கள் குள விக் கொட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

கச்சாய் வடக்கு கொடி காமத்தைச் சேர்ந்த 23 வயது து.துசிதரன்,கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 25வயது ச.லலித் குமார் ஆகியோரே சாவகச் சேரி ஆதார வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர் (இ-30)

# முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியை வடக்கு மாகாண மக்கள் பாராட்டத் தவறிவிட்டனர்

## இந்நாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கவலை அபிவிருத்திக்காக போராட்டம் நடத்தவும் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

கடந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழு வாகப் போட்டியிட்டு வெற்றி யீட்டிய உறுப்பினர்கள் வட மாகாண ஆளுநர் ரெஜினோ ல்ட் கூரேயை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுண்டுக் குழியில் அமைந்துள்ள ஆளு நர் செயலகத்தில் இந்த சந் திப்பு இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் ஆளுநரைச் சந்தித்த குறித்த உறுப்பினர் கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை, பழைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உள்ளிட்ட சபைகளில் மேற் கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த சபைகளில் நிதிப் பற்றாக்குறை காணப்படுவ தாகவும் இதனால் அப்பிரதேச மக்களுக்கு உரிய சேவை களை வழங்குவதில் தாம தம் ஏற்படுவதாகவும் தெரிவித் தனர். கழிவகற்றல் நடவடி க்கையை மேற்கொள்வதற்கு போதியவாகனவசதிகள்இல்லை எனத் தெரிவித்த உறுப்பினர் கள் அதனைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து தருமாறு ஆளுநரிடம் கேட் டுக்கொண்டனர்.

பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க எதிர் பார்த்திருப்பதாகவும் அதற் கான உதவிகளை மத்திய அரசின் ஊடாக பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரி க்கை விடுத்தனர். இங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர் வடமாகாணத்தில் அரசியல் வாதிகளும் பொது மக்களும் அபிவிருத்திக்காக போராட் டம் நடத்துவது கிடையாது. தென்னிலங்கையில் நீங்கள் பார்த்தீர்களானால் மக்கள் தமக்கு அபிவிருத்தி வேண்டி, கல்வி வசதி வேண்டி, நீர் வசதி வேண்டி, வீதி செப்ப னிட வேண்டும் என வேண்டி பல போராட்டங்களை நடத் துகின்றார்கள். ஆனால் இங்கே யாழ்ப்பாணத்தில் அடை யாளம் வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று மட்டுமே போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநராக எனக்கு முன்னர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி இருந் தார். அவரை இங்கு இருக் கும் போது யாரும் பாராட்டி யது கிடையாது. காரணம் அவர் ஒரு இராணுவ அதிகாரி. ஆனால் நான் இப்போது இங்கு எங்கு சென்றாலும் அவரால் கட்டப்பட்ட கட்டடங் களும் வீதிகளும் பாடசா லைகளும் காணப்படுகின் றன. அவர் இருக்கும்போது அவரை பாராட்ட தவறிவிட் டார்கள். ஒரு வீட்டில் பிள்ளை களுக்கு அம்மாவின் பாசம் நன்றாக தெரியும். அப்பாவின் பாசம் தெரியாது. காரணம் அவர் காலையில் சென்று இரவு தான் வீடு திரும்புவார். அப்பாவின் பாசத்தை அவர்க ளால் புரிந்து கொள்ள முடி யாது. அவர்கள் நல்ல வேலை செய்தது. அவரை பாராட்ட முடியாமல் போனது இப் போது சாந்தியும் சமாதான மும் நிலவுகின்றது. ஜனநாய கம் வளர்ந்திருக்கின்றது ஜனநாயகம் கிடைத்திருக் கின்றது. ஆனால் அபிவிருத் திப்பணிகள் குறைவாக இருக் கின்றன.



நீங்கள் ஒரு நிமிடத்தில் அளிக்கும் வாக்கு அவர்க ளுக்கு ஐந்து வருடத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. நீங் கள் வாக்களித்துவிட்டு வீட்டி லேயே சும்மா இருக்கின்றீர் கள். அவர்கள் வாக்கினை பெற்றுக் கொண்டு சும்மா இருக்கின்றார்கள். ஐந்து வரு டங்கள் சும்மா இருக்கிறார் கள். இந்த ஜனநாயக நாட்டில் மக்கள் தங்கள் அபிவிருத் தியை அடைவதற்காக எந்த நேரமும் முயற்சி எடுக்க வேண்டும், போராட்டங்கள் நடத்தவேண்டும் என்றும் ஆளுநர் கூரே அறிவுரை கூறினார். (இ-60)

# யாழில் கடலுணவு பற்றாக்குறை விலையும் திடீரென அதிகரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடல் உணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. குறிப்பாக இறால் ஒரு கிலோ 1000 ரூபா முதல் 1500 ரூபா வரையிலும் கணவாய் ஒரு கிலோ 1500 ரூபாவிலும் விற் பனை செய்யப்படுகிறது.

இதேவேளை மீன் விலை யும் ஒரு கிலோ 500 ரூபாய் க்கு மேல் உயர்ந்துள்ளது. குறிப்பாக பாசையூர், குருநகர் பகுதிகளில் விலையேற்ற மும் மீன்களுக்குத் தட்டுப் பாடும் நிலவுகின்றது.

மீன்கள் கடலில் பிடிப்பவை குறைவாக காணப்படுவதா லும் பிற நாடுகளிலிருந்து வரு வோர் மீன்பிடியில் ஈடுபடுவ தாலும் கடலுணவுகள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. (இ-105)

# விசேட பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

மடு திருவிழாற்கான விசேட பேருந்து சேவை நாளை மறுதினம் 14 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பேருந்து நிலை யங்களிலிருந்து பயணிகள் வருகைக்கேற்ப மேலதிக பேருந்துகள் விசேட சேவையில் ஈடுபடும் என இ.போ.ச. வடக்கு சாலை முகாமையாளர் அறிவித் துள்ளார். (இ)

## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு பூராட நட்சத்திரம் 7இல் செவ்வாய் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. சொந்த நிறுவன உரிமையாளர்(துபாய்).

**தொ.இல: 077 026 9992**

(5321)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் பட்டப்படிப்பை முடித்து தற்போது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் BUSINESS DEVELOPMENT MANAGER ஆக பணிபுரியும் 1985, கார்த்திகை 3 ஆம் பாதம், ரிஷப ராசி, பாவம் 43 1/2, 12 இல் செவ்வாய், உயரம் 173 செ.மீ., நற்பண்பும், நல்ல தோற்றமும் உடைய எமது ஒரே மகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் நாம் எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்பு:- 077 103 3347**

(5296)

## மணமகள் தேவை

ஆண்:- (காரைநகர்) 23.8.1984 1.17 am
திருவாதிரை:-2 ஆம் பாதம்
செவ்வாய்:-7இல் ,பாவம்:- 51
வேலை:-சொந்தக்கடை

தொடர்பு:- சூரியன் திருமணசேவை
இல-561-K.K.S. வீதி
மனோகராசந்தி,யாழ்ப்பாணம்.

(5326)


## தீபாராதனை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேட ஸ்நபன அபிஷேகம் மற்றும் விசேட தீபாராதனை எதிர் வரும் 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் மகேஸ்வர பூஜையும் இடம் பெறவுள்ளன.(இ-7)

## ஈழத்துச் சிதம்பரத்துறை சௌந்தராம்பிகையின் தேரோட்டத்தன்று திண்ணபுர அந்தாதியை ஓதி திருவருளைப் பெறுவோமாக



**சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரையெல்லாம்**
**வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்**
**அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்**
**சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.**

**அபிராமி அந்தாதி 8**

சுந்தரப் பேரழகி என் அபிராமி! என் அப்பன் சிவனின் துணைவி. என் அகப் பற்றையும் புறப்பற்றையும் போக்கிடும் செந்தூரத் திருமேனி கொண்டவள். மகிடாசுரனின் தலைமேல் நின்று அவனை அழித்தவள். அந்தரியென்றும் நீல நிறமுடைய காளியாகவும், நித்தியக் கன்னியாகவும், பிரம்ம கபாலத்தைக் கையில் ஏந்தியவளாகவும் திகழும் அந்த அம்பிகையாளின் திருமலர்ப் பாதங்களையே நான் தினமும் தியானிக்கிறேன்.

8ஆவது அபிராமி அந்தாதியின் திருப்பாட்டின் அமைய திண்ணபுர அந்தாதியிலும் 3வது அந்தாதி மூலம் ஆற்றாமை கூறிப்பணிதல்

**பாலந் தரியினை வைத்த வநாதி பகவன்திரி**
**சூலந் தரித்தவன் திண்ணபுரப்பதி துன்னிநிதம்**
**மேலந் தரித்திரி தந்தோன் எனக்கிந்த மெய்முழுதும்**
**கோலந் தரிசிக்க வாசவன் போற்கண் கொடுத்திலனே.**

**திண்ணபுர அந்தாதி 3**

ஆதியில்லாதவனும் முழுமுதற் கடவுளும் தன் திருமேனியின் ஒரு பாகத்தில் உமையம்மையை வைத்தவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திண்ணபுரம் என்னும் திருத்தலத்தினை அடைந்து நாடோறும் தரிசித்து வழிபடுமாறு மேற்படி மூன்றாவது அந்தாதியில் குறிப்பிடுகிறார். பதின்மூன்றாவது அந்தாதியில் திண்ணபுரத்து ஈசன் திருப்பெயரை அன்பினோடு ஓதுவோர் பெருமையை உலகத்தின் யாரும் உணர முடியாது. நாமும் திண்ணபுரத்தான் திருநாமத்தையும் திருவைந்தெழுத்தையும் ஓதி ஓதி பேரின்பம் பெற்று அவ்வின்பம் காண்பதுடன் உலகினர்க்கும் ஆற்றுப்படுத்துவோம். திண்ணபுரச் சிவனை வழிபடுவோரை எம்பெருமானை வில்வார்ச்சனையால் அவரை உகக்குமாறு செய்வோரைப் பொன்னுலகுக்குச் சென்று இன்புறுமாறு செய்தருள்வான் என்று 16வது அந்தாதியில் கூறுகிறார். இறுதிக் காலத்தில் இடபாரூடராக வந்து திருக்காட்சி தந்தருள வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

நமன் வரும்போது நற்காட்சி தந்து "எம்பெருமானே வந்து கொண்டருளே" என 26வது அந்தாதியில் வேண்டுகிறார். திண்ணபுரத்துப் பிரான் திருநடனக்கோலம் கண்டவர்க்கு மறுபிறவி இல்லையென புலவர் 41வது அந்தாதியில் பாடுகிறார். தாயும் தந்தையும் நீயே என்று தஞ்சம் புகுந்த புலவர் மறுபிறவி எய்தாமல் தம்மைக் காத்தருள வேண்டுகிறார்.

சத்திரங்களும் (மடங்களும்) கூடங்களும் நிறைந்த பூதி திண்ணபுரம் என்பதால் கொடைவளமும் பெருஞ்செல்வமும் மிக்க மக்கள் வாழும் பதி என 63வது அந்தாதியில் உணர்த்துகிறார். தெய்வ உலகத்துத் தருவையும் தன் அரிய ஒளியால் தடை செய்யும் திண்ணபுரத் தலத்துத் திருக்கோயில், மருவிய அருமை உடைய சோதியும் ஆகிய சிவபிரானைப் போற்றினால் பாசமாகிய வலை அறும். நமன் தண்டனைக்குத் தப்பவேண்டுமாயின், திண்ணபுரத் திருப்பதிக்குச் சென்று தொடர்ந்து நல்ல தவம் புரிவீர் என்று புலவர் அறிவுறுத்துகிறார்.

தேவர் உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் பொருந்தி மிகவும் களித்து வந்து அணைந்து தொழுகின்ற திண்ணபுரத்தலத்து அமர்ந்த சிவபிரானே, சிறுமை உடைய எமையும் காத்து அருள்புரிய உன் திருவடியினையைப் பணிந்து வேண்டுகிறோம்.

மறைந்த தத்துவ கலாநிதி சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களைப் பணிந்து ஈழத்துச் சிதம்பரத்தின் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசுவரப் பெருமான் எம்மையும் ஈடுபடுத்தி ஆட்கொண்டு அருளியமையை எம்பெருமான் பாதமலர்களை வாழ்த்தி வணங்கி ஓம் நமசிவாய என ஓதி இறைஞ்சுகிறேன்.

**ஈழத்துச் சிதம்பரம் சிவதொண்டன்**
**க.கு.க. சிவபாலன்**

(சி-3464)


## YICSD COLLEGE

YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**4500/= -30,000/= வரையிலான கட்டணக்கழிவு**



### அழகுக்கலை

*# Diploma in Beauty Culture & Hairdressing*
*# Higher Diploma in Beauty Culture & Hairdressing*

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am
கிழமை நாள் 20/08/2018 அன்று 11.30 am & 02.00 pm



### கேக் ஐசிங்

*# Certificate in Cake Making & Decorating*
*# Diploma in Cake Making & Decorating*
*# Higher Diploma in Cake Making & Decorating*

கிழமை நாள் 16/08/2018 அன்று 09.30 am & 02.00 pm
சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 09.00 am & 02.00 pm



### தையல்

*# Certificate in Saree Blouse*
*# Diploma in Dress Making (Tailoring)*
*# Higher Diploma in Dress Making (Tailoring)*

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am & 02.00 pm
கிழமை நாள் 20/08/2018 அன்று 09.00 am

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்

**இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(கண்ணாசிட்டி சந்தி Rolex வேதுப்பகத்திற்கும் இடையில்)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:38
c auk; 5'6"
தகைமை/தொழில்:HNDA/ அரசதொழில்
தொ.இ: B/143

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 7
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/சாரதி
தொ.இ: B/146

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 66 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: B/149

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 30
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/வியாபாரம்
தொ.இ: B/158

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 49
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA, AIB/வங்கி உதவி முகாமையாளர்
தொ.இ: G/212

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/222

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 68 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/278

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 9 சூரி செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/282

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியான முறையில் இல்லை

## சரத்பொன்சேகா சாடல்



(கொழும்பு)

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு தற்போது சரியான முறையில் செயற்படுவதில்லை என்று பிரதேச அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை களனி பிரதேசத்தில் வைத்து ஊடகங்களிடம் பேசும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை தன்னுடன் அரசியல் செய்வது ரை, கோர்ட் காரர்கள் அல்ல என்றும் என்னுடன் வருவோர் மீது சேறு பூசப்படுவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் எதிராகச் செயற்பட்ட போதிலும் இதுபோன்றவை இடம் பெறவில்லை என்றும் வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# உங்கள் ஒரு நாள் செலவை அம்பலப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதிக்கு முன்னாள் முதலமைச்சர் சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஒருநாள் செலவை அம்பலப்படுத்த வேண்டுமென வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் இணைப்புக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

94 ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு மக்கள் சேவைக்கு தம்மை அர்ப்பணிக்கப் போவதாக தேர்தல் மேடைகளில் வாக்குறுதி அளித்த நாட்டின் தலைவர் தற்பொழுது குண்டூசி முதல் விமானம் வரையில் பல்வேறு விடயங்களுக்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து கொள்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செலவுகள் குறித்து மைத்திரி ஊடக சந்திப்புக்களில் சுட்டிக்காட்டியதனை மறந்து விட்டார் போலும்.

மைத்திரிபால சிறிசேன தனது அன்றாடச் செலவுகள் பற்றிய விபரங்களை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 40 வீதமானவர்களின் ஒருநாள் வருமானம் 800 ரூபா என அண்மை யில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான ஓர் நிலையில் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருமானத்தை 25 வீதத்தினால் உயர்த்துவது நீதியானதல்ல.

மக்களில் பலர் மூன்று வேளையும் உணவு உட்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட போது அளித்த வாக்குறுதிகள் தற்பொழுது புதைகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்தி காட்ட வேண்டும் அவ்வாறு நடத்தினால் மகிந்த யுகம் மீது மக்கள் கொண்டுள்ள விருப்பம் தெளிவாகப் புலப்படும் என எஸ்.எம்.ரஞ்சித் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைக்கு மீண்டும் வருகிறது அமெரிக்காவின் அமைதிப் படையணி

(கொழும்பு)

அமைதிப் படையணி செயற்றிட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டில், இலங்கையும் அமெரிக்காவும் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளன.

இலங்கை கல்வி அமைச்சில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அமைதிபடையணி செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவில் இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளதாக, இலங்கைக்கான பதில் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார்.

இது புதிய உடன்பாடு இல்லை என்றும் புதுப்பிக்கப்பட்ட உடன்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், பொருளாதார வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில், இளைஞர்களுக்கு ஆங்கில மொழி கல்வி மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைதிப் படையணியின் 25 பேர் கொண்ட முதலாவது குழு 2019 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கை வரவுள்ளது.

இலங்கையின் 1962ஆம் ஆண்டு தொடக்கம், 1998 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் அமைதிப் படையணியைச் சேர்ந்த 370 தொண்டர்கள், கல்வி, சுகாதாரம், இளைஞர் அபிவிருத்தி போன்ற துறைகளில் பணியாற்றினர்.

1998ஆம் ஆண்டு இந்த செயற்றிட்டம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் கதிரியக்க கனிமங்கள்

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பெறுமதியான கதிரியக்க கனிமங்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கான புவியியல் தரவு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கமைய கதிரியக்க கனிமங்கள் உள்ள பிரதேசங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்கள் தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் சிரேஷ்ட இயக்குநர் உதய டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பேருவளை, களுத்துறை, எல்பிட்டிய, மாத்தளை, தம்புள்ளை, பல்லேகல, ஹங்குராங்கெத்த, கண்டி, பல்முடுவ போன்ற பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு புல்மோட்டை, மாத்தளை, களுத்துறை, பேருவளை, எல்பிட்டிய, பல்லேகம, தம்புள்ளை ஆகிய பிரதேசங்களில் மிகவும் பெறுமதியான கதிரியக்க கனிமங்கள் கிடைத்துள்ளன.

நாடு முழுவதும் 21 கனிம வளங்கள் தொடர்பில் வரைப்படம் தயாரிப்பதற்கு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கதிரியக்க கனிய எல்லை தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டு, அதன் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகளை பெற்றுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட இயக்குநர் உதய டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆட்டோவில் பயணிகளை ஏற்றும் சாரதிகளுக்கு விசேட சட்டம் அமுல்

(கொழும்பு)

பய்ணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்டோ சாரதிகளின் வயதெல்லை 35 இற்கும் 70 இற்கும் இடைப்பட்டதாக காணப்படல் வேண்டும் என போக்குவரத்து அமைச்சு வரையறை செய்துள்ளது.

இலக்கம் 2081/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இந்த சட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

குறித்த நபர் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், குறைந்த பட்சம் 2 வருட ஓட்டும் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தகைமைகளை முழுமைப்படுத்தியவர்கள் வைத்திய பரிசோதனை அறிக்கை மற்றும் இலங்கையில் புதிவு செய்யப்பட்ட குற்றவாளியாக இல்லையென்ற பொலிஸ் அறிக்கை என்பவற்றுடன் 2 ஆயிரம் ரூபாய் கட்டணத்துடன் ஆட்டோ பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான விசேட அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

உரிய தகைமை பெற்ற விண்ணப்பதாரி தனது விண்ணப்படிவத்தை மேற்படி ஆவணங்களுடன் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதன் பின்னரே, பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான ஆட்டோ விசேட அனுமதிப்பத்திரம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்படும் எனவும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விசேட அனுமதிப் பத்திரம் இல்லாமல் ஆட்டோவில பயணிகளை ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து கூட்டு எதிரணியினர் விசேட சந்திப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு வழங்கப்படாமை தொடர்பில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விசேட சந்திப்பொன்றை ஒன்றிணைந்த எதிர்க்கட்சித் தரப்பு நடத்தவுள்ளது. பிவித்துருஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த தினத்தில் எதிர்க் கட்சித் தலைமைப் பொறுப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொளளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை மாற்ற சம்பிரதாய ரீதியாகவும் யாப்பு ரீதியாகவும் தமக்கு இயலுமை இல்லையென சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் ஆய்வுக் கப்பல்



(கொழும்பு)

சீனக் கடற்படையின் சமுத்திரவியல் ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கைக்கு நான்கு நாட்கள் பயணம் மேற்கொண்டு, கடந்த 9 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

சீன மக்கள் விடுதலை இராணுவக் கடற்படையின் 'Qian Weichang' என்ற பெயருடைய இந்தக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறையில் வரவேற்பு அளித்தனர்.

129 மீற்றர் 17 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலில்158 மாலுமிகள் உள்ளனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 60 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 180 | 240 | 200 |
| தக்காளி | 80 | 90 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 80 | 160 | 160 |
| கரட் | 200 | 350 | 180 | 400 | 400 |
| பூசணி | 100 | 80 | 60 | 100 | 100 |
| புடோல் | 60 | 70 | 50 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 180 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 240 | 200 | 120 | 240 | 250 |
| லீக்ஸ் | 150 | 100 | 95 | 120 | 150 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 50 | 80 | 20 |
| போஞ்சி | 300 | 200 | 180 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 60 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 160 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 80 | 200 | — |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 80 | — |
| பொன்னாங்காணி | 40 | 30 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 120 | 60 | 40 |

# நீதிமன்றக் கோட்பாடுகளுக்கமைய அனைவரும் சுயாதீனமான முறையில் சேவையாற்ற வேண்டும்



## பிரதம நீதியரசர் டெப் அறிவுறுத்து

(இரத்தினபுரி)

**நீதிமன்றங்களில் சேவையாற்றும் அனைவரும் நீதிமன்ற கோட்பாடுகளுக்கமைய சுயாதீனமான முறையில் சேவையாற்ற வேண்டும் என பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அறிவுறுத்தியுள்ளார்.**

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஊடாக இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் மக்களின் நலன் கருதி தாமதப்படுத்தாமல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன், வழக்குகள் சுயாதீனமான முறையில் நடத்தப்பட வேண்டும்.

மேலும், நாட்டில் சகல நீதிமன்ற கட்டடத்தொகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிரியாவில் தொடரும் அவலம்

# அரச படைகள் உக்கிரத் தாக்குதல் அப்பாவி பொதுமக்கள் 30 பேர் பலி!



(பெய்ரூட்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 30 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. அரசுப் படைகளுக்கு ஆதரவாக ரஷ்ய விமானப்படையும் தொடர்ந்து வான் தாக்குதல் நடத்தி வருகிறது.

சிரியாவின் வடமேற்கில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அரசுப் படைகள் அண்மைக்காலமாக உக்கிரமான தாக்குதலை நடத்தி வருகின்றன.

இட்லிப் மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் கடந்த வியாழக்கிழமை ரொக்கெட் வெடிகுண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினமும் சற்று கிழக்கை நோக்கி முன்னேறி சென்று வெடிகுண்டுகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அலெப்போவிற்கு அருகில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் பொதுமக்கள் சுமார் 30 பேர் பலியானதாக சிரியாவுக்கான மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இட்லிப் மாகாணம் தான் தனது அடுத்த இலக்கு என ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்த உக்கிரமான தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொல்லால் தாக்கி சகோதரனை கொலை செய்தவர் கைதானார்

(கொழும்பு)

வரகாபொல, பதுவத்தை பிரதேசத்தில் பொல்லால் தாக்கி நேற்றுக்காலை ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொல்லால் தலைக்கு தாக்குதல் நடத்தப்பட்டதில் படுகாயமடைந்த நபர் வரகாபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் சகோதரரே தாக்குதல் நடத்தியுள்ளதுடன், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். தோலங்கமுவ, புருன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

வரகாபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## மஹாநாம, திஸாநாயக்க மீண்டும் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி பேராசிரியர் ஐ.கே. மஹாநாம மற்றும் அரசமரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ.திஸாநாயக்க ஆகியோர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இரண்டு கோடி ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்ட போது இந்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பீடை நாசினி உற்பத்திக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பீடை நாசினிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தொடரப்படவுள்ளது. ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பேராசிரியர் சன்ன ஜெயசுமன இதனைத் தெரிவித்துள்ளார். கிளைபோசேட் அடங்கிய இரசாயன பீடை மருந்து பாவனை காரணமாக தமக்கு புற்று நோய் ஏற்பட்டதாக அமெரிக்கர் ஒருவர் தாக்கல் செய்துள்ள வழக்கொன்றுக்கு அமெரிக்க நீதிமன்றம் சாதகமான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.


வழக்கை தாக்கல் செய்தவரின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டுள்ள கலிபோர்னிய பிராந்தியத்திலுள்ள நீதிமன்றம், சம்பந்தப்பட்ட கிளைபோசேட் உற்பத்தி நிறுவனத்தினால், பாதிக்கப்பட்டவருக்கு 289 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக செலுத்துமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. இந்த தீர்ப்பு குறித்து தனது கருத்தை தெரிவிக்கின்ற போதே ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட பேராசிரியர் சன்ன ஜெயசுமன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அறிவித்தல்

**வலி.தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**

வட்டாரம்:- 09
ஆதன இலக்கம்:-177/12 (புதிய பதிவு)
பிப்பிலி (டச்சு) வீதி

வட்டாரம் 09 பிப்பிலி (டச்சு) வீதி, ஆதன இலக்கம் 177/12 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலி காமம் தென்மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில் பற்று நவாலி இறை "அட்டகிரியும் கயட்டையாவளவுக்கு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 15 குளி 10 கொண்ட இவ்வாதனமானது யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரி தெட்சணாமூர்த்தியும் செல்லையா தெட்சணா மூர்த்தியும் ஆகிய இவர்களால் நன்கொடை உறுதி மூலம் நவாலி வடக்கு புலவர் வீதியைச் சேர்ந்த மாலதி யோகானந்தன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு K.M.இராதாக்கிருஷ்ணன் முகதாவில் நிறைவேறிய 1010 ஆம் இலக்க 12.06.2014 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதி வேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு K.கனகசபாபதி அவர்களால் வரையப்பட்ட 17ஆம் இலக்க 1980.12.24 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "அட்டகிரியும் கயட்டைவளவு" நிலப்பரப்பு 15 குளி 10.1 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து மாலதி யோகானந்தன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.




**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு**
**பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(5323)

மகாதேவ ஆச்சிரமம்
Regd.No.HA/04/KL02 of 25.11.1980
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
தொ.இல:021 324 3443,
077 459 4283, 077 431 9281
இலங்கை வங்கி S/AC.82791221
கிளிநொச்சி.

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ
சுவாமிகள்
சமாதித் திருக்கோயில் திருப்பணி.




மெய்யன்பர்களே!
சற்குருநாதனின் சமாதித்திருக்கோயில் 25ஆனி 2018 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றது.சற்குருநாதனின் முதலாம் ஆண்டு குருபூசைக்கு முன்னர் கும்பாபிஷேக நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளோம். நிதிவளம் போதாமையால் தங்கள் வசம் நிதிப் பங்களிப்பை நாடியுள்ளோம். த்ங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை, இலங்கை வங்கி ஊடாக அல்லது நேரில் செலுத்தி சற்குருநாதன் திருப்பணியை நிறைவு செய்வீர்களாக.

குருபாதம் பணிந்து குறைகளை போக்குவோம்.

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்,
நிர்வாக உறுப்பினர்கள்.

(சி-3364)

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது ...

## இலங்கையை ஏனைய நாடுகளில் பிரபல்யப்படுத்தவும் புதிய தூதுவர்களிடம் ஜனாதிபதி விசேட வேண்டுகோள்



(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் இலங்கையை ஏனைய நாடுகளில் பிரபல்யப்படுத்தும் வகையில் செயற்படுவதோடு முதலீடு, வர்த்தகம், தொழில்நுட்ப உதவிகள், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.


பத்து நாடுகளுக்கான தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் புதிதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டனர். புதிய தூதுவர்களுக்கு நியமனத்தை வழங்கிவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக பதவியேற்றுள்ள தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் எமது நாட்டை ஏனைய நாடுகளிடம் பிரபல்யப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

சர்வதேச ரீதியாக உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினைப் பெறத்தக்க வகையில் சர்வதேசத்துடனான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

விசேடமாக ஏற்றுமதி தொடர்பிலும், அதனை அதிகரிக்கும் வழிமுறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி மஹோற்சவம் நாளை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 13ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாட்களுக்கு வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7-105)

### பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து

## இலங்கை இராணுவத் தளபதியுடன் பாக்.இராணுவ அதிகாரிகள் சந்திப்பு



(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கு வந்த மேஜர் ஜெனரல் றெகான் அப்துல் பாகி, கேணர் ஓமர் நசிர், கேணல் ஜாவிட் அலி மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் குழு, இலங்கை இராணுவத்தின் கவசப்படைப்பிரிவு தலைமையகம், மற்றும் கலத்தெவ, கொக்காவில், திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள கவசப்படைப் பிரிவு பயிற்சி பாடசாலை, ஆகியவற்றுக்கும் சென்றிருந்தது.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கை - பாகிஸ்தான் இராணுவங்களுக்கு இடையிலான, பாதுகாப்பு பேச்சுக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்தே, இந்தப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-7)

## இலங்கையில் இனக் கலவரங்கள் மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ளது

### ஆய்வாளர் லபீர் எச்சரிக்கை

(அக்குறணை)

கண்டி திகன கலவரம் இடம் பெற்று நான்கு மாதங்கள் மாத்திரம் கழிந்துள்ள நிலையில் மீண்டும் இலங்கையில் இவ்வாறான இனக் கலவரங்கள் மற்றும் தாக்குதல் முயற்சிகள் என்பன இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இன்னும் காணப்படுவதாக திகன அனர்த்த சேவைகள் நிலையத் தலைவரும், பிரபல சமூக ஆய்வாளருமான கலாநிதி எம். லபீர் சுபைர் தெரிவித்துள்ளார்.

அக்குறணை நியுஸ் வீவ் ஊடகக் கல்லூரியில் பகுதிநேர ஊடக டிப்ளோமா பாடநெறியைத் தொடரும் மாணவர்களுடனான சந்திப்பொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு, திகன கலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## பண்ணிசைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி சிவஞான பிள்ளையார் கோவில் மஹோற்சவம் மற்றும் சங்குவேலி இந்து அறநெறிப்பாடசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பிரதேச மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்போட்டியானது எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சங்குவேலி விநாயகர் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-7)

## காட்டுத்தீயால் 40ஏக்கர் தீக்கிரை



(கொழும்பு)

ஹபரண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வனாந்தர பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீப்பரவலினால் 40 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக ஹபரண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீப்பரவலை தீயணைப்பு படையினர். பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் அல்லது சொத்துச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ஜப்பானிய அரசின் உயர்மட்டக் குழுவினர் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஆய்வு



(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.


இந்தக் குழுவினரை அம்பாந்தோட்டை துறைமுகத்தை முகாமைத்துவம் செய்யும், அம்பாந்தோட்டை அனைத்துலக துறைமுக குழும அதிகாரிகள் வரவேற்றனர்.

ஜப்பானிய கடற்படைக் கப்பலான, அகிபோனோ கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு மேற்கொண்ட பயணத்தின் தொடர்ச்சியாகவே ஜப்பானிய குழு இந்தப் பயணத்தை மேற்கொண்டது.

ஜப்பானிய குழுவினர், அம்பாந்தோட்டை அனைத்துலக துறைமுக குழுமத்தின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்ததுடன், துறைமுகம் குறித்த விரிவான ஆய்விலும் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சுக்கள் பல மணிநேரம் நீடித்ததாக கூறப்படுகிறது.

ஜப்பானிய குழுவில், கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகத்தைச் சேர்ந்த கப்டன் அட்சுஹிரோ மோரோ, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் தென்மேற்கு ஆசிய பிரிவுக்கான பணிப்பாளர் ஷோகோ யொஷிடேகி, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு அதிகாரி யுசுகி ரனாகா, ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, அட்சுகி சுஜிஹாரா, ஜப்பானிய கடலோரக் காவல் படையைச் சேர்ந்த ரோரு கொடமா ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். (இ-7)



வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது...
(படங்கள்:- கண்டாவளைச் செய்தியாளர்)

## 50 வீடுகள் அமையப்பெறும் வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் எல்லைக்கிராமமான கல் நாட்டினகுளத்தில் மீள்குடியேறும் 50 குடும்பங்களுக் கான வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது. 1977, 1983, 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களின் போது இந்தக்கிராமத்திலி ருந்து மக்கள் முற்றாக வெளி



யேறியிருந்தார்கள்.

இந் நிலையில் இவர் களை மீள்குடியேற்றும் முக் மாக வடக்கு மாகாண முன் னாள் சுகாதார அமைச்ச ரும் மாகாண சபை உறுப்பி



னருமாகிய மருத்துவர் ப.சத் தியலிங்கத்தினால் தேசிய வீடமைப்பு அதிகார சபை யின் நிதியுதவியுடன் 50 வீடுகள் அமைக்கும் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அதி கார சபையின் வவுனியா மாவட்டத்திற்கான 43 ஆவது வீட்டுத்திட்டம் இதுவாகும். இவ்வருட இறுதிக்குள் 100 வீட்டுத்திட்டங்களை முடிப்ப தற்கான நடவடிக்கைகள் அதிகார சபையினரால் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. கல்நாட்டினகுளம் மருத நிலம் இயற்கைச் சுற்றுலா மையத் தில் நடைபெற்ற கூட்டத்தை தொடர்ந்து சம்பிரதாயபூர்வ மாக மூன்று வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிவைக்கப் பட்டது. (2-281)

## கொக்கிளாய் கனியமணல் அகழ்வு தொடர்பில் விசேட கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

கொக்கிளாய்கனிய மணல் அகழ்வு தொடர்பில் விசேட கல ந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது சுற்றுச் சூழலுக்கு பதிப்பு ஏற்படக்கூடாது. வேலை வாய்ப்பு வழங்கும்போது மாகாண விகிதாசார அடிப்ப டையில் வழங்க வேண்டும். வருமானம் தனிய திறைசே ரிக்கு மட்டும் செல்லாது மாகா ணத்துக்கு ஒருபகுதி வருமா னம்வழங்க வேண்டுமென தீர மானம் மேற்கொள்ளப்பட்டது

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத் தின் கொக்கிளாய் பகுதியில் கனிய மணல் அகழ்வது தொடர்பில் பல இடங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு இறுதி யாக கடந்த மாவட்ட அபிவி ருத்தி குழு கூட்டத்துக்கு முன்னதாக விசேடமாக வட க்கு மாகாண முதலமைச் சர், அமைச்சர் றிசாத் பதியு தீன், மாவட்ட அரச அதிபர் மற்றும் அரசியல் வாதிகள் அதிகாரிகள் தலை மையில் கூட்டமொன்று நடை பெற்றது. இதன்போது இந்த விடயம் தொடர்பில் ஆராய குழு ஒன்று அமைப்பதாக தீர்மானிக் கப்பட்டு அமைக்கப்பட்ட குழு நேற்று முன்தினம் கூடி இந்த விடயங்களை ஆராய்ந்தது.

இந்தக் கலந்துரையாட லில் மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் மற்றும் இல ங்கை கனியமணல் லிமிற்றட் நிறுவன தலைவர் திருமதி இந்திக்க ரணதுங்க மற்றும் பிரதி பொது முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற் றும்வடக்கு மாகாண விவசாய மீன்பிடி சுற்றுச்சூழல் அமைச் சர் க.சிவநேசன் வடக்கு மாகாண உறுப்பினர் பொ.ஜங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்ப ற்று பிரதேச சபை தவிசாளர், கொக்கிளாய் உறுப்பினர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர் கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக பேராசிரியர் உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டு இந்த கனிய மணல் அகழ்வு தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது தீர்மான மாக சுற்றுச் சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பது உறுதிப்படுத்தவேண்டும் என பலராலும் கோரப்பட் டது இதற்க்கு இந்த திட்ட த்தை ஆய்வு செய்யும் அறி க்கை மேலதிகமாக தங்க ளால் தரப்படுகின்ற யாழ்ப் பாண பல்கலைக்கழக கண் காணிப்பு பேராசிரியர்கள் ஆய்வாளர்களிடம் ஒப்படைக் கப்பட்டு அது சரியானது என உறுதிப்படுத்த வேண்டும். அதனைவிட இந்த செயற் றிட்டம் முழுவதும் இந்த பணியையும் ஒரு குழு அமை த்து அக் குழு கண்காணிக் கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டு ஏற்றுக்கொள்ள ப்பட்டது.

அடுத்ததாக இதனுடைய வேலைவாய்ப்புக்கள் மாகாண விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென கோரப்பட்டது. இதன்போது வடக்குமாகாண சபை உறுப் பினர் து.ரவிகரன் இப் போது இருக்கின்ற திருகோண மலை புல்மோட்டை தொழிற் சாலை ஊழியர் விபரத்தை கோரினார். இதன்போது 20 தமிழர்கள் மற்றும் 248 சிங்களவர்கள் 290 முஸ் லிம்கள் வேலை செய்வதாக தெரிவித்தனர். இதன் பின் னர் இவ்வாறு எமது மாவட் டத்தில் நடக்கக் கூடாது எனக் கோரப்பட்டது.

இதனை விட வருமா னம் மாகாண சபைக்கும் பகிரந்தளிக்க வேண்டும். எமது பிரதேச மக்களுக்கு பயனுள்ளவகையிலும் சுற்று சூழல் பாதிப்பு அற்ற வகையி லும் நடக்க வேண்டும் என வும் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுற்று சூழல் தொடர்பான அறிக்கையின் பின்னர் இது தொடர்பாக கலந்துரையா டுவது என தீர்மானிக்கப் பட்டது. (2-281)

### மன்னாரில் சட்டத்தரணிகள் ஊடாக

## நீதிமன்றில் நகர்த்தல் பிரேரணைத்தாக்கல்; செய்தி சேகரிக்க தளர்த்தப்பட்டது தடை

(மன்னார்)

மன்னார் மனித புதை குழி அகழ்வுப் பணிகளின் போது ஊடகவியலாளர்கள் அங்கு சென்று புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய் தல் தடை செய்யப்பட்டுள் ளதாக மன்னார் நீதிமன்றத் தினால் கட்டளை பிறப்பிக் கப்பட்டிருந்த நிலையில் மன்னார் ஊடகவியலாளர் கள் இருவர் நேற்று முன்தி னம் வெள்ளிக்கிழமை மன் னார் நீதிமன்றத்தில் சட்டத் தரணிகள் ஊடாக நகர்தல் பிரேரணையைத் தாக்கல் செய்திருந்தனர்.

மன்னார் நீதவான் நீதிம ன்றத்தின் ட 232/2018 கொண்ட வழக்குடன் சம்ப ந்தப்பட்ட அகழ்வு மேற்கொ ள்ளும் பூமியில் உட்பிர வேசித்தல், புகைப்படம் எடுத் தல் மற்றும் ஒளிப்பதிவு செய் தல் தடை செய்யப்பட்டுள் ளதாக மன்னார் நீதிமன்ற த்தினால் கடந்த 7 ஆம் திகதி கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

அதற்கான அறிவித்தல் குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் வளாகப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவிய லாளர்கள் இருவர் சிரேஷ்ட சட்டத்தரணி பா.டெனீஸ் வரன் ஊடாக நேற்று வெள் ளிக்கிழமை மன்னார் நீதிம ன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, நகர் த்தல் பிரேரணை தாக்கல் செய்தனர்.

இவ்விடயம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பா.டெனீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட ஊடக வியலாளர்கள் சார்பாக தாக் கல் செய்யப்பட்ட நகர்தல் விண்ணப்பத்தை மன்னார் நீதவான் ரீ.ஜே.பிரபாகரன் ஏற்றுக்கொண்டிருந்தார்.

சட்டத்தரணி பா.டெனீஸ் வரன் தலைமையில் சட்டத் தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிறாய் வா, ஜெபநேசன் லோகு, செல்வராசா டினே சன் ஆகியோர் ஊடகவிய லாளர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது குறித்த கட்ட ளையில் தவறுதலான விட யம் இடம்பெற்றுள்ளதை சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டி இருந்தனர்.

அதற்கு அமைவாக நீத வான் குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் பகுதியில் காலையும் மாலை யும் ஊடகவியலாளர்கள் செல்லலாம் என்றும் ஊடக வியலாளர்கள் எந்தவித இடையூறுகள் இன்றி செய்தி சேகரிப்பது அவர்களுடைய உரிமை என்பதை உறுதிப் படுத்தியுள்ளார்.

குறித்த மனித எலும்புக் கூடுகள் அகழ்வு இடம்பெறும் இடத்திற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியின் அனு மதியுடன் பதிவு செய்யப் பட்ட, அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த பகுதிக்குச் சென்று தமது கட மையைச் செய்ய முடியும் என்று மன்று கட்டளை பிறப் பித்துள்ளது என சட்டத் தரணி பா.டெனீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (2)

## தமிழர்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர்

### சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழர்கள் அபிவிருத் திக்கு என்றும் எதிரானவர் கள் அல்லர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரி வித்துள்ளார்.

பிரமந்தனாறு வட்டார தமிழரசுக்கட்சியின் மூலக் கிளைத் தெரிவில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் தம்மைத் தாமே இந்த மண்ணிலே ஆளவேண்டும் என்பதற் காக நாம் 70 ஆண்டு காலமாக போராடி வருகி றோம். அண்மையில் முன் னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாயராஜபக்ஷ தமி ழர் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்காகத்தான் போராடினார்கள். பொரு ளாதார ரீதியான பிரச்சினை கள் தீர்க்கப்படுமானால் அவர்கள் போராடமாட்டார் கள் என்றும் தமிழ்த்தலை மைகள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் என்றும் கருத்துக் கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலி கள் காலத்தில் அரசுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடு படும் போது எமது மக்க ளினுடைய பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் எமது மக்களின் இயல்பு நிலை முன்னேற்றம் தொடர் பாகவும் பேசியிருந்தார் கள்.

சுனாமி வேளையில் செரான் என்கின்ற பணிய கத்தை நிறுவி அதனூடாக சர்வதேசத்தின் ஒத்துழைப் புடன் எமது மக்களின் பொரு ளாதார வாழ்வை முன்னே ற்றுவதற்காக முயன்ற வேளை அப்போது இருந்த சந்திரி க்கா அரசினால் முட்டுக்க ட்டை போடப்பட்டது.

ஆகவே சிங்கள பேரின வாத அரசுதான் தமிழ்மக் களின் பொருளாதாரத்தை மேம்படுத்த தடையாக இருந் தார்களே தவிர தமிழ்த் தலைமைகள் எப்போதும் எங்களின் மக்களினுடைய வாழ்வாரத்தை மேம்ப டுத்தத் தடையாக இருந்தது கிடையாது.

எமக்கு நிலையான அரசி யல்த்தீர்வு கிடைக்கப்பெறு மானால் எமது மக்கள் தாமா கவும் புலம்பெயர் உறவுக ளின் ஒத்துழைப்புடன் எமது தேசத்தைக் கட்டியெழுப்பு வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க அலுவலகம் மன்னாரில் திறந்து வைப்பு








(மன்னார்)

காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னி இறுதி யுத்தத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தரவேண்டும் அல்லது அதற்கான பொறுப்புகளை அரசு கூறவேண்டும் என்பதற்காக நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் சாவற்காட்டுப் பகுதியில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தம் முடிவடைந்த பின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் பொழுது முள்ளிவாய்க்கால் பகுதியில் விசாரணைகளுக்காக பெற்றோர் தமது பிள்ளைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்திருந்தனர்.

அப்படி ஒப்படைக்கப்பட்ட பலருக்கு என்ன நடந்தது என்று இன்னும் தெரியாமல் மனைவி கனவனையும் பெற்றோர் பிள்ளைகளையும் தேடியவாறு அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் இந்த அரசானது காணாமலாக்கப்பட்டவர்களுக்கு எந்தவொரு தீர்வையும் தராமலும் அதற்கான பொறுப்புக் கூறாமலும் காலத்தை இழுத்தடித்து எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் செயற்பாடுகளில் முனைப்புக் காட்டி வருகின்றது என குற்றம் சாட்டி அரசின் கபடத்தனத்தை உலகிற்கு காட்டுவதற்காகவும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீதியை விடாப்பிடியாக பெற்றுக்கொள்வதற்காகவும் மக்களால் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நாளில் இருந்து ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்கள் விடுவிக்கப்பட்டு இருந்ததாகவும் அதையும் மீறி மக்களுக்காக இந்த அலுவலகத்தை திறந்ததாகவும் ஏற்பாட்டுக்குழுவினர் கூறுகின்றார்கள்.

இறுதி யுத்தத்தில் கானாமலாக்கப்பட்ட மன்னாரில் மட்டும் சுமார் இருநூற்றி ஐம்பதிற்கும் மேட்பட்டவர்களின் குடும்பங்கள் இருந்தபோதும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களினால் சிலர் பங்குபெறவில்லை என்று அறிய முடிகிறது.

இந்நிகழ்வில் பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளார், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், வடக்குமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரன் டேவிட்சன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம், மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கூடியிருந்த பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்,

குடும்பத்திற்கு வருமானத்தை பெற்றுத்தரும் கணவன் மற்று ஆண் பிள்ளைகளை பறிகொடுத்த பல தாய்மார்கள் உள்ளோம். எங்களுக்குப் பணம் தேவையில்லை.

எமது பிள்ளைகளை எம்மிடம் ஒப்படையுங்கள். அல்லது எமது கைகளால் இராணுவத்தினரிடம் ஒப்படைத்த அவர்களுக்கு என்ன நடந்தது என்றாவது கூறுங்கள் என்று கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

இந்த அலுவலகத்திலிருந்து வெளிமாவட்டங்களில் இயங்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கம் அல்லது அமைப்புகளோடு தொடர்பை ஏற்படுத்தி எமக்கான உரிய தீர்வைப் பெற போராடுவோம் என அவர்கள் தெரிவித்தனர். (2)




## ஆட்டோ-பட்டாரக வாகனம் விபத்து

(பனிக்கன்குளம்)


வவுனியா தினசரி சந்தை உள்வட்ட வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆட்டோவுடன் பட்டாரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

சதொச வர்த்தக நிலையத்திற்கு அருகே சந்தை உள்வட்ட வீதியிலிருந்து ஹொரவப் பொத்தானை வீதிக்கு ஏற முற்பட்ட ஆட்டோ மீது ஹொரவப்பொத்தானை வீதியிலிருந்து சந்தை உள்வட்ட வீதிக்குள் நுழைந்த பட்டாரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஆட்டோக்கு சிறிதளவில் சேதம் ஏற்பட்டதுடன் விபத்து காரணமாக இவ் வீதியுடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

உடனடியாக விரைந்து செயற்பட்ட நகரசபை ஊழியர்கள், பொது மக்கள் ஆகியோர் விபத்து ஏற்பட்ட பகுதியிலிருந்து வாகனத்தை அகற்றி போக்குவரத்தை சீர்ப்படுத்தினர். (2-281)

## வவுனியாவில் மழை வேண்டி பிரார்த்தனை



(குருமன்காடு)

வவுனியாவில் தற்போது நிலவி வருகின்ற கடும் வரட்சி நிலைமை காரணமாக குளங்கள், கிணறுகள் ஆகியவற்றில் நீர் வற்றி குடிநீருக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கால்நடைகளும் கடும் வரட்சியின் காரணமாக உணவின்றி நோய்வாய்ப்பட்டு இறந்து வருகின்றன.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு சூடுவெந்தபுலவு குளக்கரையில் மழை வேண்டி விசேட தொழுகை நடைபெற்றது.

இதில் வவுனியா சூடுவெந்த புலவு கிராம சிறுவர்கள், வயோதிபர்கள், அரபுக்கல்லூரி மாணவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து மழை வேண்டி தொழுகை நடத்தி இறைவனை பிராத்தனை செய்தனர். (2-250)

## கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் சேதம்; ஆறு பேர் கைதாகி விடுதலை

(பனிக்கன்குளம்)

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டு நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கையையும் சுருக்குவலையையும் தடைசெய்யக் கோரி கடந்த 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் மீனவர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றெளாழில் நீரியல் வளத் திணைக்களம் சேதப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமைக்கு அமைவாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையை தொடர்ந்து நேற்று முன்தினம் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அன்றைய தினம் இரவு முல்லைத்தீவு பொலிஸாரினால் போராட்டத்தில் ஈடுபட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மீனவ அமைப்புக்களின் தலைவர், செயலாளர்கள் உள்ளிட்ட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்படி கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் எம். தொம்மைப்பிள்ளை, செல்வபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவு அமைப்பின் பொருளாளர் ஏ.ஜெயராசா, கடற்றொழிலாளர் சம்மேளன உப தலைவரும் தீர்த்தக்கரை அன்னை வேளாங்கன்னி கடற்றொழில் அமைப்பின் தலைவருமான வி.அருள்நாதன், செல்வபுரம் கடற்றொழில் அமைப்பின் தலைவர் ஜெறோம் திலீபன், கடற்றொழில் அமைப்பின் தலைவர் பே.பேரின்பநாதன், கோவில் குடியிருப்பு கடற்றொழில் அமைப்பின் தலைவர் ம.மிரண்டா அன்ரனி ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதவான் என்.சுதர்சனின் வாசல் தலத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இவர்கள் நிபந்தனையுடன் ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை போராட்ட இடத்திற்கு செல்லக்கூடாது என்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றில் கையொப்பம் இட வேண்டும் என்றும் பதில் நீதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டோரை அகற்றினர் வவுனியா நகர சபையினர்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்பவர்களை அங்கிருந்து அகற்றும் பணியை வவுனியா நகரசபையினர் நேற்றுக்காலை முதல் மேற்கொண்டனர்.

வவுனியா ஹொரவப்பொத்தான வீதி, தினசரிச் சந்தை வீதி போன்ற பகுதிகளில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு எதிராகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்பவர்களை அவ்விடத்திலிருந்து அகற்றி வருவது தொடர்பாக அவ்விடத்தில் நடவடிக்கையை மேற்கொண்ட நகரசபை ஊழியர்களிடம் வினாவிய போது,

அண்மைகாலமாக நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்டு வருபவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு முன்னறிவித்தல் வழங்கப்பட்டு வந்தது.

நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு நகரசபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.

மாறாக பொதுமக்கள் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்ளும் போது பெரிதும் அசௌகரிங்களுக்குள்ளாகி வருகின்றமை எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (2-281)

கெட்ட உள்நோக்கத்தோடு தரப்பட்ட பதவி தலைகுப்புறத் தள்ளிவிடும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தரின் கண்டம் கழிந்தது தமிழருக்கு இனி எதுவும் கிடையாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவித்துள்ளார். அவரின் இந்த அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டதொன்றே.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ அணி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால், அது எப்பவோ சாத்தியமாகி இருக்கும். அப்படியொரு எண்ணம் மகிந்த ராஜபக்ஷ அணியிடம் அறவே இல்லை.

இதற்குக் காரணம் தாங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதைவிட, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதுதான் தமக்குப் பாதுகாப்பு என்பது மகிந்தவின் தரப்பினர்க்கு நன்கு தெரியும். இதன்காரணமாகவே அவர்கள் சம்பந்தர் இருக்கட்டும் என்று விட்டுவிட்டனர்.

மகிந்த தரப்பின் இந்த இராஜதந்திரம் தமிழ் மக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது என்பது வெளிப்படையான உண்மை.

அதாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு வழங்கியதால் தமிழ் மக்களின் உரிமைகள், சர்வதேச போர்க்குற்ற விசாரணை, காணாமல் போனவர்களின் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் போன்ற அத்தனையிலும் பேசாதிருத்தல் என்ற முடிவை கூட்டமைப்பின் தலைமை எடுத்துக் கொண்டது.

எங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தந்துள்ளதனால், அதற்குக் கைமாறாக;

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முதல் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தல், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்தல் என சகல வழிகளிலும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்.

இதை நாம் கூறும்போது, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டமைப்பினர் எதிர்த்தது மகிந்த தரப்புக்கு நன்மையா என்று நீங்கள் கேள்வி எழுப்பினால், இங்குதான் ஒப்பீட்டு நன்மை என்ற விடயம் மேலெழும்.

அதாவது பிரதமர் ரணிலை கூட்டமைப்பினர் ஆதரிப்பது மகிந்த தரப்புக்கு இடையூறாயினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் சர்வதேச போர்க்குற்ற விசாரணை தேவை என்று பாராளுமன்றத்திலும் உலக நாடுகளிடமும் சதா கேட்டுக் கொண்டால்,

அதனால் ஏற்படுகின்ற விளைவு மகிந்த தரப்புக்கு மிகமோசமானதாக இருக்கும்.

அதனால்தான் சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு நன்மை என்றாலும் அதைவிட்ட நன்மை தமக்கு என்று ஒப்பீட்டு அடிப்படையிலேயே மகிந்த தரப்பு இரா. சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதை முழுமனதோடு ஆதரிக்கின்றது.

இதை நாம் கூறும்போது அப்படியானால் இடையிடையே எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீது மகிந்த தரப்பு கண் வைப்பது ஏன் என்று நீங்கள் கேட்டால்,

மறந்தும் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இரா.சம்பந்தர் வலியுறுத்தக்கூடாது என்பதற்கான ஒரு கவனயீர்ப்பு நடவடிக்கையாகத்தான் மகிந்த தரப்பு அதனைச் செய்கிறது என்பதே உண்மையிலும் உண்மை.

இதை நாம் கூறும் அதேவேளை எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தர் நீடிப்பது தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதற்கான அறிகுறியாகும்.

# நாட்டில் மதகுருமார்களுக்கு மாத்திரமல்ல அனைவருக்கும் சட்டம் சரியாக செயற்பட வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சட்டம் மதகுருமார்களுக்கு மாத்திரமல்ல அனைவரது விடயத்திலும் சிறந்த முறையில் செயற்பட வேண்டுமென மாநகர மற்றும்மேல்மாகாண அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஆறு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடயத்தில் மாத்திரம் சட்டம் விரைவாக செயற்பட்டுள்ளதென அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தவகையில் நாட்டின் சட்டம் ஏனையோரது விடயத்திலும் விரைவாக செயற்படுமாகவிருந்தால் அது வரவேற்கத்தக்கதொரு விடயமாகும் எனவும் சம்பிக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு மகாநாயக்க தேரர்கள்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலியுறுத்த வேண்டும். அப்போது ஜனாதிபதி நிச்சயம் கேட்பார் எனவும்அவர்மேலும குறிப்பிட்டுள்ளார். (ம)

# நாட்டை இராணுவ மயப்படுத்தவே அரசாங்கம் முயற்சி செய்கின்றது

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து பொலிஸ் அதிகாரத்தை இராணுவத்தினருக்கு வழங்கி அதன் மூலம் நாட்டை இராணுவ மயப்படுத்தி வேறுவிதமான ஆட்சி முறையை ஏற்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் ஜனநாயக கோட்பாடுகளில் மாற்றங்களை செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது.

ஆகவேதான் நாட்டையும் மக்களையும் பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்கு நாம் போராடி வருகிறோம்.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றான தேர்தலை நடத்துவதாக இல்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நீண்ட நாட்கள் நடத்தாது காலம் தாழ்த்தினர்.

அதேபோல் மாகாண சபைத் தேர்தலையும் நடத்தாது காலம் தாழ்த்துகின்றனர்.

தேரதலை நடத்த வேண்டும் என்கின்ற தேவை அரசாங்கத்திடம் இல்லை. ஏனெனில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் படுதோல்வியடைந்தது.

எனவே மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தோல்வியை சந்திக்க வேண்டிவரும் என்கின்ற அச்சத்தினாலேயே இழுத்தடிப்புச் செய்கின்றனர் என்றார். (ம)

# குற்றச் செயல்களை தடுப்பதற்கு பொதுமக்களின் ஆதரவு வேண்டும்

## வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

யாழில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களை தடுப்பதற்கு பொதுமக்களும் தங்களின் ஆதரவினை முழுமையாக வழங்க வேண்டுமென வட மாகாண சிரேஷ்ட பிரதிப பொலிஸ்மா அதிபர் பாலித பெர்ணான்டோ பொது மக்களிடம் நேற்று சனிக்கிழமை கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த செயற்பாட்டுக்கு மக்களும் தங் களது முழு பங்களிப்பினை வழங்குவார்களாயின் குற்றச் செயலகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்ய உதவியாக அமையுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை யாழில் வாள்வெட்டுச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென அரசியல்வாதிகளும் பொதுமக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் பொதுமக்கள் மத்தியில விழிப்புணர்வை ஏற் படுத்தும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய அதிகளவில் குற்றச் செயல்கள் இடம் பெறுகின்ற பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் நேற் றுக் காலை பொலிஸாரினால் விநி யோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள்உள்ளிட்ட பொலிஸ உத்தி யோகஸ்தர்கள் ஆகியோர் இணைந்து மேற் கொண்டுள்ளனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஸ்ரீ 108 வைணவத் திருத்தலங்கள்**

ஸ்ரீரங்கம்
உறையூர்
உத்தமர் கோவில்
திருவெள்ளறை
திருஅன்பில்
கோவிலடி
திருக்கண்டியூர்
திருக்கூடலூர்
கபிஸ்தலம்
திருப்புள்ளம்பூதங்குடி
திருக்ஆதனூர்
கும்பகோணம்
ஒப்பிலியப்பன் திருக்கோயில்
திருநாறையூர்
திருச்சேறை
திருக்கண்ணமங்கை
திருக்கண்ணபுரம்
திருக்கண்ணங்குடி
நாகப்பட்டினம்
தஞ்சாவூர்

(தொடரும்)

## நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட 27 தமிழக மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெடுந்தீவு தென்கிழக்குக் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 27 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நேற்று சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த 27 தமிழக மீனவர்களையும் கைது செய்த கடற்படையினர் விசாரணைக்கு பின்னர் நேற்று விடுமுறை என்பதால் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி சபேஷன் வீட்டில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த மீனவர்கள் இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. (ம)

# ரில்கோ கொங்கியூறஸ் அணி பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி



வடக்கு கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின் போட்டிகள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் கிளிநொச்சி உதயதாரகை மைதானங்களில் நடைபெற்று வருகின்றது.

வெற்றிபெறும் அணிக்கு 5 மில்லியன் ரூபாய் பரிசுப்பொதி வழங்கும் வகையில், இலங்கையிலேயே மிகப்பிரமாண்டமான முறையில், இந்தச் சுற்றுப் போட்டியானது ஏற்பாடு செய்யப்பட்டது.

வீரர்கள் 12 அணிகளில் உள்வாங்கப்பட்டு, ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் ஒரு தடவை மோதவேண்டும் என்ற அடிப்படையில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் முதற்சுற்றில் லீக் ஆட்டத்தில் மொத்தமாக 66 போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதற்சுற்றில் முன்னிலை வகிக்கும் 4 அணிகள் பிளே ஓவ் போட்டிக்குத் தகுதி பெறும். அந்த வகையில், இதுவரையில் நடைபெற்ற 9 போட்டிகளில், 8 போட்டிகளில் வெற்றிபெற்று 24 புள்ளிகளுடன் ரில்கோ கொங்கியூறஸ் அணி முதலிடத்திலுள்ளதுடன், முதல் அணியாக பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடர்ந்து, மன்னார் எப்.சி. அணி, 9 போட்டிகளில் 6 போட்டிகளில் வெற்றிபெற்று 20 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், கிளியூர் கிங்ஸ் அணி, 9 போட்டிகளில் 6 போட்டிகளில் வெற்றிபெற்று 19 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், வவுனியா வோரியர்ஸ் அணி, 9 போட்டிகளில் 6 போட்டிகளில் வெற்றிபெற்று 18 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலும் உள்ளது.

வல்வை எப்.சி (17 புள்ளிகள்), தமிழ் யுனைட்டட் (12 புள்ளிகள்), முல்லை பீனிக்ஸ் (12 புள்ளிகள்), ரிங்கோ ரைரன்ஸ் (10 புள்ளிகள்), நொர்தேன் எலைட் (08 புள்ளிகள்), மாதோட்டம் எப்.சி. (4 புள்ளிகள்), மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் (4 புள்ளிகள்), அம்பாறை அவஞ்சேர்ஸ் (1 புள்ளி) என தொடர்ந்து வரும் இடங்களில் உள்ளது. (க-26)

# மன்னார் எப்.சி. அணி வெற்றி



வடக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 51 ஆவது ஆட்டத்தில் மாதோட்டம் எப்.சி. அணியை எதிர்த்து மன்னார் எப்.சி. அணி மோதியது.

போட்டியின் 71 ஆவது நிமிடத்தில் மன்னார் எப்.சி. அணியின் எம்.என்.எம்.இசாதீன் கோல் ஒன்றை அடித்தார். அந்தக் கோல் இறுதிவரையில் நீடித்தது. முடிவில் மன்னார் எப்.சி. அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்றது. (க-26)

# ரில்கோ அணியை வென்றது கிளியூர் கிங்ஸ் அணி



இதுவரையில் எவ்வித போட்டியிலும் தோல்வியடையாத அணியாக வலம் வந்த ரில்கோ கொங்கியூறஸ் அணிக்கு, முதல் தோல்வியை கிளியூர் கிங்ஸ் அணி வழங்கியது.

வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 52 ஆவது போட்டியில் கிளியூர் கிங்ஸ் அணியை எதிர்த்து ரில்கோ கொங்கியூறஸ் அணி மோதியது.

இதுவரையில் நடைபெற்ற 8 போட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்த, ரிங்கோ அணிக்கு, 53 ஆவது நிமிடத்தில் கிளியூர் கிங்ஸ் அணியின், ஜொப் மைக்கல் அதிர்ச்சி கொடுத்தார். அந்தக் கோலை கிளியூர் கிங்ஸ் அணியினர் அடித்த பின்னர், தடுப்பாட்டம் ஆடினர். இதனால் ரில்கோ அணியினால், பதில் கோலை அடிக்க முடியாமல், தோல்வியைச் சந்தித்தது. முடிவில், கிளியூர் கிங்ஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# வவுனியா வோரியர்ஸ் அணி வெற்றி



வடக்கு,கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின் லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 48 ஆவது போட்டியில் வவுனியா வோரியர்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி மோதியது.

போட்டி தொடங்கியதும் 3 ஆவது மற்றும் 4 ஆவது நிமிடங்களில் வவுனியா வோரியர்ஸ் அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டது. அந்த இரண்டு கோல்களையும் வி.மயூரன் மற்றும் என்.மைக்கல் ஆகியோர் அடித்தனர்.

அதன் பின்னர் எவ் வித கோல்களையும் இரண்டு அணிகளும் பதிவு செய்ய வில்லை. முடிவில் வவுனியா வோரியர்ஸ் அணி 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

# நொதேர்ன் எலைட் அணி இலகு வெற்றி



வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின் லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன. லீக் சுற்றின் 49 ஆவது ஆட்டத்தில் நொதேர்ன் எலைட் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன் அணி மோதியது.

போட்டி தொடங்கிய 1 ஆவது நிமிடத்திலேயே நொதேர்ன் அணியின் ஆர்.சுவண்ராஜ் கோல் ஒன்றை அடித்தார். எலைட் அணியின் பி.லக்சிகன் 33 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்தார். 53 ஆவது நிமிடத்தில் எலைட் அணியின் ஆர்.யோகேஸ்வரன் கோல் ஒன்றை அடித்தார். 59 ஆவது நிமிடத்தில் எலைட் அணியின் கே.ஏ.ஆர்.டிவின்சா கோல் ஒன்றை அடித்தார். அதுவரையில் ஆட்டத்தில் அவ்வளவு ஆதிக்கம் செலுத்தாமல் இருந்த ரிங்கோ ரைரன் அணி, 69 ஆவது நிமிடத்தில் தங்கள் முதலாவது பதில் கோலை அடித்தது. அந்தக் கோலை எம்.ஜே.ஆர்.மொஹமட் அடித்தார். 83 ஆவது நிமிடத்தில் ரிங்கோ ரைரன் அணியின் என்.கிரிசாந்தன் அடித்தார்.

முடிவில் நொதேர்ன் எலைட் அணி, 04:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## சிலி நாட்டின் முன்...

பொதுச் சபை கூடிய போது இந்த நியமனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளராக உள்ள செய்யித் அல் ஹுஸைன் இந்த மாத இறுதியில் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். (ம)

## குற்றவாளிகளை...

விடுத்துள்ள அறிவித்தலில் யாழ்ப்பாண பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைக்கு தொந்தரவு செய்யும் குற்றவாளிகளை கைது செய்ய உங்கள் ஆதரவை வழங்குங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை பொதுமக்கள் தகவல்களை தெரிவிக்க 0766093030 என்ற தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியுள்ளார். (இ)

## ரயில் தொழிற்சங்...

வேற்று குழு கூட்டத்தின் போது புகையிரத கட்டுப்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று மாலை முதல் சில புகையிரத சேவைகள் இடம்பெறும் என புகையிரத இயந்திர சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதன்படி நேற்று மாலை வெயாங்கொட முதல் மொறட்டுவ வரையிலான புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் இன்று காலை 6.35 மணியளவில் கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி புகையிரதம் ஒன்றும் பயணிக்கவுள்ளது.

மேலும் மாத்தறையிலிருந்து பயணிக்கும் ருஹுனு குமாரி புகையிரதம் வழமையான நேரத்தில் சேவையில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வடக்கு மாணவர்...

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், போதை மாத்திரைகளும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண மூத்த பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோவின் ஆலோசனையில் வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்பு பொலிஸ் பிரிவு, செட்டிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை வீதிச் சோதனை நடவடிக்கை முன்னெடுத்திருந்தது.

அதிகாலை 4.30 மணியளவில் சிறிய ரக காரை மறித்து சோதனையிட்ட போது, அதற்குள் பெருமளவு போதை மாத்திரைகள் உள்ளமை கண்டறியப்பட்டது.

அதில் பயணித்த 24 வயதுடைய குடும்பத்தலைவரும் 18 வயதுடைய அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் இருவரும் களனியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு, போதைப் பொருள் கடத்தும் பாதாள கும்பலுடன் தொடர்பு உள்ளது.

இரண்டு முக்கிய போதைப் பொருள் கடத்தல்காரர்களால் டுபாயிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 70 ஆயிரம் போதை மாத்திரைகளே மன்னாருக்கு கடல் வழியாக வந்துள்ளன. அவற்றை கொழும்புக்கு கடத்திச் செல்லும் போதே இந்த கைது இடம்பெற்றது.

வலி நிவாரண மாத்திரையான இது 50 மில்லி கிராம் அளவே மருத்துவரின் அனுமதியுடன் வழங்க முடியும். ஆனால் கைப்பற்றப்பட்ட 70 ஆயிரம் மாத்திரைகளும் 200 மில்லிக்கிராம் அளவுடையவை.

பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்கே அவற்றைக் கடத்திச் சென்றதாக சந்தேகநபர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இதே மாத்திரைகள் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் விசாரணைகளின் மூலம் தகவல் கிடைத்துள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## எரிபொருளின்...

ரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்தது.

இதன்படி, 95 ஒக்ரைன் ரக பெற்றோல் 2 ரூபாயினாலும், சுப்பர் டீசல் ஒரு ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகரிப்புடன், 158.00 ரூபாயாக விருந்த 95 ஒக்ரைன் ரக பெற்றோல் 160.00 ரூபாயாகவும். 129.00 ரூபாயாக இருந்த சுப்பர் டீசல் 130.00 ரூபாயாகவும் அதிகரிக்கப்படுவதாக ஐ.ஓ.சி. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## கடதாசிப்பை பய...

தப்படும் குழாய்களுக்கு மாற்றீடாக அவற்றை கடதாசியைக் கொண்டு உற்பத்தி செய்வது தொடர்பிலும் திட்டமிடப்படுவதாக குறிப்பிட்டார்.

மேலும், குறைந்த விலையில் கடதாசி உற்பத்திகளை மேற்கொள்வதனூடாக பொலித்தீன் பாவனையைக் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் பொலித்தீன் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் தொடர்ந்தும் அதன் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ம)

## நாடாளுமன்றத்தி...

தம் நடத்தப்படவுள்ளது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் கட்சித் தலைவர்களுடன் நடத்திய கூட்டத்தில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல்களை புதிய முறையில் நடத்துவதா? பழைய முறையில் நடத்துவதா? என்பதில் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளதால், இழுபறிகள் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

## விக்னேஸ்வரன்,...

அடுத்து நடைபெறவுள்ள வட மாகாண சபை தேர்தலில் மீண்டும் விக்னேஸ்வரனையே முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் இதுதொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டத்தில் அந்த கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சியின் உறுப்பினர் ஒருவர் சம்பந்தனிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிய வருகிறது.

இதன்போது விக்னேஸ்வரனை தொடர்ச்சியாக சந்தித்து பேச்சுவார்த்தைகளில் நீங்கள் ஈடுபடுவதாக அறிந்துள்ளோம். இது உண்மையா? தொடர்ச்சியாக அவருடன் என்ன பேசி வருகின்றீர்கள் என அந்த உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். எனினும் இதற்கு சம்பந்தன் பதில் அளிக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக யாரை நிறுத்தப் போகின்றீர்கள் என்பதை விரைந்து அறிவியுங்கள் என புளொட், ரெலோ ஆகிய கட்சிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. எனவே இது தொடர்பில் சம்பந்தன் தீர்க்கமான அறிவிப்பை வெளியிடவேண்டும் என இரு கட்சிகளும் வேண்டுகோளை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன், விக்னேஸ்வரனிற்கு மக்கள் செல்வாக்கு பெருமளவு காணப்படுவதாகவும், புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சி.வி விக்னேஸ்வரன் கட்சியிலிருந்து வெளியேறும் பட்சத்தில் பாரிய பின்னடைவுகள் ஏற்படலாம் எனவும் அந்த கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் கூட்டமைப்பின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## மனித உரிமை...

மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கையில் இலங்கை உள்ளிட்ட 29 நாடுகளின் பெயர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இஸ்ரேல், பாகிஸ்தான். ஓமான். மியன்மார், தாய்லாந்து, துருக்கி, பஹ்ரைன், ஈராக், தென் சூடான், தஜிகிஸ்தான், டர்க்மேனியா, உஸ்பெகிஸ்தான், மெக்ஸிகோ, அல்ஜெரியா, எரித்திரியா, ஹொன்டுராஸ், மொரக்கோ, சூடான் போன்ற நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட நாடுகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம)

## அமைச்சரவை தீர்...

நடவடிக்கைகளுக்கு கடும் அழுத்தம் ஏற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து தவறான புரிந்துணர்வு மக்கள் மத்தியில் சென்றடைவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தின் போது அமைதியாக இருந்து விட்டு, வாகனத்தில் ஏறி பின்னர் அமைச்சர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகின்றனர். இது தொடர்பான தகவல் கிடைத்ததை அடுத்து ஜனாதிபதி இந்த உத்தரவை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க செயற்பாடு குறித்து ஏதாவது மாற்று கருத்து இருப்பின் அமைச்சரவை கூட்டத்திலேயே அதனை பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ம)

## அரசுக்கு மகிந்த...

வர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரிய போராட்டம் ஆரம்பமாகிறது. எதிர்வரும் நாட்களில் இந்த போராட்டம் உக்கிரமடையும்.

அரசாங்கம் ஏகாதிபத்தியத்துடன் செயற்படுகிறது. நாடாளுமன்றில் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பதற்கு இருக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில், அரசாங்கம் எதிரணியினரை அடக்கியாளும் வகையில் செயற்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே அரசாங்கத்தில் இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனுமதியின்றி அது தொடர்பான ஒப்பந்தம் செய்திருந்த போதும் 2 வருடங்கள் நாங்கள் காத்திருந்தோம். தற்போது அந்த ஒப்பந்த காலமும் முடிவடைந்துள்ளது. இதனால் எமக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோர முடியும்.

ஆனால் சர்வாதிகார போக்கில் அது தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. தற்போதைய பிரதமரின் இருப்பு தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் இருக்கும் வரையே இருக்கும். இதனால்தான் அவர்கள் இவ்வாறாக செயற்படுகின்றனர்.

அது மாத்திரமன்றி சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமான நபர்களால் நியமிக்கப்படவில்லையென்றும், சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் அரசியலமைப்பு பேரவையின் அங்கத்தவர்கள் பக்கச்சார்பானவர்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ம)

## கட்டியெழுப்புவத...

பெற்ற நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், பெண்களின் நேரடி பங்களிப்பை பெற்றுக்கொள்வது குறித்தும் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

நாடு முழுவதும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கிராம எழுச்சி திட்டத்திற்கு மேலதிகமாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் குறித்த முழுமையான தகவல்களை பொதுமக்கள் விரைவில் அறியக் கூடியதாக இருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## தனியார் பேருந்...

த்துள்ளதாக, அனைத்து மாகாண தனியார் பேருந்துகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

போக்குரவத்து பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ள நிலையிலேயே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அந்தச் சங்கத்தின் தலைவர் சரத் விஜேகுமார தெரிவித்தார். (ம)

## ஐ.தே.க உறுப்பின...

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமான மட்டத்தில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய குறித்த இருவரும் எதிர்வரும் வாரமளவில் ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் கண்டி பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### அதிக சத்தத்துடன்

# வடமராட்சியில் இசைக்கச்சேரி; மக்கள் விசனம்

(கரணவாய்)

வடமராட்சி மாணவர்களின் கல்வியினை சீர் குலைக்கும் வகையில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளதாக க.பொ.த.உயர் தரத்தில் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் வெளியிட்டனர்.

நேற்று சனிக்கிழமை இரவு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் தென்னிந்திய பாடகர்களின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

இவ் இசை நிகழ்ச்சியில் பாடப்பட்ட பாடல்கள் பருத்தித்துறை நகர் வரையான சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு அதிக சத்தத்துடன் ஒலித்துள்ளது. இதனால் க.பொ.த. உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களிற்கு உள்ளானார்கள்.

இது தவிர வடமராட்சி பகுதியில் உள்ள பல ஆலயங்களிலும், விளையாட்டு விழா போன்ற இடங்களிலும் அதிகரித்த ஒலியில் ஒலி பெருக்கிகள் நேற்றிரவு ஒலிக்க விடப்பட்டதாக பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.

பரீட்சை காலத்தில் ஒலி பெருக்கி பாவிக்க எப்படி பொலிஸார் அனுமதி வழங்கினர் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-60)

### செவன

| | |
|---|---|
| திகதி | 2018/08/11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 108 |

ஆங்கில எழுத்து: F — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 02 17 37 59

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.08.11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1848 |

ஆங்கில எழுத்து: P — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 35 41 43 44

தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2018/08/11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1350 |

எழுத்து: 24 — வெற்றி இலக்கம்: 23 55 56 69 — 29 17

தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 11-08-2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 864 |

ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 3 1 0 4 1 4

தேசிய லொத்தர் சபை

## விற்பனைக்கு

யன்மார் 2 சிலிண்டர் வள்ள எஞ்சின் ஸ்டாண்டட் கிறாங், யப்பான் கெட், பெயரிங், தரமான போர் இயங்கு நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773573055

வேம்படி, வல்வெட்டித்துறை

(5297)

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 707 0069

M.Suren

## காணி விற்பனைக்கு

வைமன் வீதியில் சிறிய வீட்டுடன் கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 221 2142

## வேலையாட்கள் தேவை

சமையல் வேலை தவிர்ந்த ஏனைய வீட்டு வேலைகளுக்கு உதவியாட்கள் தேவை. (வயது 25-55 பெண்கள் விரும்பத்தக்கது.)

நல்லூர்

தொடர்பு 077 284 9705

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-3472)

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும்

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி,
மன்னார்.

077 755 4528

3-5 Working Days

DHL aramex SKYNET

## PHYSICS CLASS

உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் வகுப்புக்கள் (குழு, தனிப்பட்ட) பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றன.

**Vel Ramanan**
B.Sc (Hons) in Physics

Mobile :- 077 647 0614

குழு வகுப்புக்கள் - Techno World (வெலிங்டன் சந்தி, யாழ் நகர்) இல் நடைபெறுகின்றது.

## வேலைவாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

01. Billing Staff - யாழ்ப்பாணம் (பெண்)

தகைமைகள்
- A/L சித்தி.
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. Packing Staff - கொழும்பு (ஆண்)

தகைமைகள்
- கொழும்பில் பணியாற்றுவதற்கான தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.
- வயது எல்லை 18 - 30
- உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு:- 077 427 5311 076 253 4275

(சி-3482)

## CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413

(C-3486)

## உடன் தேவை

• பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கும் போட்டோப்பிரதி செய்யும் கடையொன்றிற்கு விரைவான தமிழ், ஆங்கில கணினி தட்டச்சு தெரிந்திருப்பதுடன் போட்டோப் பிரதி செய்வதில் அனுபவமுள்ள / பழக ஆர்வமுள்ள நேர்மையும் கடமையுணர்வுமிக்க பெண் ஊழியர் தேவை.

(5333)

தொடர்பு :- 077 356 2043

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதிக்கு அருகில் ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள இரு கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(5325)

T.P :- 077 633 7307 076 108 2737

## MATHS CLASSES (GROUP & PERSONAL)

(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான)

● Gr. 6–11 வரையான மாணவர்களிற்கான கணித வகுப்புக்கள் வீடு வந்து அனுபவமிக்க தேசிய பாடசாலை ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

தொடர்பிற்கு :- 077 454 0529

☞ புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புகளிற்கு தொடர்பு கொள்ளவும்.

(5324)

## காணி விற்பனைக்கு


யாழ் நகர சுற்று வட்டாரத்திற்குள் 1 1/2 Km அமைவிடத்தில் கே.கே.எஸ் றோட், பிரப்பங்குளம் வீதியில் பழைய வீட்டுடன் 1 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:– 071 822 9630

# மரண அறிவித்தல்

## சின்னப்பு பொன்னுத்துரை

**பிறப்பு: 07.04.1939 – இறப்பு: 09.08.2018**



யாழ்.ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பொன்னுத்துரை அவர்கள் கடந்த (09.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணன் - கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும், சாரதாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், சுதாஜினி (லண்டன்), சுதர்ஜினி (நியூசிலாந்து), சுதன் (பிரான்ஸ்), துஷ்யந்தி (கோதை - மாகாண விவசாய பணிப்பாளர் பணிமனை, நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவதயாளன், சிவானந்தன், காயத்திரி, சத்தியன் (NAITA, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜீசன், எமிகா, யதுசன், தனுசன், சைலினா, எழிலிசை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2018) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33, பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
021 223 2307

தகவல் : லயன் ப.செல்லத்துரை (J.P)
சகலன் - 077 772 6501
சுதன் (மகன் - பிரான்ஸ்)
+33 6183 15858

(1535)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News-paper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 178

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 | 12.08.2018 | தொலைபேசி : 021 222 3378




# சிப்பிக்குள் அடங்காத முத்து

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவோம் என்று அறிவிக்க, மீண்டும் அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

கலைஞர் மு. கருணாநிதி தமிழ்மொழிக்கு ஆற்றிய பணி அளப்பரியது. கடவுள் இல்லை என்று கூறிய கருணாநிதி மேல் கடவுளுக்கு அதிக விருப்பம். அதனால்தான் அவரை 95 ஆண்டுகள் நிறைந்த ஆயுளோடும் சுகத்தோடும் வைத்திருந்து மிகப்பெரும் புகழ்பூத்த பேரறிஞனாக, அரசியல் தலைவனாக வாழ்ந்து மறைந்துள்ளார் என்று கூறி பண்டிதர் அமர்ந்தார்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா கூறியது முழுக்க முழுக்கச் சரியானது. கடவுள் இல்லை என்ற கொள்கையை கருணாநிதி கொண்டவராயினும் அவரிடமும் ஒரு விதமான ஆன்மீக சிந்தனை இருந்துள்ளது.

ஆரம்பகால அரசியலில் கலைஞர் கருணாநிதி கறுத்த சால்வைதான் அணிவார். இது நீண்டகாலம் நீடித்திருந்தாலும் தனது முதுமைக்காலத்தில் மஞ்சள் சால்வையை அணிந்து கொண்டார்.

இது ஆன்மீகத்தின் அடையாளத்தை தன்னுள் காட்டுவதற்காக அவர் ஏற்படுத்திக் கொண்டதுதான்.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஒருமுறை பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா கலைஞர் கருணாநிதியின் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வாறு கருணாநிதியின் வீட்டிற்கு சாயிபாபா சென்ற விடயம் ஊடகங்களில் சர்ச்சையைக் கிளப்பியது. இந்நிலையில் பகவான் சாயி பாபா கருத்துரைக்கையில் உங்களுக்குத்தான் அவர் கருணாநிதி. எனக்கு அவர் இராஜராஜசோழனின் மறு பிறப்பு என்றார்.


பகவான் கூறிய அந்தக் கருத்தையும் நிராகரிக்க முடியாது. ஏனென்றால் அந்தளவுக்கு வாழ்நாள் முழுமையிலும் பெருமையோடு, புகழோடு, மக்கள் ஆதரவோடு வாழ்ந்துள்ளார் கலைஞர் கருணாநிதி. அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட மக்கள், அரசியல் தலைவர்கள், சினிமாத் துறைப் பிரபலங்கள் என அனைவரும் முண்டியடித்து கலைஞருக்கு அஞ்சலி செலுத்தியதையெல்லாம் பார்க்கும்போது கடவுள் கருணாநிதியின்ர பக்கமாக இருந்துள்ளார் என்பது புரிகிறது.

கடவுள் இல்லை என்றவரை கடவுள் மிக உன்னத மானவராக வாழ வைத்தார் என்றால் பகவான் சாயி பாபா கூறிய இராஜராஜ சோழனின் மறுபிறப்புத்தான் கருணாநிதி என்ற விடயத்தை நாங்கள் சிந்திக்கத்தான் வேணும்.

**கங்காணி:** அதுமட்டுமல்ல முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின்ர இறுதிச் சடங்கின் போது அவருக்குக் கிட்டச் சென்று அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. முதலமைச்சராக இருந்த போது ஜெயலலிதா மறைந்திருந்தாலும் சசிகலா என்ற சண்டாளி ஜெயலலிதாவிற்குக் கிடைக்க வேண்டிய அத்தனை உயர் மரியாதைகளையும் இல்லாமல் செய்து விட்டார்.

**மூப்பர்:** அதுமட்டுமோ ஜெய்லலிதா இறந்த போது அவரின் முகத்தைச் சுற்றி வெள்ளைத்துண்டால் வாய்க் கட்டுப்போட்டவர்கள் எண்டால் எந்தளவுதூரம் ஜெயலலிதாவின் இறுதி நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பினம் என்பதை நாங்கள் உணர முடியும்தானே.

**வாத்தியார்:** அதெண்டால் உண்மைதான். கலைஞர் கருணாநிதியின்ர இறுதி அஞ்சலி அவரின் இறுதி ஊர்வலம் என எல்லாமும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதுதான் தி.மு.கவின்ர வெற்றி. வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடி மாநாட்டில் அமைதி நிலவியது. அந்த அமைதியைப் பண்டிதர் பரமலிங்கம் முடிவுக்குக் கொண்டு வந்தார்.



**பண்டிதர்:** அது சரி இப்ப யாழ்ப்பாணத்தை நோக்கி ஏகப்பட்ட வெளியார் சுற்றுலா வருகினம். இந்த நேரத்தில எங்கட வடபுலத்தில பார்க்கக்கூடிய இடங்களைக் காண்பிக்க வேணும். இது தொடர்பான விழிப்புணர்வுகளை யாழ்ப்பாண நகரத்தில காட்சிப்படுத்தினால் நல்லா இருக்கும்.

**விதானையார்:** வடபுலத்தில சுற்றுலாப் பயணிகள் பார்க்கக்கூடிய இடங்களின்ர புகைப்படங்களைக் காட்சிப்படுத்துவதோட சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவு போன்ற இடங்களுக்குச் செல்லக்கூடியதான ஏற்பாடுகளும் செய்யப்படவேணும்.

**கங்காணி:** சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவு போன்ற இடங்களுக்குச் செல்வதால் நெடுந்தீவில இருக்கிற மக்களின்ர பொருளாதாரமும் பலப்படும்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** நெடுந்தீவைப் பொறுத்தவரை அங்க பனை வளம் ஏராளம். ஒடியல், புளுக்கொடியல், பனாட்டு என்பவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு விற்கக் கூடியதாக இருக்கிறதோட, நல்ல கருவாடுகளையும் நல்ல விலைக்கு விற்கமுடியும். இது நெடுந்தீவில இருக்கிற மக்களின்ர பொருளாதாரத்திற்கு உதவுகிறதோட பனை வள உற்பத்தியிலும் அவர்கள் ஆர்வப்படுவதற்கு உந்துசக்தியாக இருக்கும்.

**சாத்திரியார்:** இப்ப வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறதில அதீத ஆர்வம் காட்டுகினம். அதைவிட யாழ்ப்பாணத்தில உள்ள சாப்பாட்டுக் கடைகளில வெள்ளைக்காரர் அநேகர் சாப்பிடுகிறதைப் பார்த்திருக்கிறேன்.

**விதானையார்:** சாத்திரியார் சொல்லுற மாதிரி நானும் அதை அவதானித்திருக்கிறன். வெள்ளைக்காரர் எண்டால் கரண்டியாலதான் சாப்பிடுவினம். அதுபோல நாங்களும் கரண்டியால சாப்பிடுகிறதுதான் நாகரிகம் எண்டு நினைத்ததுண்டு. ஆனால் வெள்ளைக்காரர் யாழ்ப்பாணத்துச் சாப்பாட்டுக் கடையில கையால சாப்பிட்டு விட்டுப் போகினம்.

**வாத்தியார்:** கடவுள் படைத்த கையால சாப்பிடுகிறது தானே இயற்கை. இதால தானே வலது கையில தங்க மோதிரம் அணிந்தவியள்.

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** இஞ்சே மூப்பர் வலது கையில தங்க மோதிரம் அணிவதற்கும் ஒரு காரணம் உண்டு. வலது கையால சாப்பிடுகின்ற போது மிக நுண்ணியதாக கையில இருக்கிற தங்கமும் எங்கட உடம்புக்குள்ள செல்லுது. தங்கபஸ்பம் என்பது சித்த மருத்துவத்தில முக்கியமான மருந்து. வலது கையில மோதிரத்தை அணிந்து கொண்டு கரண்டியால சாப்பிட்டால் தங்க பஸ்பம் எப்படி உடம்பிற்குள்ள போகும்.

**பண்டிதர்:** இம். கரண்டியால சாப்பிட்ட வெள்ளைக்காரர் இப்ப கையால சாப்பிட, நாங்கள் இப்ப கரண்டியில்லாமல் சாப்பிடமுடியாமல் இருக்கிறம். கெடுகாலம் நாகரிகம் என்ற மோகத்தில நல்லதை எல்லாம் இழந்து போகிறம்.

**விதானையார்:** சாட்டிக் கடலில குளிக்கப் போகிறவர்கள் அங்க சரியான வசதிகள் இல்லையெண்டு குறைபடுகினம். ஆண்கள், பெண்கள் உடை மாற்றுவதற்கு தனித்தனி இடங்கள் கப்பல் வடிவில அமைக்கப்பட்டிருக்கிற போதிலும் அந்தப் பக்கம் ஒருத்தரும் போக முடியாத அளவில அந்த இடம் கைவிடப்பட்டுள்ளதாக அங்கு செல்லும் பலரும் குறைகூறுகினம்.

**சாத்திரியார்:** கடவுளே! தீவுப்பகுதியில சுற்றுலாப் பயணிகள் செல்லக்கூடிய ஒரு முக்கியமான இடமாக சாட்டிக்கடல் தான் இருக்குது. அதையும் சரியாகப் பராமரிக்கவில்லை எண்டால் என்ன செய்யிறது.


**பண்டிதர்:** மட்டக்களப்பில பாசிக்குடா கடல், திருகோணமலையில மாபிள் பீச் என்பவற்றை என்ன அழகாக வைச்சிருக்கினம். ஆனால் நாங்கள் இஞ்ச சாட்டிக்கடலை எந்தக் கவனிப்பும் இல்லாமல் வைச்சிருக்கிறம். கடலில அடைகிற அதாளையை அகற்றுறது கூட நடக்குதில்லை. இப்படி எண்டால் எப்படித்தான் சுற்றுலாப் பயணிகள் சாட்டிக்கு வருவினம்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் இதுபற்றி வேலணை பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுத்து சாட்டிக் கடற்கரையை மிக உன்னதமாக வைத்திருக்க வேணுமென்ற தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்றுவம் என்று வாத்தியார் கூற, அந்தத் தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தனது அரசியல் எதிர்காலத்தை போட்டுடைக்கிறார் டெனீஸ்வரன்

## அமைச்சர்களை மாற்றுமாறு கேட்டது யார் என்று அறிய வேண்டாமா?





தமிழர்களுக்குத் தனி
நாட்டைக் கொடுங்கள்.
அவர்கள் ஐந்தே ஆண்டில்
எங்களால் ஆள முடியாது
நீங்களே வைத்திருங்கள்
என்று எம்மிடம் திருப்பித்
தருவார்கள் என்று இலங்
கைப் பாராளுமன்றத்தில்
சிங்களப் பாராளுமன்ற
உறுப்பினர் ஒருவர் கூறியி
ருந்தார்.

அவர் கூறிய அந்தக்
கருத்தின் தீர்க்கதரிசனம்
இப்போதிருக்கின்ற தமி
ழ்த் தேசியக் கூட்டமைப்
பின் அரசியலுக்கு மிக
வும் பொருந்தும்.

எங்களுக்குக் கிடைக்க
வேண்டிய உரிமைகளை
இல்லாமல் செய்ததுடன்
கிடைத்தவற்றை ஆன முறை
யில் செய்யாமல் தடுத்த பெரு
மையும் கூட்டமைப்பையே
சாரும். இதற்கு வடக்கு
மாகாண அரசு நல்ல உதார
ணம்.

முதலமைச்சர் சி.வி.
விக்னேஸ்வரன் அவர்
களை அரசியலில் இருந்து
வெளியேற்ற வேண்டும்
என்ற ஒரே காரணத்திற்காக,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்
பின் முக்கியஸ்தர்கள் சிலர்
செய்கின்ற திருகுதாளம்
போதுமென்றாயிற்று.

இது விடயத்தில் கூட்ட
மைப்பின் தலைவர் இரா.
சம்பந்தருக்கு சம்பந்தமி
ல்லை என்றாலும் கூட்டமைப்
பின் தலைவர் என்ற வகை
யிலும் நீதியரசர் சி.வி. விக்
னேஸ்வரனை அரசியலு
க்கு அழைத்து வந்தவர் என்ற
அடிப்படையிலும் முதல
மைச்சர் விக்னேஸ்வரனின்
இயங்கு நிலைக்கு மாகாண
சபை உறுப்பினர்களின்
பரிபூரண ஒத்துழைப்பைப்
பெற்றுக் கொடுத்திருக்க
வேண்டிய தார்மீகக் கடமை
இரா. சம்பந்தருக்குரியது. எனி
னும் அதனைச் செய்வத
ற்கு அவர் முன்வரவில்லை
என்பது அவரின் குற்றமா
கப் பதிவு செய்யப்படக்
கூடியது.

வடக்கின் முதலமைச்
சர் வேட்பாளராக நீதியரசர்
சி.வி. விக்னேஸ்வரன் அவர்
களை கூட்டமைப்பின் தலை
வர் இரா. சம்பந்தர் முன்
மொழிந்த போது, அதற்
குச் சிலர் எதிர்ப்புத் தெரி
வித்தனராயினும் அதனை
வெளிப்படையாகச் செய்
வதற்குப் பயந்தனர்.

இரா.சம்பந்தனின் முன்
மொழிவை நிராகரித்தால்,
அது சம்பந்தருக்குக் கோப
த்தை ஏற்படுத்த அவர் அதனை
எங்கோ வைத்துத் தங்க
ளைப் பழி தீர்த்துவிடுவார்.
இது தமக்கு அரசியல்
துறவை ஏற்படுத்தி விடும்
என்ற பயமே அதற்குக் கார
ணமாயிற்று.

இவ்வாறு இரா. சம்பந்
தரை நேரடியாக எதிர்க்க
முடியாதவர்கள் முதலமை
ச்சர் விக்னேஸ்வரனை
எதிர்ப்பது என முடிவு
செய்து சகல வழிகளிலும்
முதலமைச்சருக்கு இடுக்
கண் கொடுத்தனர்.

அதன் உச்சமாக நம்பிக்
கையில்லாப் பிரேரணை
என்ற விவகாரம் அமைந்
தது.

முதலமைச்சருக்கு இடு
க்கண் கொடுத்தவர்கள்
அதனை இன்றுவரை முடி
வுக்குக் கொண்டு வரவி
ல்லை என்பதுதான் மிகப்
பெரும் வேதனை.

மாகாண சபையில் இருக்
கக்கூடிய கூட்டமைப்பின்
இளம் உறுப்பினர்களில்
ஒரு சிலரைத் தவிர
ஏனையவர்கள் ஒன்று
சேர்ந்து ஹோட்டல்களில்
கூடி கள்ளக் கையெழுத்
திட்டு முதலமை சருக்கு
எதிராகக் கடிதம் அனு
ப்புவது, கேள்வி கேட்பது
என்றவாறு தங்களின் எதிர்
ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் காரணமாக வட
க்கு மாகாண சபை உச்ச
மான தனது செயற்திற
னைக் காட்ட முடியாமல்
போனது. தாங்களே எதிர்
ப்புக்காட்டி முதலமைச்
சரின் இயங்கு நிலைக்கு
முட்டுக்கட்டை போட்ட
வர்கள் இப்போது வேறொரு
பாதையில் தங்களது உபா
தைகளை கொடுக்கத்
தலைப்பட்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டம்தான்
முன்னாள் அமைச்சர் டெனீ
ஸ்வரனின் செயற்பாடுகள்
எனலாம்.

வடக்கு மாகாண சபை
யின் உறுப்பினரும் முன்
னாள் அமைச்சருமான
டெனீஸ்வரன் அடிப்ப
டையில் பிழையான ஒரு
வரல்ல. அவர் அமைச்
சராக இருந்தபோது முன்
னாள் போராளிகளின் வாழ்
வாதாரத்திற்கு உதவ வேண்
டும் என்ற நல்ல சிந்த
னையைக் கொண்டிருந்த
வர் என்பது மட்டுமன்றி
அதனைச் செயற்படுத்துவ
திலும் அதி தீவிரம் காட்
டியவர்.

இருந்தும் சொல் புத்தி
கேட்பவர்போல் இப்போது
அவரின் செயற்பாடுகள்
அமைந்திருப்பது வேத
னைக்குரியது.

தனது அமைச்சுப் பத
வியை நீக்கியமை தொடர்
பில் எதிர்வாதம் புரியத்
தொடங்கிய டெனீஸ்வரன்
அது தொடர்பில் தமிழ் மக்
களின் கருத்து என்னவாக
இருக்கும் என்பதையும்
அறிந்திருக்க வேண்டும்.
ஆனால் இனிமேல் தனக்கு
ஓர் அர சியல் எதிர்காலம்
இல்லை என்பது போல
அவரின் செயற்பாடுகள்
வடக்கின் முதலமைச்ச
ருக்கு எதிராக அமை
ந்துள்ளது.

தமிழ்மக்களின் ஒட்டு
மொத்த நம்பிக்கைக்குரிய
வடக்கின் முதலமைச்சரை
நீதி விசாரணைக்கு இழுத்
துச் சென்றாக வேண்டும்
என்று டெனீஸ்வரன் எடு
த்த முடிவு அவரின் அர
சியல் எதிர்காலத்திற்கு
அவரே தீங்கு செய்வதாக
அமை கிறது.

தனது அமைச்சுப் பதவி
பறிக்கப்பட்டமை ஏற்பு
டையதன்று என டெனீ
ஸ்வரன் கருதுவாராயின்,
அதனை அவர் தமிழ்
மக்களிடமே எடுத்துச்
சென்றிருக்க வேண்டும்.
அது அவருக்கு மிகுந்த
செல்வாக்கை ஏற்படுத்தியி
ருக்கும்.

ஆனால் டெனீஸ்வர
னின் செயற்பாடுகள் முத
லமைச்சருக்கு எதிரான
வர்கள் அவருக்குப் பின்
னால் இருந்து அவரை
இயக் குவிக்கின்றனர் என்ற
கருத்துருவாக்கத்தை ஏற்ப
டுத்தியுள்ளது.

உண்மையில் வடக்கு
மாகாண அமைச்சர்களை
மாற்ற வேண்டும். அவர்
கள் மீது விசாரணை நடத்த
வேண்டும் என்று கோரி
க்கை வைத்தவர்கள் தமிழ
ரசுக் கட்சியின் மாகாண
சபை உறுப்பினர்கள். அமை
ச்சர்களை உடன் மாற்று
மாறு எழுத்துமூலமான
கோரிக் கைகளை முதல
மைச்சரிடம் கையளித்து
விட்டு ஒவ்வொரு சபை
அமர்விலும் அமைச்சர்கள்
விடயத்தில் முதலமைச்ச
ரின் நடவடிக்கை என்ன என்ற
கேள்விகளை எழுப்பினர்.

இதன் பிற்பாடே வடக்கு
மாகாண அமைச்சர்கள்
மீதான விசாரணைக்கு
முதலமைச்சர் நடவடிக்கை
எடுத்ததுடன் அது தொடர்
பில் விசாரணைக்குழு
வொன்றையும் நியமித்
திருந்தார்.

நிலைமை இதுவாக
இருக்கையில் எய்தவனை
விட்டு அம்பை நோவதாக
டெனீஸ்வரனின் செயற்பா
டுகள் அமைந்துள்ளன.

தவிர, நிபந்தனை விதிப்
பது என்ற டெனீஸ்வர
னின் அண்மைக்கால நடை
முறையும் பொதுமக்களி
டம் அதிருப்தியை ஏற்படு
த்தியுள்ளது.

உண்மையில் இளம் அர
சியல்வாதியாக இருக்கக்
கூடிய டெனீஸ்வரன் வட
க்கின் முதலமைச்சருக்குப்
பக்கபலமாக இருப்பார்
என்று பலரும் எதிர்பார்த்
திருந்த வேளை, டெனீஸ்
வரனின் செயற்பாடுகள்
இந்தளவு தூரம் மாறுத
லடைவதற்கு என்ன கார
ணம் என்பது தான் புரியா
மல் உள்ளது.

எதிர்காலத்தில் நல்ல
அரசியல் வாய்ப்புக்க
ளுக்கு உரித்தான டெனீஸ்
வரன் முதலமைச்சர் மீது
பகைமை கொண்ட அரசி
யல்வாதிகளின் கபடத்
தனத்திற்கு ஆளாகாமல்
தனது சொந்தச் சிந்தனை
யில் செயற்படவேண்டும்
என்பதுதான் பொது மக்
களின் விருப்பம்.

**திருநீலகண்டன்**

SINGER

யாழ் FIESTA

ஓர் அற்புதமான அனுபவம்

ஆகஸ்ட்

17 18 19

காலை 09.30 - இரவு 09.00 வரை


நுழைவு இலவசம்

யாழ்ப்பாணம்

வீரசிங்கம் மண்டபம்








**துரோகத்தால் மட்டுமே வீழ்ந்தான் தமிழன். உண்மைதானே?**

**ஒரு ஊரில ஒரு ராஜா இருந்தா னாம்...? மிகுதியை சொல்லவும்?**

**கலைஞர் கருணாநிதி தமிழருக்கு ஆற்றிய தொண்டை மறந்திட முடியுமா?**

தாரு — கோணாவில்

**மனைவியின் மனதை வெல்ல ஏதும் ஐடியா. பிளீஸ் மாம்ஸ்?**

காலை, மதியம், இரவு உணவுகளை நீரே தயார் செய்யும்.முடிந்தால் மதியம் மட்டும் மனைவிக்கு ஊட்டிவிடவும். இரவு தவறாமல் கால் அமுக்கவும். மனைவியின் துணிகளை அவள் கண்முன்பே கஷ்டப்படடு துவைக்கவும். முடிந்தால் அவள் விரல்களுக்கு மருதாணி வைத்து அழகு பார்க்கவும். உங்கள் கையடக்கத் தொலைபேசியை அவள் கைக்கு எட்டும் படியோ கண்படும் படியோ வைக்க வேண்டாம். வந்த கோல், சென்ற கோல், தவறிய கோல் என்ற வறுத்தெடுப்பாள் கவனம்.

முடிந்தவரை டயலொக் கம்பனி SMS ஐத் தவிர வேறு எந்த SMS ஐயும் விட்டுவைக்காமல் அழிக்கவும். அது உங்கள் வாழ்வுக்கு உரம் சேர்க்கும்.

தீபன் — துன்னாலை

**எதிர்க்கட்சியிலிருப்பவருக்கு முதல்வர் ஆகும் கனவு உண்டு போலத் தெரிகிறதே?**

உன் கனவிலை தீயை வைக்க. தம்பி தீபன் உயர உயரப் பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகுமா? என்ற பழமொழியை உனக்கு நினைவு படுத்துகிறேன்டா.

கலா — வதிரி

**உங்கள் மனைவியை உங்களுக்கு பிடிக்காது போல. பதில்களில் தெரிகிறதே?**

அம்மா கலா. கலகலப்பாக இருக்கிற என் வாழ்க்கை குளத்தை ஏம்மா கலக்கிறாய்? என் மனைவி என் உரிமை என்கின்ற ஒரே காரணம்தான் உங்கள் கேள்விக்குப் பதில். போதும் இத்தோட நிறுத்திக்கம்மா பிளீஸ். உடலிலையும் மனதிலையும்அடிவாங்கதெம்பில்லையம்மா.

சிவம் — இணுவில்

**கலைஞர் கருணாநிதி தமிழருக்கு ஆற்றிய தொண்டை மறந்திட முடியுமா?**

ஒரு மனிதர் தமிழர்களுக்கு துரோகம் இழைத்தார் என்று கூறி அவர் ஆற்றிய பணிகளை உதாசீனம் செய்வது மனிதாபிமானமற்ற செயல். கலைஞர் கருணாநிதியின் செயல்களில் இரண்டு விடயத்தை இங்கு கூறமுனைகிறேன்.

“வலது குறைந்தவர்கள்” என்ற பதத்தை “மாற்றுத்திறனாளிகள்” எனவும் “அலி” என்ற அடைமொழியை “திருநங்கை” என்றும் மாற்றியமைத்து ரணமாய் எரிந்த அவர்கள் மனங்களில் பாலை வார்த்தவர் கலைஞர் ஐயா அவர்கள். அவரின் பணிக்கு இவை இரண்டுமே போதுமான உதாரணங்கள்.

சயன் — யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வுகள் எப்படி போகிறது?**

ஓ... அங்கு அமர்வு நடக்கிறதா? நானும் அமளி துமளி நடக்கெண்டெல்லோ நினைச்சிட்டன்.

இன்னும் ஆரும் இருப்பினம். யாழ்ப்பாணத்து எல்லைக்கு அங்காலை. அவர்களுக்கும் வழக்குப் போட்டு வீட்டுக்கு அனுப்பிட்டு வீட்டுக்குள்ள கிடந்து குத்துப்படுங்கோ ராசாக்கள். மக்கள் சேவைக்கு வந்தவயள் மக்களை தங்கடை சேவைக்கு அழைக்கிற நிலை வந்திட்டு. எல்லாம் காலக்கொடுமை “இதுக்குத்தானேடா ஆசைப்பட்டாய் இராஜகுமாரா”




அருள் — வதிரி

**ஒரு ஊரில ஒரு ராஜா இருந்தானாம்...? மிகுதியை சொல்லவும்?**

அந்த ராசாவுக்கு எப்பவும் தனக்குப் பின்னுக்கு நாலு அல்லக்கைகள் நிக்கவேணும் எண்ட ஆசையாம்.

எல்லாத்துக்கும் முந்திரிக் கொட்டையாய் தான் தான் முன்னுக்குத் தெரிய வேணும் எண்டுறத்துக்காக இந்த அல்லக்கையைத் தூண்டி விட இவர்களும் வாங்கின லெக் பீசுக்காக அவையிலும் சரி சபையிலும் சரி வாக்கு வாக்கு எண்டு கத்திக் கொண்டு இருந்ததுகளாம்.

கணக்கா அரசைத் தெரிவு செய்யிற நேரம் வந்துதாம். மக்கள் எல்லாம் அந்த ராசாவுக்கும் நாலு அல்லக்கைகளுக்கும் நல்ல பாடம் படிப்பிச்சுதாம். அதன் பின் அந்த தேசம் அமைதிப் பூங்காவாய் இருந்ததாம். (யாவும் கற்பனை)

றெனெக்ஸ்

**சோடாவை விட மதுவின் விலை குறைவே?**

குடிமகனே பெரும் (வடக்கு) குடிமகனே நான் கொடுக்கட்டுமா உனக்கு கொடுத்து எடுக்கட்டுமா கொஞ்சம் எனக்கு (தெற்கு)

தர்மா — சுழிபுரம்

**அடித்துக் கொண்டவன் அன்பாய் வந்து பேசுகிறான் என்றால் அதன் அர்த்தம் என்ன வியா?**

அவதானமாய் இருக்க வேண்டும். எதிரி மன்னித்தால் அணைத்துக் கொள்வான். துரோகி நெருங்கி வந்து அணைக்கிறான் எனின் எம் முதுகைத்தடவிப் பார்க்கிறான் என்று பொருள். சமயம் பார்த்து கத்தியெடுத்துக் குத்தி விடுவான் கவனம்.

தோஜி — கிளிநொச்சி

**துரோகத்தால் மட்டுமே வீழ்ந்தான் தமிழன். உண்மைதானே?**

எனக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார். கிணறு கட்டும் வேலை செய்பவர். ஒரு உடைக்க முடியாத கல்லை ஐந்து பேர் மாறி மாறி அடித்துக் கொண்டிருப்பார்கள். சரியாக உடையும் நேரம் பார்த்து அவர்களிடம் மடத்தலைப் பறித்து இரண்டு அடி அடிப்பார். கல் உடையும். வீரன் என்ற பெயர் பெறுவர்.

அதுபோல்தான் ஒருவனுக்கு பத்துப் பேர் சேர்ந்து அடித்துவிட்டு அதை வெற்றி என்று பீத்திக் கொள்வது சிரிப்பிற்குரியது.

கேதீஸ் — மாவிட்டபுரம்

**தமிழ் நாட்டின் தலைவிதி இனி யார் கைகளில்?**

என் உயிரிலும் மேலான தமிழ் மக்களே என்றார் அம்மா. தமிழர்களே தமிழர்களே என்னை நீங்கள் கடலில் போட்டாலும் நான் கட்டுமரமாக மிதப்பேன். அதில் நீங்கள் பயணிக்கலாம் கவிழ்ந்து விடமாட்டேன் என்றார் கலைஞர். அந்த இரண்டு இடமும் பாரிய வெற்றிடம் தான். அதை நிரப்ப இப்போதைக்கு ஆள் இல்லை என்பது தான் உண்மை.

தமிழன் — யாழ்ப்பாணம்

**கலைஞர் கருணாநிதியின் இறப்பால் சந்தோசம் காண்பது சரியா?**

எங்கள் இனத்தின் இறப்பில் இன்னொருவன் களியாட்டம் போட்டு எம்மை சிதைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டு சிரித்து புகைப்படத்துக்கு போஸ் கொடுத்தான் என்று தானே போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்று இன்று வரை கத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னொருத்தர் இறப்பைக் கொண்டாடும் எமக்கும், எம்இறப்பைக் கொண்டாடிய அவருக்கும் என்ன வித்தியாசத்தைக் கண்டுவிட்டீர் மக்களே.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## வயோதிபம் ஓர் சுமையா?

வயதாகிப் போனதால் உங்கள்
வாழ்க்கை வெறுத்துப் போனதோ
வாழ்க்கையில் வருவது வயதல்ல
வாழ்ந்து பார்க்கனும் வயதான காலமதில்

வயோதிப இல்லங்கள் ஏன்தான் தோன்றியதோ
வருவதை அறியாத வளர்த்த பிள்ளைகளை
உறவுகளை இழந்து உருக்குலைந்து போனதோ
உன்னை நீ திரும்பிப் பார்
உனக்கு எங்கே நேரம் தம்பி

மூத்த பிரஜைகள் தினமாம்
முழுநாடும் கொண்டாடும் போது
மூத்தமகன் நீ முடிவாக செயற்பட
முடியர்மல்தான் பேரனதடா தம்பி!

தனா

## குந்தியழுவது எம் தலைவிதியா?

குந்தியழுவது எம் தலைவிதியா?
நாமென்னகுந்திதேவியின்
பரம்பரையா சிந்திய குருதிகள்
காய்ந்த மண்ணில்
இன்னமும் கண்ணீர் வற்றாமல்
எம் வாழ்வுநாட்கள் பல
கடந்தும் நம் துயர் தீர்க்க
யாருமில்லை தந்தவலி
வந்தவழி மறந்தவராய்
நீங்கள் உங்களை நம்பி
நடுத்தெருவில் நாங்கள்

புலோலியூர்
வேல்நந்தன்

## தவிப்பு

எனக்காக நீ என்றும்
உனக்காக நான் என்றும்
இறைவன் போட்ட முடிச்சு
இதை யாராலும் அவிழ்க்க
முடியாதென்று
நினைத்த வேளைதனில்
மூன்று முடிச்சு போட்ட- என்னவரை
முள்ளிவாய்க்காலில்
முகவரி இல்லாமல்
போனதேனோ

இடைக்காடு த.செல்வமலர்



## நீளும் இரவுகள்

கதிரவன் காலையில்
எனக்குமுன் முழிச்சிட்டான்
மக்கிய செத்தையை
தாண்டிய அவனொளி
நெத்தியில் பட்டதும்
கெட்டது கண்ணொளி

சக்கரை முடிஞ்சிட்டு
சாயந்தான் போட்டனான்
ஆத்திய தேத்தண்ணி
ஆறுது ஒழும்பெண்டு
ஒரொலி ஒலிக்கையில்
கோயிலில் மணியொலி

ஓ... வெள்ளிக்கிழமையோ...
கனவுகள் நீண்டதால்
கிழமையும் மறந்திட்டு

பனையோலை வேலிகள்
பதிஞ்சுதான் போட்டுது
பாதையில் நடப்பதும்
பளிச்செண்டு தெரியுது

அட யாரவள்...?
தேவதை வருகையும்
தெருவிலே நடக்குமோ...?
பூந்தென்றல் பூவாகி
முன்பள்ளி போகுமோ...?

செவ்வரத்தம் பூக்கொண்டை
உச்சியை உரசிட
உயிரிலே உதைத்தவள்
முடக்கிலே மறைந்திட்டாள்

ஒவியமே...! என்று
வந்தது கவியொன்று
வடித்துவிட வேண்டுமெண்டு
வருடினேன் காகிதத்தை...

அன்னையின் அவலமொழி
அடிநெஞ்சில் ஒலித்திட
வந்த கவி அனைத்தும்
வந்தவழி மறைந்திட...
மீண்டும் உதித்தது
கவியொன்று
விடியாத இரவென்று...

கரவையூர் கானல்

## வாள் எடுத்த ராசாவே 06

வாள் எடுத்து பிறர்
வாழ்வழிக்கும் ராசாவே

வன்னியில் எம் இனம்
வதைபட்டுச் சாகையில்
உனக்கு வயது ஒன்பதடா

அந்நியர் எம்மை
அழித்தொழிக்கின்றார் என
நான் விம்மி அழுத போது
எதுவும் விளங்கிக்கொள்ளாமல்
விளையாடித் திரிந்தாயே!

இன்று பிறர்
எள்ளி நகைக்கும்படி
ஏளனம் செய்யும் படி
ஏனடா மாறினாய்

போதைப்பாக்கை உன்
வாய்க்குள் புதைக்கையில்
பேதை உன் தாயவளை
நினைக்காததேனோ?

அன்புமொழி பேசும் உன்
அகண்ட முகத்திற்கு
முகமூடி போடுகையில்
அன்புக்கு ஏங்கும் தந்தை
நினைவில் வரலையோ?

முன்னோக்கிச் செல்லும்
உன் மோட்டார் சைக்கிளின்
இலக்கத்தை மறைக்கையிலே
இருண்டு கிடக்கும் எம்
இல்லம் நினைவில் வரலையோ

நீ வாள் எடுத்தாய்
ஊரார் எமை வசைபடித்தார்
வீணாய்ப் போய்விட்டதடா
வீரன் என்ற உன் வீராப்பு

(அடுத்தவாரம் ராசா வருவான்...)

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 408



## காத்திருப்பு

காணாமல்போன அப்பா
எப்போது வருவார் என்றும்
கூலி வேலைக்கு சென்ற
அம்மா எப்போ வருவார்
கண்கள் இரண்டும் செம்மல் விழ
சோற்றுப்பானையை
எட்டிப் பார்த்தேன்
ஒன்றையும் காணவில்லை
தெருவில் பூட்டிய குழாய் நீரில்
வயிறு முட்ட நீரருந்தி
காத்திருக்கின்றேன்
பாதையோரத்தில்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய்

## வளமான வழி

பாதையில் நீ
பாத்திருப்பது யாரை
பயணத்தை தொடர
பாதையை மறந்தாயா?

வந்தவர் உன்னை
காத்திருக்க வைத்தாரா?
வழிதவறி நீ வந்தாயா- போக
வகையின்றியிங்கே இருந்தாயா?

வருவதும் போவதும் இயல்பு
வந்த வழியை மறப்பது தவறு
வாழ்வை நீ வளப்படுத்த
வளமான வழியை நாடு

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி.

## மாறாத வாழ்க்கை

தாய் தந்தையரை போரில் இழந்து
அநாதையாய் தண்டவாளத்தில்
அமர்ந்திருக்கும் சிறுவனே
நல்லாட்சிக் காலத்திலும்
உன் வாழ்க்கை மாறாததை கண்டு
நம் கண்கள் கண்ணீரல்ல
இரத்தமே வடிக்கிறது

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## எதிர்காலம் எவ்வாறமையும்

அன்னை மடிசுமந்து
அன்போடரவணைத்து
உதிரத்தைப் பாலாக ஊட்டி
பாசத்தோடு வளர்த்த இவன்
இன்று உண்ண உணவின்றி
உறங்க இடமுமின்றி
பெற்றோர் உறவினரை இழந்து
ஆதரிப்பார் யாருமின்றி
கண்கலங்கித் தவித்த நிலையில்
உடைந்த போன கட்டடத்தில்
தனித்திருந்து சிந்திக்கிறான்
எதிர்காலம் எவ்வாறமையுமென்று

துரை, தென்மட்டுவில்

## துணிவு

துன்பம் உன்னைத் துரத்தும்
சிறுமை உனக்கு சவால்விடும்
ஏழ்மை உன்னை அச்சுறுத்தும்
வறுமை உன்னை வாட்டும்
கால்கள் கனக்கும்
ஆனாலும் உன் பயணம் முடியாது
போராடு ஆனால் சோறாதே
துணிந்து செல் வெற்றி சேரும்
இளம் இரத்தம் பயமறியாது

ஆ.நிருஷினி
யா.சுண்டுக்குழி.ம.க.

## நாயகன்

புகையிரதப் பாதையிலே
தவித்து நிற்கும் தம்பியே!
உன் உறவுகளைத்
தேடுகின்றாயா?- இல்லை
உன் பசியாற தொழில்
தேடுகின்றாயா?
எதுவாயினும் சரி
உன் வறுமை நீங்கும்
நற்பிரஜையாக நீ
வாழ்வதற்கு நீயே
உன் ஆளுமையை
தேடிக்கொள்!

அபிகுலமர்லிகா
சங்கானை

# இவ்வார மௌனத்தின் தேடல் -409



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## பள்ளி செல்லப் பாதை உண்டா

வாழ்வின் ஓரத்திற்கே
வந்ததிந்தக் குழந்தைக்கு
தாழ்வு மனம் வாராதா
தக்கோரும் இல்லாரா

பாவ வயிற்றுக்குப்
பசி கிடக்கத் தெரியாதா?
காவலுக்கு யாரிருக்கார்
கண்ணுடையோர் பாருமிதை

கல்வி கற்க வழிகாட்டக்
காருண்யரே கைகொடுங்கள்
நல்லவழிதான் பிறக்கும்
நும் மழலையைதாய் பாருங்கள்

வாகை வளவன்
நாரந்தனை

## போக வழிதெரியுதில்லை

பெற்ற தாயும் எனக்கில்லை
பிதிர்க்கடனும் ஆகியதும்
கற்றவராம் என் தந்தை
கடுதில்.மறுமணம் முடித்து
விற்றவனாய் என் வாழ்வை
வேதனைக்குள் வீழ்த்தியவர்
உற்றவரோ யாருமில்லை
ஊர் பேரும் தானுமில்லை

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## எதிர்பார்ப்பு

கலைகள் பல கற்றுத் தேர்ந்து
கண்ணியமாய் ஒழுக்கம் கொண்டு
காலவோட்டத்தில்
பல கண்டுபிடிப்புக்களை
கண்டுணர்ந்து நாளை
ஒரு விஞ்ஞானி என
நற்பெயரெடுக்க விரும்பும்
இச்சிறுவனின் எண்ணங்கள்
எப்போது நிறைவேறும்

உமா, வேல்முருகன்

# மறவாத நாள்

அடுத்து அடுத்து இடம்பெயர்ந்து அலுத்துப் போன அருமை. அப்பாடா என்று பெருமூச்சு விட்டபடி அடர்ந்த பெரிய மரமொன்றின் கீழ் தனது பிள்ளைகளையும் மனைவியையும் அமரச் செய்துவிட்டு தன்ர பழைய சைக்கிளில் கொழுவிக் கிடந்த பையை எடுத்துத் திறந்தான். முதல் நாள் இரவு அந்த இருட்டு மடு பனையடியில் இருந்த வேளை சுட்டுத் தின்ற ரொட்டியில மூன்றும் அருமையின் முகத்தைப் பார்த்து முளிச்சுக் கொண்டிருந்தது. கடவுளே! நீ தான் துணை ஏதோ பிள்ளையளின்ர பசியைப் போக்க இப்போதைக்கு இது காணும் என்று ஒரு பெருமூச்சை இழுத்து விட்டுக்கொண்டு மெள்ளக் கையில் பைக்குள் விட்டுப் பக்குவமாக எடுத்துப் பிய்த்துப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு மனைவியைத் திரும்பிப் பார்த்தான். மனைவியோ நிறைமாதக் கர்ப்பிணிப் பெண். கண்கள் குழிவிழுந்து களைத்துப் போய் வியர்த்த முகத்தோடு கணவனை அண்ணார்ந்து பார்த்தாள். "எனக்கு வேணாமுங்கோ பிள்ளையளுக்கு குடுங்கோ" என்று சொல்லிவிட்டு தன் வயிற்றைக் கையால் தடவி விட்டாள். வானொலியில் செய்திச் சுருக்கம் போய்க் கொண்டிருந்தது. காதைக் கொடுத்தவள் "கேட்டியளே காதைக்குடுங்கோவன்" ரேடியோவில ஏதோ சொல்லுறாங்கள் என்றாள். அருமை ரேடியோ சத்தத்தைக் கொஞ்சம் கூட்டிக்கொண்டு காதைக்கொடுத்தான். "சற்றுப் பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்" என்று வானொலியில் சொல்லவும்- வானில் கிபீர் வானூர்தி பறக்கும் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது. எதற்கும் கவனம் அங்காலை கொஞ்சம் தள்ளிப் போய் இருப்பம் என்று சொல்லிக் கொண்டு அருமை தன் பழைய சைக்கிளில் பொருட்களை வைத்து கட்டிக் கொண்டு நடக்கலா னான்.

அன்றும் பொழுது ஒருவாறு மறைந்து இரவும் ஓடிப் போய் காலை சூரியன் தமிழ் மண்ணில் நடப்பவற்றை காணச் சகிக்காதவன் போல் முகில் கூட்டங்களில் மறைந்தும் தெரிந்தும் புலரத் தொடங்கினான். பிள்ளைகளை கையில் பிடித்தவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மனைவியையும் மெள்ளப் பிடித்தபடி சுதந்திரபுரத்தை நோக்கி நடக்கலானான். ஏதோ சுதந்திர மாக பத்து நாட்கள் இருக்கலாம் என எண்ணிய அருமை. நாலு மைல்கள் நடந்திருப் பான் போதும் இனியும் பிள்ளைகளும் மனைவியும் நீண்ட தூரம் நடக்க முடியாது என உணர்ந்தவன் ஓர் மர நிழலில் தான் கொண்டு சென்ற தறப்பாளை இழுத்துக் கட்டிக்கொண்டு பொருட் களையும் வைத்துவிட்டு அப்பாடா என அமர்ந்தவன் ஒரு நாலு நாட்கள் இருந்திருப்பார் கள். அடுத்தும் ஓர் அறிவிப்பு. உண்டது பாதி, உண்ணாதது பாதி. பிள்ளைகளையும் மனை வியையும் அழைத்துக்கொண்டு தூரச் செல்வதே நல்லது என்று மனதுள் எண்ணியவன் மாத்தளன் கடற்கரையை அடைந் தான். அப்பாடி இனி எதுவும் செய்ய முடியாது எல் லாம் ஆண்டவன் செயல் என்ற கடற்கரையை அண்டிய ஓர் ஆலமர நிழலின்கீழ் தறப்பாளைக் கட்டிக்கொண்டு அங்கு இருக்கலானான். அவன் மட்டுமல்ல ஆயிரக்கணக் கான சனங்கள் அயலயலாக கூடாரங்களை அமைத்து கொண்டிருந்தனர். அருமையும் ஏதோ தன்னிடம் உள்ளதை காய்ச்சி மூட்டி பிள்ளைகளோடு இருந்து காலத்தைக்கழிக்கலாயினர்.

நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. எங்கும் வெடியோசை கேட்ட வண்ணமிருந்தது. எங்கும் புகை மண்டலமாக காட்சியளித்தது. கடற்கரை யோராங்கள் மக்கள் வெள்ளமாகக் காட்சிய ளித்தது. தரையிலும் கடலிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்த வண்ணமிருந்தது. எங்கும் வெடியோசை. அருமையின் மனைவி பிரசவ வேதனையில் துடித்துக்கொண்டி ருந்தாள். இடையிடையே ஷெல் அடியில் காயப்பட்டவர்கள் காவு வண்டிகளில் வைத்தியசாலையை நிறைத்துக் கொண்டிருந்தனர். மாத்தளன் வைத்திய சாலை ஓர் சிறிய பாடசாலையாக இருந்தது. நோயாளர்களை அடக்க முடியாமல் இட நெருக்கடியால் காயப்பட்டவர்களை மர நிழல்களில் படுக்கவைத்து சிகிச்சையளிக் கப்பட்டுக்கொண்டிருந் தனர். அருமையும் தனது மனைவியை பிரசவத்திற்காக வைத் தியசாலையில் அனுமதித்திருந்தான். வைத்தியர்கள் செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். காயங்கள் தாங்க முடியா மல் நோயாளிகளின் அழுகுரல் வானைப் பிளந் தன. பெரும் காயங்கள் பலரின் உயிரைக் காவுகொண்டன. விளா மரத்து நிழலில் பிணங்கள் குவிந்து கிடந் தன. உறவினர்கள் ஓலமிட்டுக் கொண்டி ருந்தனர். இறந்தவர்களை அடக்கம் செய்ய முடியாமல் சொந்தங்கள் கலங்கினர். தொண்டு நிறுவனங்கள் தோள் கொடுத்து உதவினர். மக்களின் வாழ்விடங்களும் புதைகுழிகளும் ஓரிடமாகின. கடல் அலை போல் மக்கள் வெள்ளமும் காட்சியளித்தது. அந்த நாட்களை என்றுமே மறக்கமுடியாமல் இருந்தது அருமைக்கு. அன்று மாலை 4.30 மணியள வில் அருமையின் மனைவியால் பிரசவ வலி தாங்க முடியாமல் அவதியுற்றாள். அவலம் நிறைந்த அழுகுரல்க ளின் நடுவே அருமையின் மனைவி அழகான பெண் குழந்தையொன்றைப் பெற்றாள்.



துன்பத்திலும் இன்பம் என்பது போல் அருமைக்கு பெரும் மகிழ்வாக இருந்தாலும் அயலவர்களின் சோகம் அவனின் மகிழ்வைத் தடுத்தது. மரணங்கள் நிறைந்த அந்த நாள் என்றும் மறவாத நாளாகவே காணப்பட்டது. அருமையின் குழந்தைக்கு இன்று பத்து வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அந்த மே 18 இன்றும் அருமையின் நினைவை விட்டு விலகாமல் ஓடிக்கொண்டேயிருந்தது. மகளை மாத்தளன் குட்டி எனச் செல்லமாக அழைக்கும் போதெல்லாம் அருமை அந்த மறவாத நாளை நினைத்தவாறே காலத்தை ஓட்டலானான்.

யாவும் உண்மை நிறைந்த கற்பனைக் கதையே!

**கணபதிதாசன்**
**தர்மபுரம்**

சிறுகதை

# புதிய பயணம்



காலைத் தென்றல் முகத்தில் மோதியது. வங்கக் கடலலை பேரிரைச்சலாய் பயங் காட்டியது. சாவித்திரி நித்திரையில் இருந்து எழுந்து சோம்பல் முறித்தாள். வெளியில் வந்து முற்றத்தில் நின்றாள். வானம் கறுத்திருந்தது அவள் மனதைப் போலவே.

மனமெங்கும் இனம்புரியாத வேதனைச் சுமை. வீட்டுக்குள் நித்திரையாய் இருந்த பிள்ளைகளை நினைத்துப் பார்க்கையில் துயரம் பீறிட்டெழுந்தது. என்ன செய்வது காலத்தின் நிர்ப்பந்தம் அவர்களை வறுமைக்குள்ளும் இழப்புக்களுக்குள்ளும் சதிராட வைத்து விட்டிருக்கிறது.

சாவித்திரி கிழக்குக் கரையில் தமிழ் மரபிலே பொருளாதார வளம்மிக்க குடும்பமொன்றில் பிறந்த தலைப்பெண். அலையாட கடலெழும் அழகை, அதனோரம் உள்ள உப்பான துறையை . நெய்தல் நில அழகை ரசித்தபடி ஒரு வானம் பாடியாய் வாழ்ந்திருந்த பெண்.

மிகையான பொருளாதாரமும் மிதமான வசதிகளும் கொண்ட குடும்பத்தின் தலைப்பெண்ணாய் வளையவந்த அந்த இளமைக்காலங்களை நினைத்துப் பார்க்கையில் விழிநீர் பீறிட்டது.

அவள் வாழ்ந்த மண்ணில் மலர்ந்திருந்த மகிழ்ச்சிகள் கொள்ளையிடப்பட்ட அந்த நாள்- நினைக்கவே அடிவயிறு சில்லிட்டது. இரண்டாம் கட்ட ஈழப்போர்க்காலத்தில் ஓர் பின்னிரவில் அவள் குடும்பம் சிதைந்து போனது. தொண்ணூறின் நடுப்பகுதியில் எங்கிருந்தோ குவிக்கப்பட்ட இராணுவத்தாலும் சுற்றிவளைப்புக்கள், கைதுகளாலும் பல அவலங்களைக் கண்டது கிழக்குக்கரை. வெளியில் சென்ற ஆண்கள் வீடு வரவில்லை; வீட்டில் இருந்தவர்கள் எங்கோ விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள். போகுமிடங்களில் நிலக்கண்ணி, துப்பாக்கிவெடி என்று பல வகைகளிலும் பலியாகிக் கொண்டிருந்தது இந்தச் சமூகம்.

அப்போதுதான் சாவித்திரியின் பெற்றோர்களும் ஓர் போர்க்காலப் பின்னிரவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது துப்பாக்கிகளின் சீற்றத்துக்கு ஆளாகி சிவப்பு சடமாகிப் போனார்கள். சாவித்திரி அந்த இழப்பைத் தாங்கமுடியாது எத்தனை துடிதுடித்தாள். தமிழ்ச் சமுதாய உடைவுகளிலும் சிதைவுகளிலும் அவளும் அங்கமாகிப் போனாள். கிழக்குக் கரையில் போர் உக்கிரமடைந்தது.

திடீரென அவள் வாழ்ந்த மண்ணில் ஒரு குருஷேத்திரம்- வீடு, வாசல் சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓர் இடம்பெயர்ந்த அகதியாய் வாழத்தொடங்கி வெகுகாலமாகி விட்டிருக்கிறது.

இழப்புக்கள்- தொடர்ச்சியான இழப்புக்களை அவள் சந்தித்தாயிற்று. பெற்றோரை இழந்து நின்ற போது அவளுக்கு உறுதுணையாய் நின்ற தம்பிகூட சுற்றிவளைப்பொன்றில் கைது செய்யப்பட்டு காணாமல் போனான்.

இந்த மாபெரிய உலகத்திலேதான் தனித்துவிடப்பட்டதாய் உணர்ந்தபோதுதான் வாகீஷனை அவள் சந்தித்தாள். ஒரே ஊரவர்கள் எனும் அறிமுகம். வாகீஷன் தலைநகரில் மிகவும் பொறுப்பான பதவியில் இருந்தான். அடிக்கடி ஊருக்கு வந்து போவான். அவர்களிடையே ஏற்பட்ட அறிமுகம் பின்னர் காதலாகி திருமணம் வரை சென்றது.

தொடர்ச்சியாக தாய், தந்தை, தம்பி என இழப்புக்களைச் சந்தித்த சாவித்திரி வாகீஷனின் உறவினாலும் அன்பினாலும் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு வரத் தொடங்கினாள். க.பொ.த. உயர்தரம் வரை கற்றிருந்த சாவித்திரி பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் கூட அதை இலட்சியம் செய்யாது திருமணமே முக்கியமெனத் தீர்மானித்து ஓர் இல்லத்தரசியாய் மாறினாள். காலம் வேகமாக ஓடியது. எவ்வித துன்பங்களுமற்று அந்தக் குடும்பம் மகிழ்ந்திருந்தது. அழகாய் இரு குழந்தைகள் பிறந்தார்கள்.

கிழக்குக் கரையில் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. வாகீஷனுக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்குள் தொழில்மாற்றம் வந்தது. தினமும் பல மைல்தூரங்களை மோட்டார் சைக்கிளில் கடந்து வாகீஷன் வீட்டுக்கும் தொழிலிடத்துக்குமாக அல்லாடிக் கொண்டிருந்தான்.

திடீர் திடீரென எங்காவது துப்பாக்கி யோசை எழும். மனிதர்கள் குருதியில் நனைந்திருப்பார்கள். பின்னர் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், விசாரணைகள் நடக்கும். இப்படியாக ஓர் போர்ச்சூழல் எப்போதுமே சதிராடிக் கொண்டிருந்தது அந்த மண்ணில்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சீவனம் நடத்தும் அப்பிரதேச மக்களைப் போலவே அவர்களும் சீவித்தார்கள். கணவனே உலகமென சாவித்திரி வாழ்ந்திருந்தாள். அவளுக்கான சகல வேலைகளையும் வாகீஷனே செய்துவந்தான். வீடு மட்டுமே அவளது உலகமாய் குறுகிப் போனது. பிள்ளைகள் வளர ஆரம்பித்தார்கள், அவர் சிறப்பான தாயாய், மனைவியாய் தன் பணிகளைச் செய்து கொண்டிருந்த போதுதான் அந்தக் குடும்பத்திற்கு கஷ்டம் வரத் தொடங்கியது.

வாகீஷனுக்குத் திடீரென சுகயீனம் ஏற்பட்டது. அதனால் தொழிலுக்குச் செல்ல முடியாமல் போனது. குடும்பத்தில் பொருளாதாரப்பற்றாக்குறை எழத்தொடங்கியது.

சாவித்திரி அவனைத் தேற்றினாள். வயல்களையும் தோட்டங்களையும் சரியாகப் பராமரித்தால் நாம் கஷ்டப் படத்தேவையில்லை என்றாள். இதுபோலவே இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துள் இருந்த வயல் தோட்டங்களைப் பராமரிக்க வாகீஷன் ஆள் நியமித்தான். இடையிடையே தானும் போய் வந்தான். குடும்பத்தின் கஷ்டம் மறையத் தொடங்கிய போதுதான் அந்தப் பேரிடி இடித்தது.

ஆம், வயல் பார்க்கச் சென்ற வாகீஷனை அவள் சிவப்பு ஜடமாகத்தான் கண்டாள். அதிகாலையில் அவன் சென்றபோது போராளிகளுக்காக பதுங்கியிருந்த இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு வாகீஷனே பலியாகிப் போனான்.

அதோடு சாவித்திரி நிலை குலைந்து போனாள். தாய், தந்தை, தம்பி, கணவன் என்று தொடர்ச்சியாக இழப்புக்களைச் சந்தித்த சாவித்திரி தமிழ் சமுதாய சாபக்கேடுகளில் ஒருத்தியாகிப் போனாள். என்ன செய்வது? எங்கே போவது? எதுவுமே தெரியாத பேரிருள் அவள் முன்னே.

இரு குழந்தைகளுக்காக அவள் உயிர் வாழ்ந்தேயாக வேண்டும் எனும் நிர்ப்பந்தம். என்ன செய்வது அவள் வாழவே தீர்மானித்தாள் தன் பிள்ளைகளுக்காகவாவது.

எத்தனை வசதியாய் வாழ்ந்திருந்தாள். எத்தனை அழகான குடும்பம் அவளுடையது. எல்லாவற்றையும் சிதைத்து சின்னாபின்னப்படுத்தியது இந்தப் போர். பெற்றோரே உலகம் என வாழ்ந்திருந்த சாவித்திரி, பின்னர் கணவனே உலகம் என வாழ்ந்திருந்த சாவித்திரி இப்போது தனித்து நிற்கிறாள்.

அவள் சார்ந்து வாழ்வதற்கான ஆண் துணை இல்லை. இந்த மாபெரிய உலகில் ஓர் பெண்ணாய், ஓர் தாயாய், ஓர் விதவையாய் தனித்துவிடப்பட்ட சாவித்திரி வாழத்தான் போகிறாள். தன்னையும் காத்து தன் பிள்ளைகளையும் காக்கப் போகிறாள்.

அவளுடைய கல்வி அவளுக்குக்கைகொடுத்திருக்கிறது. அவள் சந்தித்த தொடர்ச்சியான இழப்புக்கள் அவளை நிர்ப்பந்தித்து இந்த உலகில் ஓர் பெண்ணாக தனித்து நின்று போராட அனுப்பியுள்ளது. ஆம், இன்று ஓர் ஆசிரியையாய் புதிதாக வேலையில் அமரப் போகிறாள். எதிர்வரும் எல்லாத் துயர்களையும் அவள் சந்திக்கத் தயார்.

**பூ.தனுஜா**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்**

# ஒரே அடி, ஒரே கடி, ஆள் காலி- கொடிய விலங்குகள்

**விலங்குகளின் கோபத்திற்கு சிறியது, பெரியது என்ற உருவ வித்தியாசம் கிடையாது. யாரை வேண்டுமானாலும் எப்போதும் தாக்கக் கூடியது. பெரிய விலங்கு மட்டும்தான் சிறியவற்றை தாக்கும் என நினைப்பது தவறு. உருவத்தில் சிறியதாக இருக்கும் விலங்குகள்கூட மிகவும் ஆக்ரோஷமாக தாக்கக்கூடிய பண்புகளைக் கொண்டிருக்கும். ஆனால், விலங்குகள் எப்போதும் சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் தங்களுடைய கோபத்தைக் காட்டிக் கொள்ளும். அப்படி உலகில் அதிகமாகத் தனது கோபத்தை வெளிப்படுத்தும் சில விலங்குகளைப் பற்றி பார்க்கலாம்.**

## தேன்வளைக் கரடி (honey badger)



தென்னாபிரிக்கா மற்றும், தென் ஆசியக் காடுகளில் அதிகம் வாழும். தேன்வளைக் கரடிகளுக்கு பயம் என்ற ஒன்று கிடையாது. பார்ப்பதற்குக் கீரியின் உருவம் போலவே உடல மைப்பைக்கொண்டது. ஆனால்தன்னை விட உருவத்தில் பத்து மடங்கு பெரிய விலங்குகளைக் கூட எதிர்த்துத் தாக்கக் கூடிய தன்மை கொண்டது. இவற்றின் அதிக கோபம் மற்றும் ஆக்ரோஷத்தின் காரணமாக மிருகக்காட்சி சாலையில் வைத்துப் பராமரிப்பது எளிதான காரியம் அல்ல. பொதுவாகச் சிங்கம், புலி போன்ற விலங்குகளுடன் சமமாக சண்டையிடும் திறமையை பெற்றுள்ளது. இவ்வளவு பெரிய கோபக் கார விலங்காக இருந்தாலும், பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தால் அரிதான விலங்குகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

## காட்டுப் பன்றி (wild boar)




மேற்கு ஆசியா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய பகுதிகளில் காட்டுப் பன்றிகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

பன்றி இனத்தைச் சேர்ந்திருந்தாலும், மற்ற பன்றிகள் போல இல்லாமல் இதன் கீழ்த் தாடை யில் இரண்டு நீளமான பற்களைக் கொண்டிருக்கிறது. கோபம் ஏற்படும் நேரங்களில் மனிதர்களைக்கூட ஆக்ரோஷமாக தாக்கக் கூடியது.

முழுவ துமாக வளர்ந்த காட்டுப்பன்றி கிட்டத் தட்ட 130 கிலோ எடையுடன் காணப்ப டும்.

ஒவ்வொரு கடியும் அதிகமான உறுதியைக் கொண்டது. இந்தப் பன்றிகள் அனைத்து விலங்குகளையும் உண்ணக்கூடிய குணத்தைக் கொண்டது.

## உப்புநீர் முதலைகள் (Salt Water Crocodile)




உலகில் மிகவும் பெரியதாக வளரும் விலங்கு என்ற சாதனையைக் கொண்டுள்ள உப்புநீர் முதலைகள் மிக ஆபத்தானதும்கூட. ஆண் முதலைகள் 24 அடி வரை வளரும் தன்மை கொண்டது. 180 கிலோ எடையைக் கொண்டிருக்கும். இவை கொண்டுள்ள உறுதியான பற்கள் கோபம் ஏற்படும் நேரங்களில் மற்றவற்றைத் தாக்க உதவியாக இருக்கும். பெரிய விலங்குகள், மனிதர்கள் உட்பட அனைத்தையும் ஒரே கடியில் கொன்று விடும். இந்தியா, தென் ஆசியா மற்றும் வடக்கு அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் உள்ள சதுப்பு நிலங்களில் இவை அதிகமாக வாழும்.

## சூரிய கரடிகள் (Sun Bear)



தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அதிகமாக இக்கரடிகள் காணப்படுகின்றன. அதிகமாகத் தூங்கும் பழக்கத்தைக் கொண்ட இந்த விலங்குகள் சிறிய விடயத்துக்கெல்லாம் கோபப்படக் கூடியது. மனிதன் எந்த ஒரு தொல்லையும் கொடுக்காதபோதும் கூட மனிதனைத் தீவிரமாக தாக்கும் குணம் கொண்டது. உலகில் வாழும் மிகச் சிறிய கரடி இனமும் இதுதான். இது மிகக் கூரிய பற்களைக் கொண்டிருக்கும். கால்களில் மிகப்பெரிய நகங்களைக் கொண்டிருக்கும். ஒரே தாக்குதலில் சாதாரண கரடி ஏற்படுத்தும் காயங்களை விட அதிக அளவிலான தாக்கங்களை ஏற்படுத்திவிடும்.

## நீர் யானைகள் (Hippopotamus)



நீர் யானைகள் பார்க்க சாதுவாக இருந்தாலும், மிகவும் ஆக்ரோஷமாக தாக்கும் இயல்புடையவை. நீர் யானைகளால் ஆண்டுக்கு 2900 பேர் உயிரிழக்கின்றனர். நிலத்தில் வாழும் விலங்குகளில் யானைகளுக்கு அடுத்த படியான பெரிய விலங்கு நீர் யானை. பாலூட்டி விலங்கான இது, ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தது. ஆற்றுப்பகுதி, ஏரி போன்ற நீர்நிலைக ளில் கூட்டமாக வாழும். ஒரு கூட்டத்தில் 40 நீர் யானைகள் வரை இருக்கும். நீருக்குள் ளேயே இருந்தபடி தலையின் மேற்பகு தியை மட்டும்வெளியேநீட்டியபடிசுவாசிக்கும்.

## ஆபிரிக்க காட்டெருமைகள் (African buffalo)



ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட இவ்விலங்குகள் மிகவும் கோபம் கொண்ட விலங்குகள். சாதாரணமாக ஒரு டன் எடை வரை வளரக் கூடியது. ஒரே தாக்குதலில் மனிதனின் உயிரை நிச்சயமாகத் தாக்கி விடும் திறன் கொண்டது. இதனால் வருடத்திற்கு 200 நபர்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் தொடர்ந்து வருகின்றன. நூற்றுக்கும் அதிகமானோர் காயம் அடைகின்றனர்.

இதனைச் சரணாலயத்துக்குள் சென்று பார்த்து அதனுடன் விளையாடுபவர்களும் உண்டு.

# அண்ணன் பிரபாகரனை சந்தித்தது உண்மை

## சீறும் செந்தமிழன் சீமான்

**ஈழத்தமிழருக்காக தொடர்ந்து குரல் கொடுக்கும் செந்தமிழன் சீமான் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை வன்னியில் சந்தித்தார் என்ற தகவல்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. இருப்பினும் அவர் பிரபாகரனைச் சந்திக்கவில்லை என வை. கோபாலசாமி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பில் செந்தமிழன் சீமான் அளித்த பேட்டி இங்கு பிரசுமாகின்றது.**



**"சீமான், உள்ளே போகவேண்டியவர்தான். சிறைக் குப் போய்வந்த பிறகுதான் அவர் அமைதியாக இருக்கிறார்' என்கிறாரே எச்.ராஜா?"**

"சிறைக்குப் போவதற்கும், வழக்கைச் சந்திப்பதற்கும் அச்சப்படுகிற ஆட்களா நாங்கள்? தூத்துக்குடியில் நான் மக்களைச் சந் தித்த செய்திகளையெல்லாம் ஊடகத்தில் காட்டக்கூடாது என்று சிறப்பு உத்தரவே போட்டு விட்டார்கள் இணையத்தை முடக்கி விட்டார்கள்.

இப்போதும்கூட மக்களை நாங்கள்சந்திக்க அனுமதிமறுக்கப்படுகிறது. 'எட்டு வழிச்சாலைக்காக 90 விழுக்காடு மக்கள் தங்கள் விளை நிலத்தை விரும்பித் தந்து விட்டார்கள்' என்று முதல்வர் சொல்கிறார். விரும்பி நிலத்தைக் கொடுத்துவிட்ட மக்களை நாங்கள் போய்ச் சந்திப்பதில் ஏன் உங்களுக்கு அச்சம் வருகிறது? நான் மக்கள்கிட்ட நின்னு அவர்கள் கதறுவதைக் காட்டுகி றேன்... நீங்கள் மக்கள்கிட்ட நின்னு அவங்க விரும்பித் தர்றதை ஒருமுறை காட்டுங்களேன்!"

**"கடந்த காலங்களில், பகுத்தறிவுப் பாதையில் பயணித்துவந்த நீங்கள் இப்போது, முப்பாட்டன் முருகனைப் பற்றியெல்லாம் பேசுவதும் ஓட்டு அரசியல்தானே?"**

"கட்சி ஆரம்பிக்கப் போகிறேன்... ஓட்டு அரசியலுக்கு வரப்போகிறேன் என்றெல்லாம் அப்போதே நான் நினைத்திருந் தால், 'கடவுள் இல்லை, சாதி இல்லை' என்றெல்லாம் பேசி யிருக்க வேண்டியதே யில்லை. ஆக இந்தப் பணியைச் செய்யப் போகிறேன் என்பதே எனக்கு அன்றைக்குத் தெரியாது. காரணம்... பிணவறையில் பிரசவிக்கப்பட்டவர்கள் நாங்கள்!

வேரை இழந்த மரமும் வரலாற்றை இழந்த இனமும் வாழாது. கிணற்றில் விழுந்துவிட்ட என் வீட்டு வாளியை எடுக்கத்தான் கிணற்றுக்குள் குதித்தேன். ஆனால், மூழ்கிப் பார்க்கும்போதுதான், என் பரம்பரையே உள்ளே கிடக்கிறது என்பது தெரிந்தது.

அந்த வகையில், 50 ஆயிரம் வருடங்களுக்கும் முந்தைய என் தேசிய இனத்துக்கான மெய்யியல் கோட்பாட்டை மீட்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இதில், தனிப்பட்ட விதத்தில் எனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா, வழிபடுகிறேனா... என்பதைப் பற்றியெல்லாம் பேசவேண்டியதில்லை!

தேசியத்தலைவர்பிரபாகரனுக்குக்கூடக்கடவுள்நம்பிக்கை கிடையாது. ஆனாலும்போர்ச்சூழலிலும்கூட ஈழ மக்கள் வழிபடும்போது அதனை அவர் தடுக்கவும் இல்லை... தன் கருத்தைத் திணிக்கவும் இல்லையே!

கோயில் நுழைவுப் போராட்டம் குறித்துப் பேசும் பெரியாரும்கூட 'கடவுள் இல்லை என்ற உணர்வு என்னுடையது. ஆனால், கடவுளை வழிபடக்கூடியவர்களுக்கு அவர்களது உரிமையைப் போராடிப் பெற்றுத்தருவதென்பது ஒவ்வொருவரின் கடமை' என்றுதானே சொன்னார். அதைத்தான் நானும் செய்கிறேன். எனவே இது ஓட்டு அரசியல் இல்லை!"

**"கருணாநிதி குறித்து தொடர்ந்து அநாகரிகமான முறையில் நாம் தமிழர் கட்சியினர் விமர்சனம் செய்வதாகக் குற்றச்சாட்டு எழுகிறதே?"**

"என்னை, என் குடும்பத்தை, குறிப்பாக என் மனைவியைப் பற்றியெல்லாம்கூட அநாகரிகமான முறையில் தி.மு.கவினர்தான் எழுதிவருகிறார்கள். 'சீமான், வீதி விபத்தில் இறந்துவிட்டார்,மஞ்சள் காமாலையில் இறந்து விட்டார்' என்று என் படத்தைப் போட்டே தி.மு.க-வினர்தான் இணையத்தில் செய்தி பரப்பி வருகிறார்கள்... இதோ என் தொலைபேசியிலேயே பாருங்களேன்... (தொலைபேசியில் வந்த முகநூல் செய்தியைக் காட்டுகிறார்)

இப்படி தொடர்ச்சியாக இழிவான செய்திகளையே பரப்பிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் என் தம்பிமார்களும் எவ்வளவு சகிப்பார்கள்? கண்ணியம் என்பது ஒரு பக்கம் மட்டும் என்பதில்லையே!

**வேரை இழந்த மரமும் வரலாற்றை இழந்த இனமும் வாழாது. கிணற்றில் விழுந்து விட்ட என் வீட்டு வாளியை எடுக்கத்தான் கிணற்றுக்குள் குதித்தேன். ஆனால், மூழ்கிப் பார்க்கும்போதுதான், என் பரம்பரையேஉள்ளேகிடக்கிறது என்பது தெரிந்தது.**



ஆனாலும் கூட நாகரிகமற்ற செய்திகளைப் பேசக்கூடாது என்று நாங்களே அறிக்கை கொடுக்கிறோம்.. கண்டிக்கிறோம் ஆனால், தி.மு.க. இதில் எதையுமே செய்வதில்லையே..."

**"ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெறும் முயற்சியாகத்தான் வைகோ வைத் தெலுங்கர் என்று குறிப்பிடுவதாகச் சொல்கிறார்களே?"**

"வைகோவைத் திட்டிப் பேசவேண்டிய அவசியம் எனக்கு என்ன வந்திருக்கிறது... வைகோ, என் அரசியல் எதிரியா? அவரை எதிர்த்து அரசியல் செய்யவா இவ்வளவு கஷ்டப்பட்டு அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறேன் நான்? தி.மு.கவிலிருந்து வைகோவை நீக்கியபோது, 'தலைவரைப் (பிரபாக ரன்) பார்க்கச் சென்றதால்தான் நீக்கினார்கள்' என்று ம.தி.மு.கவுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் நாங்கள். அப்பா மணிவண்ணன், மாமா எஸ்.எஸ்.சந்திரனை யெல்லாம் ம.தி.மு.கவில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டதே நான்தான். அரசியலுக்குள் வந்தபிறகு அவரவர் நிலைப்பாடுகளால் பிரிந்து வெகுதூரம் வந்துவிட் டோம், அவ்வளவுதான்."

**"வெளிநாடு வாழ் தமிழர்களிடம் பொய்ப் பிரசாரம் செய்து நாம் தமிழர் கட்சி வசூல் வேட்டை நடத்துவதாக வைகோ கூறுகிறாரே?"**

"பதிலுக்குப் பதில் பேசிக்கொண்டிருக்கக் கூடாது என்று நினைக்கிறேன்? ஈழத் தமிழர்கள் பொய்ப் பிரசாரங்களை நம்பக்கூடியவர்களா? அவர் சொல்கிற படியே எனக்குக் காசு கொடுக்கிறார்கள் என்றால்கூட, 30 வருடங்களாக உங்களுக்குக் கொடுக்காத காசை எனக்குக் கொடுக்கிறார்கள் என்றால், உங்களைவிட என்னை நேசிக்கிறார்கள், பெரிய தலைவராக நம்புகிறார்கள் என்றுதானே அர்த்தம்?

இதெல்லாம் சும்மா... யாரு கொடுப்பா... எப்படி வரும் காசு? உண்டியலா வருமா, காசோலையாக வருமா அல்லது வங்கியில் வந்து சேருமா? இது வைகோவின் பிரச்சினை அல்ல... வருமானவரித்து றையின் பிரச்சினை! அவ்வளவு பெரிய தலைவர் வைகோ இப்படிப் பேசியிருப்பது நன்றாக இல்லை."

**"பிரபாகரனோடு நீங்கள் ஆமைக்கறி விரு ந்து சாப்பிட்டதாக வெளியாகும் செய்திகள் இணை யத்தளங்களில் கடுமையான விமர்சனத்துக்குள் ளாக்கப்படுகிறதே?"**

"அண்ணனோடு அமர்ந்து நான் ஆமைக்கறி சாப்பிட்டேன் என்று சொல்லவில்லை. ஆமைக்கறி, ஈழத்தில் பிரதான உணவு. நடேசன் அண்ணன், புலித்தேவன், நிதித் துறைப் பொறுப்பாளர் மற்றும் சிலரோடு அமர்ந்து ஆமைக்கறி நான் சாப்பிட்டேன். அதில் சிலர் இப்போதும் உயிரோடு இருக்கின்றனர். அவர்களிடமே கேட்டு உறுதி செய்து கொள்ளுங்கள்.

ஈழத்துக்குப் பயணம் போனது நான்... அண்ணன் பிரபாகரனை சந்தித்தேன். அங்கே என்ன நடந்தது என்று நான் சொல்ல வேண்டும் அல்லது அண்ணன் பிரபாகரன் சொல்ல வேண்டும். நீங்களே பேசிக் கொள்வதென்பது அர்த்தமற்றது."

**"நீங்கள் ஆமைக்கறி சாப்பிட்டது, ஏ.கே.74 துப்பாக்கியைப் பயன்படுத்தியதாகச் சொல்லும் செய்தியெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் என்கிறாரே கொளத்தூர் மணி?"**

'நான் இன்னும் அந்தக் காணொலியைப் பார்க்கவில்லை. ஆனால், பார்த்தவர்கள் சொன்னது, 'இருந்திருக்குமா, நடந்திருக்குமா என்று தெரியவில்லை' என்றுதான் அவர் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

நான் ஈழத்துக்குப் பயணம் போகும்போது, கொளத்தூர் மணி, காசி அண்ணன், பழநெடுமாறன் ஐயாவிடம் சொல்லிவிட்டுத்தான் போனேன். அங்கே எப்படிப் பயணித்தேன் என்பதெல்லாம் தனிக்கதை.

அப்போதே இதுகுறித்துப் பலமேடைகளில் அண்ணன் முன்னிலையிலேயே நான் பேசியிருக்கிறேன். எனவே, இத்தனை வருடங்கள் கழித்து இப்போது இதுபற்றிப் பேச வேண்டிய தேவை இல்லை!"

**"நடிகர் விஜய் படத்தை சீமான் இயக்குவதாக வெளிவரும் செய்திகள் உண்மையா... இயக்குநர் சீமானை எப்போது பார்க்கலாம்?"**

'விஜய்யை வைத்துப் படம் இயக்குவதற்கு முதலில் முயற்சி செய்தோம். ஆனால் அது சரிவரவில்லை. திரைப்படம் இயக்குவதாக இருந்தால், குறைந்தது 90 நாட்களை அதற்காகவே ஒதுக்கிப் பணி செய்ய வேண்டும். அதற்கான சூழல் இப்போது இல்லை!"

**ஜூனியர் விகடன்**

# இது நம்ம கதைகள்... 11

## யாழ்தேவியும், யாழூரார் காத்திருப்பும்

"யாழ்தேவி" ( சேவை இல: 4077) என்பது ஒரு தொடரூந்துச் சேவை மட்டுமல்ல, வடபுலத்து மக்களின் வாழ்வியல் அடையாளம் ஆகும். 1956 இல் வடபுலத்திற்கான கடுகதி தொடரூந்து சேவையாக இது அறிமுகமானது. இதன் பிரபலத்தால் திரைப்படங்கள், பாடல்கள், கதைகள், கவிதைகள் என எண்ணற்ற இலக்கியப் படைப்புக்கள் அதனை மையம் கொண்டெழுந்தன.

இலங்கையின் புகையிரதத் திணைக்களம் 1858 உதயமாகியது. 1864 இல் முதல் உத்தியோகபூர்வ தொடரூந்து சேவை கொழும்பிற்கும் அம்பேபுசவிற்குமிடையில் அங்குரார்ப்பணமாகியது. வடக்குக்கான தொடரூந்துப் பாதை 1894 இல் விஸ்தரிக்கப்பட்டு, உத்தியோகபூர்வ சேவை 1905 இல் ஆரம்பித்தது. இலங்கையின் தொடரூந்துப் பாதைகளின் மொத்த நீளம் 1508 கி.மீ ஆகும்.இதில் 339 கி.மீ நீளமுடைய வடக்குப் பாதையே அதிக நீளமானது. சுமார் 14400 அலுவலர்கள் தற்போது பணியாற்றும் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் கடந்த வருட நிகர இலாபம் 5.37 பில்லியன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் வடக்குப் பாதையின் பங்களிப்பும் கணிசமானது.

இன்று இலங்கை முழுவதுமுள்ள புகையிரத நிலையங்களில் அழகிற்கும், சுத்தத்திற்கும் யாழ். புகையிர நிலையத்திற்கு முதலிடம் வழங்கலாம். இப்படிச் சொல்வது ஆசன முற்பதிவில் முன்னுரிமை பெற யாழ். புகையிரத நிலைய அதிபருக்கு வைக்கப்படும் "ஐஸ்" என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இலங்கையின் ஏனைய தொடரூந்து நிலையங்களைப் பார்த்தவர்களுக்கு உண்மைபுரியும். நாட்டின் ஏனைய பாகங்களுக்கான தொடரூந்து நிலையங்கள் ஆரம்பகால கட்டுமானங்களுடனேயே இன்றும் காணப்படுகின்றன. வவுனியாவிற்கு வடக்கேயுள்ள நிலையங்களே புதுப்பொலிவுடன் மிளிர்கின்றன.




யாழ்ப்பாணத் தொடரூந்து நிலையம் 1902 இல் செயற்பட ஆரம்பித்தது. அந்தக் காலத்தில் புகழ்பூத்த எந்திரி மகாதேவா அவர்களே அதன் தற்போதைய மாதிரியை வடிவமைத்தவர். கேரதீவு- சங்குப்பிட்டிக் கிடையிலான பாலமமைப்பிற்கான யோசனையை அக்காலத்திலேயே முன்மொழிந்து செயலுருவாக்க முனைந்தவர் என்பதால் கேரதீவுப் படுகைப்பாலம் (கடல் வழிப் பாதை- cause way) மகாதேவா தாம்போதி என்றழைக்கப்பட்டது.

இன்று புகையிரத சேவைகள் உரிய நேர அட்டவணை ஒழுங்கில் சிறப்பாக இடம் பெறுகின்றன. கடிகார நேரத்தைக்கூட புகையிரதம் வரும் நேரத்தைப் பார்த்து செவ்வையாக்கலாம். ஆனால் அக்காலத்தில் தொடரூந்து சேவைகளில் காலதாமதம் இணைபிரியாதிருந்தது. அப்போது காலை 5.30 இற்கு கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் யாழ்தேவி நேர அட்டவணைப்படி பிற்பகல் 12.30 இற்கு யாழ்ப்பாணத்தை அடைய வேண்டும். ஆனால் ஒருபோதும் அது உரிய நேரத்திற்கு வந்ததாக வரலாறு கிடையாது. இரண்டு, மூன்று மணி நேரம் கடந்தே பெரும்பாலும் வந்த டையும். சில நேரங்களில் மாலை 6 மணிக்கு வந்ததுமுண்டு. இதனால் கொழும்பிலிருந்து வரும் உறவுகளை ஆசையுடன் அழைத்துச் செல்ல வரும் யாழ்ப்பாணத்தார் சலித்து, வெறுத்து, சபித்து, திட்டித் தீர்க்கும் காட்சியை அதிகமாகக் காணலாம்.

அன்று எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி சரியாக பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு வந்தது. நின்றவர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு அளவேயில்லை. மாலைகள் எடுத்துவந்து தொடரூந்து ஒட்டுநருக்கு சூடி, குண்டுக்கட்டாக அவரைத் தூக்கி தோளில் வைத்து பட்டாசு கொளுத்தி வர்ழ்த்தினார்கள்.

அப்போது அந்த இடத்திற்கு வந்த புகையிரத நிலைய அதிபர் அங்கு நின்றவர்களிடம் "ஏன் இந்த ஆரவாரம்" என வினவினார்.

"இன்று தான் யாழ்தேவி எம்மைக் காக்க வைக்காமல் சரியான நேரத்திற்கு வந்துள்ளது. அதுதான் எங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்து கின்றோம்" என்றனர் மக்கள். அவர்களின் அறியாமையை எண்ணி தனக்குள் சிரித்தபடியே புகையிரத நிலைய அதிபர் சொன்னார் "இது நேற்று மத்தியானம் வர வேண்டிய யாழ்தேவி. ஒரு நாள் பிந்தி வந்திருக்கு..."

**அபிவிருத்தியென்பது உரிய காலத்தில் ஆற்றப்பட வேண்டியது.**

**காலம் கனியட்டும் என்று காத்திருந்தால் காலாவதியாகி விடும்.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# உறைக்கும் உண்மைகள்



ஒரு பெண்ணானவள் விதவை என்ற பெயரில் இறங்குநிலை அடைவதற்கு தனியே கணவனை இழப்பதன் மூலம் ஏற்படுவதன்று. கணவன் இருந்தும் அவன் இல்லாமை போன்ற வாழ்வியலைக் கொண்டு நகர்த்தும் ஒரு பெண்ணை விதவை என்ற நிலையில் வைத்துத்தான் இந்தச் சமூகம் கண் நோக்குகிறது. இப்படிப்பட்ட விதவைகள் மீது மேற்கொள்ளப்படும் விமர்சனங் கள் பல தரப்பட்டவை. சமூகத்தில் விதவைகளைப் பல பிரிவுகளாக வகுக்கமுடியும்.

கணவனை இழந்தவர்கள், கணவன் காணாமல் போனதன் நிமித்தம் விதவைகள் ஆனவர்கள், கணவனால் மணவிலக்குப்பெற்று தனித்து வாழ்பவர்கள், கணவனின் ஆணாதிக்கச் செயற்பாடுகளால் அருக்களிப்படைந்து அவனிடமிருந்து பிரிந்து வாழ்பவர்கள், சீதனப் பிரச்சினை காரணமாக, தகுந்த வயதில் மண வாழ்க்கையற்று செல்வியாக வாழ்ந்து, இறுதியில் விதவை போன்று வாழ்பவர்கள்... இப்படிப் பல வகையினரைக் குறிப்பிடமுடியும்.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற யுத்தமானது2009 ஆம்ஆண்டுமே மாதத்துடன் முடிவுக்கு வர முன்பு இந்த யுத்தம் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த பல பெண்களை விதவைகளாக்கி விட்டுச் சென்றுள்ளமையை அவதானித்துக்கொள்ள முடியும்.

யுத்தத்தால் இவ்வாறு விதவைகள் ஆக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை ஓர் இலட்சத்துக்குள் உள்ளடங்கும் என ஒரு மதிப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இருப்பினும் யுத்தத்தால் பாதிக் கப்பட்டு அதிலிருந்து மீண்டெழுந்த மக் கள் வழங்கிய வாக்கு மூலங்களில் இரு ந்து ஒப்பிடுகையில் விதவைகளின் எண்ணிக்கை இந்த ஓர் இலட்சத்துக்கும் அதிகம் என்றே நோக்கப்படுகிறது. அதே சமயம் அச்சப்படவும் செய்கிறது.

**இவ்வாறாக யுத்தத்தினால் விதவைகள் ஆக் கப்பட்ட இப் பெண்களின் இன்றைய நிலையென்ன?**

ஒரு பெண் கணவனை இழந்து வித வையாக் கப்படும் போது அக்கணத்திற்குப் பின்பு அவள் தனித்துப் போவது நிதர்சனமே! ஆயினும் அவள் தனித்தவள் அல்ல. தான் வாழும் மக்கள் கூட்டத்தின் நடுவில் மக்களோடு மக்களாக அவளும் ஒருத்தியாக இருக்கிறாள். எப்போதும் இருக்க வேண்டியவளும் ஆகின்றாள். அவள் தன் கணவனை இழப்பதனால் மூலம் தனித்தவள் அல்ல.

அதேசமயம் கணவனை இழந்தவள்... என்ற ஒரே காரணத்துக்காக ஆணாதிக்க வர்க்கத்துக்கு அவள் ஒரு போகப்பொருளுமல்ல. ஆண்துணையற்றவள் என்பதற்காக அவளை எதுவும் செய்யலாம் என்ற குறுபுத்திகொண்டோரின் எண்ணங்கள் மாற்றுவடிவம் கொள்ளப்படல் வேண்டும். அவளும் வாழப்பிறந்தவள்... வாழ்ந்து விட்டுப் போகட்டும்... என்ற உயரிய சமூக சீர்திருத்த சிந்தனைகள் புதியவனாக ஐனனிப்புக்கொள்ள வேண்டும்.

இந்த விதவைகளின் எதிர்காலம் குறித்து மனத்தூய்மையோடு இங்கு கரிசனை கொள்வோர் எத்தனைபேர்? இவர்களின் வாழ்வுக்கான போராட்டமும் துடிப்பும் இங்கு எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது? இவர்களுக்கான உளவியல் பிரச்சினைகள் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான மாற்றுத் தீர்வு காணப்பட்டிருக்கிறதா? அப்படிக் காண்பதற்கான முயற்சிகள் ஏதும் நடைபெற்று வருகின்றதா?

மேற்கூறப்பட்ட வினாக்களுக்கு பதில்கள் நடைமுறையில் இருக்குமானால் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து பத்தாண்டுகளை நெருங்குகையில் இப்போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளான பெண்கள் சிலர் ஏன் இன்னமும் கிளிநொச்சி ஏ-9 வீதியில் றம்புட்டான் மற்றும் பாலைப் பழங்களை வெயிலில் காய்ந்தவண்ணம் விற்றுக் கொண்டிருக்க வேண்டும்? ஒரு சாண் வயிற்றுக்காகப் போராடும் இப் பெண்களின் உள்ளக்குமுறல்கள் இன்னமும் வெளியுலகத்துக்குக்கேட்கவில்லையா?

தேர்தல் காலங்களில் தங்கள் வாக்கு வங்கிகளை நிரப்புவதற்காக தம் சார்ந்த பத்திரிகையாளர்களையும் புகைப்படப் பிடிப்பாளர்களையும் அழைத்து வந்து யானைப் பசிக்கு சோளப் பொரி இடுவது போன்று சில அரசியல்வாதிகள் செய்யும் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கதும் அதே சமயம் இந்த விதவைகளின் எதிர் கால வாழ்வியலுக்கு எந்தவிதத்திலும் உதவப் போவதில்லையென்பதும் வெளிப் படையான விடயமாகும்.

**பொது இடத்தில் நான்கு பேர் பார்க்கக் கூடியதாக வெறுமனே தையல் இயந்திரங்களையும் தோல்களை துருத்தி எலும்புகள் வெளித் தெரியும் பசு மாடுகளையும் வழங்கி விட்டு வழங்கல் நிகழ்வை பத்திரிகைகளில் புகைப் படத்தோடு செய்தியாக்குவதன் மூலம் இந்த விதவைகளுக்கு இந்த விதவைகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் சொல்லும் செய்தி தான். என்ன?**

விதவைகளுக்கு உதவி செய்ய வருவோர் அவர்களின் குடும்ப பொருளாதார நிலை மீது தங்கள் பார்வையை செலுத்த வேண்டும். அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்றான "பசி" என்ற ஓர் உணர்வு இருப்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

விதவைகள் எனத் தெரிந்தும் இவர்களுக்கான பொருளாதாரத்தை, உறைவிடத்தை, சிறு தொழில் போன்றவற்றை மேம்படுத்திக் கொடுக்க தவறியதாய் தான் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவர்களில் சிலரை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றன என்பதும் மறுத்துரைக்க முடியாத ஒன்று.

அண்மையில் கணவனால் கைவிடப்பட்ட நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் கசிப்புக் காய்ச்சிய குற்றத்திற்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற் படுத்தப்பட்ட போது மன்று தண்டனையாக குற்றப்பணத்தை கட்டும்படி உத்தரவிட்டுள்ளது.

கணவனால் கைவிடப்பட்ட ஒரு விதவைப் பெண் .... தொழிலற்ற நிலை.... 4 பிள்ளைகள் வேறு.... இந்நிலையில் தவறான வழி எனத் தெரிந்தும் அவள் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயன்ற போது அவளைச் சுற்றியுள்ள சமூகம் என்ன செய்து கொண்டிருந்தது. சட்டமும் ஒழுங்கும் தமது கடமையை பிறள்வுறாது செய்தாலும் குற்றப் பணத்தைக் கட்டுவதற்கு அந்த விதவை மீண்டும் கசிப்புக் காய்ச்ச மாட்டாள்.... என்பத ற்கு என்ன உத்தரவாதம்?

நாடுயுத்தத்தில் இருந்து மீண்டு விட்ட தான ஒரு போர்வைக்குள் அபிவிருத்தி என்ற மாயைக்குள் இன்னமும் விளிம்பு நிலை மனிதர்களினதும் விதவைக ளின் மறுவாழ்வாதாரத்திற்கான அடிப் படைத் தேவைகளையும் இதுவரை எவருமே மனச் சுத்தியுடன் அணுகமுன்வரவில்லை என்ப தனை ஏ-9 வீதியில் பழங்கள் விற்கும் பெண்களே சாட்சிகளாகவும் காட்சிகளாகவும் நிற்கின்றனர் என்பது மறுதலிக்க முடியாத ஓர் உண்மையாகும்.

**கோமேதகன்**

இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து கோலி சேர்த்த ரன்கள் மட்டும் 200. ஆனால், இந்தியாவின் மற்ற 10 வீரர்களும் இரண்டு இன்னிஸிலும் சேர்த்து அடித்த ரன்கள் 236. பட்டிங் மிக மிக மோசமாக இருந்தது தான் இந்த முதல் டெஸ்ட்டின் தோல்விக்குக் காரணம்.

இங்கிலாந்தில் தனது முதல் செஞ்சுரியை நிறைவுசெய்த விராட் கோலி, கப்டனாக தனது முதல் வெற்றியைப் பதிவு செய்திருக்கவேண்டிய தங்கத் தருணம் ஜஸ்ட் மிஸ்! இந்திய பௌலர்கள் அசத்த, மறுபக்கம் பட்ஸ்மேன்கள் சொதப்ப, வென்

வந்தார் கோலி. ஆனால், அவர் முதல் இன்னிங்ஸில் 10 ஓவர்கள் வீசினார். 46 ரன்கள் கொடுத்தார். விக்கெட் எதுவும் எடுக்கவில்லை. அவர் அடித்த ரன்கள் வெறும் 22. இரண்டாவது இன்னிங்ஸில் பாண்டியாவுக்கு பௌலிங் வாய்ப்பே வழங்கப்படவில்லை. பட்டிங்கில் டெய்ல் எண்டர்களோடு விளையாடிக்கொண்டிருக்கிறோம் என்கிற நினைப்பே இல்லாமல் ஸ்ட்ரைக்கை ரொட்டேட் செய்து கொண்டிருந்தார் ஹர்திக் பாண்டியா.

இந்திய அணியைப்பொறுத்தவரை அஷ்வினே ஒரு ஓல்



தின் டோட்டல் இன்னும் குறைந்திருக்க வாய்ப்புகள் அதிகம். டெய்ல் எண்டர்கள் திணறி

# ஹோலியின் சாதனையும் வேதனையும்



றிருக்க வேண்டிய டெஸ்ட்டை இழந்திருக்கிறது இந்தியா. முதல் இன்னிங்ஸில் சதம், இரண்டாவது இன்னிங்ஸில் அரைசதம் என பட்ஸ்மேன் கோலி சுப்பர். ஆனால், கப்டன் கோலி..?!

**1. தீராத ப்ளேயிங் லெவன் குழப்பம்?!**

டொஸ்போட்டதும் 5 ஸ்பெஷல் பட்ஸ்மென், ஹர்திக் என்னும் ஓல்ரவுண்டர், அஷ்வின் என்னும் ஓஃப் ஸ்பின்னர், தினேஷ் கார்த்திக் என்னும் விக்கெட் கீப்பர், 3 வேகப்பந்து வீச்சாளர்கள் என அணியை அறிமுகப்படுத்தினார் கப்டன் கோலி. இந்திய அணி அறிவிக்கப்பட்டதுமே எல்லோருக்கும் ஏமாற்றம். காரணம் டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட்டான சேத்தஷ்வர் புஜாரா அணியில் இல்லை. அவருக்கு பதிலாக கே.எல்.ராகுல் எடுக்கப்பட்டிருந்தார். தவானின் இடத்துக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. புஜாரா கவுன்ட்டி கிரிக்கெட் ஆடி, இந்த சீரிஸ்ஃக்காகவே தயாரானவர். ஆனால், அவரை அணியில் இருந்து கழற்றிவிட்டது கோலி செய்த முதல் தவறு.

**2. டெஸ்ட் போட்டிக்கு சரியான ஓல் ரவுண்டரா ஹர்திக் பாண்டியா?**

டெஸ்ட் போட்டிக்கு ஓல் ரவுண்டர் தேவைதான். ஆனால், அவர் ஒரு இன்னிங்ஸில் 30 ஓவர்கள் வரை வீசுபவராகவும், ஒரு இன்னிங்ஸில் 30 ரன்களுக்களுக்கு மேல் அடிப்பவராகவும் இருக்கவேண்டும். அப்படித்தான் ஹர்திக் பாண்டியாவை உள்ளே கொண்டு

ரவுண்டர்தான். பாண்டியாவின் இடத்தை ஒரு பௌலருக்குக் கொடுத்திருக்கலாம்.

**3. இரண்டு ஸ்பின்னர்கள் நிச்சயம் வேண்டும்!**

இந்திய அணியின் பலமே ஸ்பின்தான். இங்கிலாந்து பட்ஸ்மேன்களும் ஸ்பின்னில்தான் அதிகம் தடுமாறுவார்கள். எட்ஜ்பேஸ்டன் மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்றது என்றாலும்



மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள், 2 ஸ்பின்னர்கள் என்கிற காம்பினேஷனோடு கோலி களமிறங்கியிருக்கவேண்டும்.

ஹர்திக் பாண்டியாவின் இடத்தை குல்தீப் யாதவுக்கு கொடுத்திருந்தால் இங்கிலாந்

யிருப்பார்கள்.

இரண்டு இன்னிங்ஸிலும் அஷ்வினைத்தான் அதிக ஓவர்கள் வீசவைத்தார் கோலி. அஷ்வின் மட்டுமே மொத்தமாக 47 ஓவர்கள் வீசினார். இன்னொரு ஸ்பின்னர் இருந்திருந்தால் அஷ்வினின் பிரஷர் குறைந்திருக்கும். அந்த வாய்ப்பை வீணடித்துவிட்டார் கோலி.

**4. பட்டிங் ஓடரில் நடந்த குளறுபடி!**

மூன்றாவது நாளில் கிட்டத்தட்ட 20 ஓவர்கள் இருக்கும் நிலையில் ரஹானே அவுட் ஆனதும் தினேஷ் கார்த்திக், பாண்டியாவுக்கு பதிலாக அஷ்வின் களமிறக்கப்பட்டார். கடைசி



சில ஓவர்களே இருக்கும் நிலையில்தான் நைட் வாட்ச்மன்கள் இறக்கிவிடப்படுவார்கள்.

ஆனால், அஷ்வினை ஏன் இறக்கினார் என்பதே புரியவில்லை. வந்த மூன்றாவது ஓவரில் அஷ்வின் அவுட். அஷ்வினுக்குப்பிறகு பாண்டியா அல்லது இஷாந்த் ஷர்மா என யாரையாவது களமிறக்கியிருக்கலாம். ஆனால், தினேஷ் கார்த்திக் களமிறக்கப்பட்டார்.

**5. சொதப்பல் பட்ஸ்மேன்கள்!**

இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து கோலி சேர்த்த ரன்கள் மட்டும் 200. ஆனால், இந்தியாவின் மற்ற 10 வீரர்களும் இரண்டு இன்னிஸிலும் சேர்த்து அடித்த ரன்கள் 236. பட்டிங் மிக மிக மோசமாக இருந்தது தான் முதல் டெஸ்ட்டின் தோல்விக்குக் காரணம்.

இரண்டாவது இன்னிங்ஸில் சில ஆச்சர்யங்களை கோலி செய்திருக்கலாம்.

தவானுக்கு பதிலாக ராகுலை ஓப்பனிங் இறக்கியிருக்கலாம். அதேபோல, ரஹானே ஒரு டவுன் பட்ஸ்மேனாக இறங்கியிருக் கலாம்.

ஆனால், அப்படி எந்த சஸ்பென்ஸ்ும் இல்லாமல் முதல் இன்னிங்ஸில் சொதப்பியது போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் பட்ஸ்மேன்கள் இறங்கிக்கொண்டிருந்ததை கோலி தடுத்திருக்கலாம்.



# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வியட்நாம் வீடு
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : ரி.எம்.சௌந்தரராஜன்




உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவை அன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ
உன் கண்ணில் நீர் வழிந்தால்
உன்னை கரம் பிடித்தேன்
உன்னை கரம் பிடித்தேன்
வாழ்க்கை ஒளிமயம் ஆனதடி
பொன்னை மணந்ததனால் சபையில்
சபையில் புகழும் வளர்ந்ததடி
உன் கண்ணில் நீர் வழிந்தால்
கால சுமைதாங்கி போலே
மார்பில் எனை தாங்கி
வீழும் கண்ணீர் துடைப்பாய்
அதில் என் விம்மல் தணியுமடி

ஆழம் விழுதுகள் போல்
உறவு ஆயிரம் வந்தும் என்ன (2)

வேர் என நீ இருந்தாய்
அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்
உன் கண்ணில் நீர் வழிந்தால்
முள்ளில் படுக்கையிட்டு
இமையை மூடவிடாதிருக்கும்
பிள்ளை குலமடியோ என்ன பேதைமை செய்ததடி

பேருக்கு பிள்ளை உண்டு
பேசும் பேச்சுக்கு சொந்தமுண்டு (2)
என் தேவையை யார் அறிவார்
என் தேவையை யார் அறிவார் உன்னை போல்
தெய்வம் ஒன்றே அறியும்
உன் கண்ணில் நீர் வழிந்தால்

# கருணாநிதி கும்பிட்ட கடவுள்

## நடிகர் சிவகுமாரின் உணர்வுப் பகிர்வு

1988 ஆம் ஆண்டு ஜுன் 17 ஆம் திகதி கலைஞர் வசனம் எழுதிய 'பாசப் பறவைகள்' படத்தின் 50 ஆவது நாள் வெற்றிவிழா திருவெற்றியூர் எம்.எஸ்.எம். தியேட்டருக்கு வெளியே கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் கலைஞர் கையால் கேடயம் பெற்றேன். நிகழ்ச்சியில் நான் பேசும்போது 'சிவாஜிக்கு மட்டும் பக்கம் பக்கமாக வசனம் எழுதிய கலைஞருக்கு, எங்கள் மீது ஓரவஞ்சனை. அதனால் தான் எங்களுக்கு மட்டும் திருக்குறள் மாதிரி ஒண்ணே முக்கால் வரியில் வசனம் எழுதிக் கொடுத்திருக்கிறார்' என்று சொல்லி விட்டு, அவர் நடிகர் திலகத்திற்காக எழுதிய (5 நிமிடம் தொடர்ந்து பேசக்கூடிய) சேரன் செங்குட்டுவன்வசனத்தைப்பேசினேன்.

அடுத்து மைக்கைப் பிடித்தார் கலைஞர். புறநானூற்றுத் தாய் பேசும் வசனத்தைத் தனது கரகர குரலால் 5 நிமிடம் கம்பீரமாக ஒரே மூச்சில் பேசிக் காட்டிக் கைதட்டலைப் பெற்றார்.

அப்போது நான் மேடையில் இருந்து குதித்து இறங்க முற்பட்டேன். என்னைத் தடுத்து நிறுத்தினார் கலைஞர். "1952 இல் தி.மு. க.பிரசாரத்துக்காக 'பரப்பிரம்மம்' என்று ஒரு நாடகம்போட்டோம். அதில், ஓர் ஓரங்க நாடகம் தேவைப்பட்டது. சிவாஜி கேட்டதற்காக அந்த வசனத்தை நான்எழுதினேன். அப்போது மேடைக்குப் பக்கவாட்டில் இருந்தபடி சிவாஜிக்கு வசனத்தைச் சொல்லிக் கொடுத்து எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது' என்று சொன்னார். கலைஞரின் ஞாபகசக்தியை நினைத்து நினைத்து வியந்து போனேன்.

ஒருமுறை சினிமா எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஓர் இதழுக்கு நான் சிறப்பு ஆசிரியராக இருந்து கலைஞரைப் பேட்டி எடுக்கப் போனேன். 'அண்ணே, நீங்கள் சாமி கும்பிட்டிருக்கீங்களா? எந்த சாமியை வழிபட்டீர்கள்? எத்தனை வருடம் கும்பிட்டீங்க? எப்போது நாத்திகராக மாறினீர்கள்?' என்கிற கேள்விகளைக் கேட்டேன்.



○ சிவகுமார் வரைந்த ஓவியம்...

கலைஞர் அருகிலிருந்த டி. ஆர்.பாலு என் கேள்வியைப் பார்த்து கோபத்தில் குதிக்க ஆரம்பித்துவிட்டார்.

கலைஞர் அவரை சமாதானப் படுத்திவிட்டு, "பெரியாச்சி என்கிற அம்மனை முதலில் வழிபட்டேன். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பெரியாச்சியை அம்மா, அப்பா, நானும் வழிபட்டு வந்தோம். ஒருமுறை என் அக்கா மகன் மாறனுக்குக் காய்ச்சல் அதிகமாகிவிட்டது. அப்போது சாமியை மனமுருகக் கும்பிட்டேன். காய்ச்சலைப் போக்க வில்லை. அதன்பிறகுதான் மருத்துவத்தால் குணமாக வேண்டிய நோய்க்கு எல்லாம் கடவுளிடம் வேண்டு வது மூடத்தனம் என்று முடி வெடுத்து, நாத்திகன் ஆனேன்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

ஒருமுறை, நான் வரைந்த ஓவியங்களைப் பார்ப்பதற்காகக் கனிமொழியோடு கலைஞர் வந்தார். அனைத்து ஓவியங்களையும் பார்த்துக் கொண்டே வந்தவர், "ஏன்யா... பேசாம ஓவியராவே இருந்திருக்கலாமே... அப்புறம் எதுக்கு நடிக்க வந்தாய்?' என்று கேட்டார்.

'நான் ஓவியனா மட்டும் இருந்திருந்தா, நீங்கள் என் வீட்டுக்கு வந்திருக்கமாட்டீங்க, நடிகனாகியிருப்பதால்தான் வீடுதேடி வந்திருக்கீங்க!' என்று நான் நகைச்சுவையாகச் சொல்ல, கல கலவென வெகுநேரம் சிரித்தார் கலைஞர்.

இறுதியாக, காஞ்சிபுரப் புலிக்குகை ஓவியத்தைப் பார்த்ததும் ஒருமாதிரி நெகிழ்ந்துபோய், "இங்கே தான்யா எம்.ஜி.ஆர் நடிச்ச 'காஞ்சித்தலைவன்' படத் துக்காக நானும், எம்.ஜி.சக்ர பாணியும் உட்கார்ந்து வசனம் எழுதினோம்' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

நான் எழுதிய 'ராஜபாட்டை' கட்டுரைகளை மொத்தமாகத் தொகுத்து, 'இதற்கு நீங்கள் ஒரு வரி அணிந்துரை தரவேண்டும்' என்று கேட்டேன். இரண்டுநாள் கழித்து எனக்கு போன் செய்து வீட்டுக்கு வரச்சொன்னார்.


'தம்பி சிவகுமார், இந்த 'ராஜ பாட்டை' நூலைக் கொடுத்து ஒரு வரி அணிந்துரை எழுதித் தரச் சொன்னார்.

இதிலுள்ள அத்தனை வரிகளும் ஜவரி' என்று எழுதிக் கொடுத்து விட்டு, 'நீ ஒருவரிதா னேப்பா கேட்டாய்' என்று பளிச் செனப் பதில் சொன்னார். அது தான் கலைஞரின் சிறப்பு!



○ கனிமொழி, சிவகுமார் அம்மா, ராஜாத்தி, லட்சுமி, சிவகுமார், சூர்யா, கருணாநிதி, பிருந்தா...

# சத்திய வாக்கு



அன்பு என்னும் பொறி இல்லாத உயிரினமே இல்லை. பைத்தியக்காரன் கூட ஒரு மனிதரையோ ஒரு பொருளையோ ஆழமாக நேசிக்கிறான். நீங்கள் இந்த அன்பு உங்கள் இதயத்தில் உறையும் இறைவனின் அன்பு வடிவமே (பிரேமஸ்வரூபமே) என்று தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் இதயத்தில் பீறிட்டுக் கொண்டு வரும் அன்பு ஊற்று இன்றேல் உங்களுக்கு அன்பு காட்டத் தூண்டுதல் இராது. அந்த ஊற்றைக் கண்டு கொள்ளுங்கள். அதன் துணையை மேலும் மேலும் நாடுங்கள். அதன் சாத்தியங்களை மேம்படுத்துங்கள். உலகம் முழுவதும் அந்த அன்பு நீரைப் பாய்ச்சுங்கள். அதிலுள்ள அகந்தையின் சாயலை விட்டொழியுங்கள். யாருக்கு வழங்குகிறீர்களோ அவர்களிடமிருந்து கைமாறு எதிர் பார்க்காதீர்கள். (பாபா)

மனைவி : வேலைக்காரியை இனிமே வர வேண்டாம்னு சொன்னீங்களாமே.... அதைச் சொல்ல நீங்க யாரு?


கணவன்:அப்படின்னா வேலைக்கு சேர்த்துக்கலாம்ங்கறியா?

மனைவி: இல்ல... நானே சொல்லிடறேன் இனிமே வராதேன்னு.

கணவன் : அம்மாவுக்கு உடம்பு•சரியில்லையாம். பணம் அனுப்பச் சொல்லி, லெட்டர் போட்டிருக்காங்க....

மனைவி : சுக்கு காய்ச்சி குடிக்கச் சொல்லுங்க எல்லாம் சரியாப் போயிடும்.

கணவன் : ஓகே...அப்படியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டுக்கிறேன்.



மனைவி : என்னது... எங்கம்மாவுக்கா...? சொல்றத சரியா.. சொல்றீங்களா... ஒண்டுக்கும் லாயக்கு இல்லே...உடனே... டாக்சிக்கு...சொல்லுங்க...ஒபிசுக்கு ஒரு வாரம்...லீவும்....சொல்லுங்க... போய்...பாத்துட்டு வந்துடுவோம்.

கணவன் : அநாவசியமா! எனக்குள்ள தூங்கிகிட்டு இருக்கிற மிருகத்தை எழுப்பாத! தாங்க மாட்டாய்!

மனைவி ? பூனைக் குட்டிக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்!.

மனைவி : சாப்பாடு போட வா?

கணவன் : அடியே இன்னைக்கு நான் ஹோட்டல்ல சாப்பிட்டுட்டேன்.

மனைவி : அதுசரி எவ்வளவு மாவாட்டிட்டு வந்தீங்க?

கணவன் : "உங்க அப்பா பெரிய ஒலிம்பிக் ரசிகரா இருக்கலாம். அதுக்காக தங்க நகைக்கு பதிலா வெண்கல நகை செஞ்சு போட்டா என்ன அர்த்தம்?"

மனைவி : "நீங்க எனக்கு மூணாவதா வந்த புருஷன்னு அர்த்தம்"




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# ஆச்சரியமான தகவல்கள்

- அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
- அத்தி பலா மரங்கள் பூப்பதில்லை.
- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை.
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
- உத்தரப்பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.
- யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
- ஜோர்தான் நதியில் மீன்கள் இல்லை.
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
- ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
- பூடானில் திரையரங்குகள் இல்லை.
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
- காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
- பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை.
- மலைப் பாம்புக்கு விஷம் இல்லை.
- கிவி பறவைகளுக்கு இறக்கைகள் இல்லை.
- கடலில் முதலைகள் இருப்பதில்லை.
- நண்டுக்குத் தலை இல்லை.
- ஆமைக்குப் பற்கள் இல்லை.
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.
- மண்ணுளிப் பாம்புக்கு கண்கள் இல்லை
- அனைத்துப் பாம்புகளுக்கும் காதுகள் இல்லை

பி.றொசானா.
யாழ்ப்பாணம்.

# உலக யானைகள் தினம்



உலக யானைகள் நாள் (World Elephant Day) ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் 12 இல் கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம் யானைகளை பாதுகாப்பதே ஆகும். இன்றைக்கு உலகத்தில் உள்ள 65 அமைப்புகள் மற்றும் யானைகளை கொண்ட நாடுகள் இந்த தினத்தை கொண்டாடி வருகின்றன.

ஆசியாவின் பெரும்பாலான நாடுகளில் கலாசார செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுத்தப்படும் விலங்கினமாக யானைகள் விளங்குவதுடன், இலங்கையிலும் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்த விலங்கினமாக யானைகள் காணப்படுகின்றன.

எனினும் தற்போது யானைகளின் நிலை மிக மோசமாகவுள்ளது.

யானைகளின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்படும் அரச நிறுவனங்களின் செயற்றிறன் அதிகரிக்கப்பட வேண்டும் என சுற்றாடல் அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

செயற்றிறன் இன்மையால் யானைகள் கொடூரமாக துன்புறுத்தப்படுகின்றன.

நிலப்பரப்பில் வாழும் பெரிய விலங்கினமான யானைகளை மனிதன் தனது வாழ்க்கை செயற்பாடுகளுக்கு பயன்படுத்துகின்றமையை நாம் அனைவரும் அறிவோம்.

எமது நாட்டில் இவ்வாறான மனித செயற்பாடுகளுக்காக சுமார் 155 யானைகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

சமயம் சார் விடயங்களுக்கும் சுற்றுலாத் துறைக்கும் யானைகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

1900 ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் 10 ஆயிரம் யானைகள் வாழ்ந்திருக்கக்கூடும் என தரவுகளுள்ள போதிலும், இன்று 4,500 தொடக்கம் 5,000 வரையான யானைகளே உள்ளன.

வருடாந்தம் 80 தொடக்கம் 110 வரையான யானைகள் பிறப்பதுடன், 250 தொடக்கம் 270 வரையான யானைகள் வருடாந்தம் உயிரிழப்பதாக சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# விடுகதைகள்



1. கன்று நிற்க கயிறு மேயும் அது எது?
2. பிடுங்கலாம் ஆனால் நடமுடியாது அது எது?
3. வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன் அவன் யார்?
4. தனி ஒருவன் தனக்குள் இரகசியம் பேசுகிறான். அவன் யார்?
5. நான்கு கால் இருந்தும் நடக்க முடியவில்லை. நான் யார்?

விடுகதைக்கான விடைகள்:
1. பூசணிக்கொடி 2. தலைமுடி
3. தபாற்பெட்டி 4. சங்கு
5. கதிரை/மேசை

வோ.கனிஷா
யா.கனகரட்ணம் ம.ம.வி.
S.O.S. சிறுவர் கிராமம்

# போட்டிபோடு



(சென்றவாரத் தொடர்ச்சி)

இப்படி பரிசு கிடைக்காமல் தோற்று ஏமாந்து போவதைக்காட்டிலும் பேசாமல் போட்டியில் கலந்துகொள்ளாமல் இருந்துவிடலாம் என்று அவன் எண்ணியதுண்டு. இப்போது நண்பர்களின் கேலியும் அவனைச் சீண்டவே, பெயர் கொடுக்க எழுந்தவன் பெயர் கொடுக்காமல் உட்கார்ந்துவிட்டான்.

மாலையில் அலுவலகம் விட்டு வந்தார் முத்துவின் அப்பா. முத்து ஏதோ குழப்பத்தில் இருப்பதைப் பார்த்து, அவனிடம் கேட்டார். அவன் பள்ளியில் போட்டி அறிவித்திருப்பதைச் சொன்னான்.

"பரிசு முக்கியமில்லை! நீ போட்டியில் கலந்து கொள்வது தான் முக்கியம்! நாளைக்குச் சென்று பேர் கொடு" என்றார் அவர். முத்து தயங்கினான்.

"பேச்சுப்போட்டியோ, கட்டுரைப்போட்டியோ அதுக்கு ஒரு தலைப்பு கொடுப்பாங்க! அந்தத் தலைப்புக்கானதகவல்களை நீ சேகரிப்பாய்!, புத்தகங்களில் பார்ப்பாய்!, ஆசிரியர்களிடம், நண்பர்களிடம் கேட்பாய்!, இணையத் தளத்தில் தேடுவாய்! இப்படி தகவல்களை நீயே சென்று தேடித் தெரிந்து கொள்வதால், அது உன் மனசில பசுமரத்தாணி மாதிரி பதிந்துவிடும்! என்றைக்கும் மறக்காது!. ஒரு விடயத்தைப்பற்றி மற்றவர்களைக் காட்டிலும் நமக்குக் கூடுதலான தகவல் தெரியும் என்பது எப்பவுமே சாதகமான ஒரு விடயம்!" என்றார் அவர்.

முத்து மௌனமாக இருக்கவே, அவரே தொடர்ந்து பேசினார்.

"நீ ஒரு பேச்சுப் போட்டியில் கலந்துக்குறதா வைத்துக்கொள்வோம்! நான்காவது அல்லது ஐந்தாவது ஆளாத்தான் பேசப்போற! முதலில் பேசுகிறவன் நன்றாக பேசிட்டு வந்துவிட்டான் என்றால், அவனைக் காட்டிலும் நன்றாகப் பேசவேண்டும். அப்பொழுது தானே நடுவர்கள் நம்மை கவனிப்பார்கள் என்கிற பதற்றம் வரும்! அந்தப் பதற்றம் உனக்கு ஒரு மன நெருக்கடியைக் கொடுக்கும்! அந்த நெருக்கடிக்குப் பணியாமல் இருந்தால்தான் உன்னால் சிறப்பாக பேசமுடியும்! நெருக்கடிக்குப் பணியாமல் இருக்குற பயிற்சி இந்த மாதிரி போட்டிகளில் கலந்துகொள்ளும் போதுதான் உனக்குக் கிடைக்கும்! இந்த மனப் பக்குவம் எதிர்காலத்தில், வாழ்க்கையில பல்வேறு சந்தர்ப்பங்களில சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க உனக்கு ரொம்ப உதவிகரமா இருக்கும்!" என்றார் அவர்.

அவரே தொடர்ந்து, "பரிசு வாங்குற மாணவர்கள் உன்னைவிட திறமைசாலிகளாக இருக்காங்க! ஒவ்வொரு முறையும் நீ திறமையானவங்கக்கூட போட்டி போடும்போது உன்னோட திறமையும் மேம்படும் என்பதை மறந்து விடாதே! போட்டிகள் நம்மோட திறமையை மெருகேற்ற நமக்குக் கிடைக்கிற நல்ல வாய்ப்பு!

அதனால பரிசைப்பற்றி கவலைப்படாம நாளைக்குப் போயி பேர் கொடு!" என்றார் அவர்.

மறுநாள் பள்ளி சென்றான் முத்து. "டேய்!என்னடா நேற்று போட்டியில கலந்துக்கலைன்னு சொன்னாய்! இன்னைக்கு வேதாளம் முருங்கை மரம் ஏறின மாதிரி திரும்பவும் பேர் கொடுக்கப் போறாய்?" என்ற நண்பர்களின் கேலி கிண்டலைப் பொருட்படுத்தாமல் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி இரண்டிற்கும் தன் பெயரைத் தந்து விட்டு வந்தமர்ந்தான்.

(தொடரும்)

# ஒரு சிப்பிக்குள் அடக்கமுடியாத முத்து



அரசியல் விருப்பு வெறுப்புகளைக் கொஞ்சம் சைலண்ட் மோடில் போட்டுவிட்டு அமைதியாகப் பார்த்தால், இந்திய அரசியலில் முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பரபரப்பாக இயங்கிய, பன்முகம் கொண்ட ஒரு தலைவரை நினைவுகூர்வீர்கள். நடு வகிடு, கறுப்புக் கண்ணாடி இவற்றுடன் தோளில் ஒரு வேட்டியையே துண்டாகப் போர்த்தியபடி மைக் முன்னால் கர்ஜிக்கும் ஒரு முகம் நினைவுக்கு வரும். அவர்தான், மு.கருணாநிதி. கலைஞர், தமிழினத்தலைவர், முத்தமிழ் அறிஞர் என அவரது பெயரில் மரியாதை நிமித்தமாக அடைமொழிகள் மாறியபடி இருந்தன.

பெரும் திரளான மக்கள் கூட்டத்தைப் பேச்சால் கட்டிப்போடும் திறமை அவரிடம் இருந்தது. கவிதை, நாடகம், நாவல், கட்டுரை எனக் கவித்துவமான எழுத்து வலிமை இன்னொரு பக்கம். நிர்வாகத்திறன், நினைவாற்றல், அயராத உழைப்பு ஆகியவை அரசியல் களத்தில் அவருக்கு அனுசரணையாக இருந்தன. ஒரு முழுநேர எழுத்தாளரை விடவும் அதிகமாக எழுதினார். முழுநேரப் பத்திரிகையாளரை விடவும் அதிக நேரம் பத்திரிகை அலுவலகத்தில் கிடந்தார். முழுநேரச் சினிமாக் கதாசிரியர்களை விடவும் அதிகமாக வசனம் எழுதினார். பேச்சாளர், நாடக நடிகர், எழுத்தாளர், திரைப்பட வசன கர்த்தா, படத் தயாரிப்பாளர், திரைப்படப் பாடலாசிரியர், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாநிலத்தின் முதல்வர் எனப் பன்முகம் கொண்ட ஓர் அரசியல் தலைவர் கலைஞர் கருணாநிதி.

ஐந்து முறை முதல்வர், ஐந்து முறை எதிர்க்கட்சித் தலைவர், 74 திரைப்படங்களுக்குத் திரைக்கதை அமைத்தவர், 50 ஆண்டுகளாக ஒரு கட்சியின் தலைவர் என எதையும் சாதனையாக நிகழ்த்திக்காட்டியவர். ஒரு சிப்பிக்குள் அடக்க முடியாத முத்து. அகம் புறம் எனப் பேதமில்லாத திறந்த புத்தகமாகத் தமிழ் மக்களுடன் கலந்துவிட்டது இந்த கோபாலபுரத்தாரின் வாழ்க்கை.

ஒவ்வொரு துறையிலும் அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.


### முழுமையான பத்திரிகையாளர்!

பள்ளி மாணவராக இருந்தபோதே பத்திரிகையாளர் அவதாரம் எடுத்தவர் கலைஞர். 15 வயதில் முரசொலி இதழைத் தொடங்கினார். தயாளு அம்மாளை அவர் மணந்தபோது, திருமண அழைப்பிதழில் 'மு.கருணாநிதி - முரசொலி ஆசிரியர்' என்றே பதித்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர், முதல்வர் எனப் பொறுப்புகள் மாறும்... இருக்கைகள் இடம் மாறும். ஆனால், அவர் பத்திரிகை ஆசிரியராக முரசொலியில் தலைகாட்டிவிட்டுச் செல்வது மட்டும் மாறவே இல்லை. சில சமயங்களில், அவரே கார்ட்டூன் வரைந்த வரலாறும் உண்டு.

### தடம்பதித்த திரைத்துறையாளர்

கருணாநிதி எழுதிய பல நாடகங்களில் அவரே கதாநாயகனாகவும் நடித்தார். பக்கம் பக்கமாக அடுக்குமொழி வசனங்கள் அணிவகுக்கும். திராவிடர் கழகக் கொள்கைகள் வாழைப்பழத்தில் ஊசி சொருகினாற்போல இருக்கும். "துணிந்தவனுக்குத் தூக்கு மேடைப் பஞ்சு மெத்தை... அரசனை மட்டும் அல்ல; ஆண்டவனையும் எதிர்க்கத் துணிந்துவிட்டார்கள் மக்கள்" என்றெல்லாம் வசனம் அனல் பறக்கும். அன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர்களைப் பற்றிய விமர்சனம், மூட நம்பிக்கை எதிர்ப்பு, கடவுள் நம்பிக்கைக்கு எதிர்ப்பு, பெண் சுதந்திரம் எல்லாவற்றையும் வரிசைப்படுத்திவிட்டு, அதற்கு நடுவே ஒரு கதையையும் சொல்லும் சாதுர்யம் அது. சோக்ரடீஸ் நாடகம், சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சுவை எல்லாம் இழையோடும். வெள்ளிக்கிழமை, தூக்குமேடை, சிலப்பதிகாரம், உதயசூரியன், மணிமகுடம், நச்சுக்கோப்பை போன்றவை கருணாநிதி எழுதிய நாடகங்கள். அவற்றில் சில, திரைப்படங்களாகவும் வெளிவந்தன. தி.மு.கவின் பிரசாரம் எங்கெல்லாம் பலிக்குமோ, அங்கெல்லாம் கருணாநிதியின் அஸ்திரங்கள் செயற்பட்டன.

தமிழ் சினிமாவுக்குத் தமிழ் இரத்தம் பாய்ச்சிய பெருமை கலைஞருக்கு உண்டு. சுவாமி, நாதா, தேக பரிபாலனம், சொப்பனம் என மணிப்பிரவாளம் பேசிக்கொண்டிருந்த தமிழ் சினிமா, 'அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள், மதிகெட்டவனே?' என்றது கலைஞரின் தமிழில். 'நீதிமன்றம் பல விசித்திரமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறது' என சிவாஜி கணேசன் முழக்கத்தில் வெளியான 'பராசக்தி' கோர்ட் சீன், 65 ஆண்டுகள் கடந்த பின்னும் உயிர்ப்புடன் இருக்கிறது. "என் சுயநலத்திலே பொது நலமும் கலந்திருக்கிறது. ஆகாரத்துக்காக அழுக்கை உண்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன்... அப்படி!" என அந்த வசனத்தின் ஒவ்வொரு வரியும் தீப்பொறியாக இருக்கும். ஆகாரத்துக்காக அழுக்கை உண்பது என்ன மாதிரியான சுயநலம்? ஆடம்பரமான ஒன்றை அனுபவித்தாலும் அதனால் பொது மக்களுக்கு நன்மையே கிடைத்தது என்று சொல்லாமல், எவ்வளவு ஜாக்கிரதையாக வார்த்தையைப் பிரயோகித்தார் என்பது கவனிக்கத்தக்கது.



போகிற போக்கில் சில திருத்தங்களைச் செய்ததைப் பலரும் பதிவுசெய்திருக்கிறார்கள். 'பூம்புகார்' படத்தில் கவுந்தி அடிகளாக நடித்த கே.பி.சுந்தராம்பாள் ஒரு பாடல் வரியைப் பாடமாட்டேன் எனச் சொல்லிவிட்டார். கோவலன் கொல்லப்பட்டதும் கண்ணகி மதுரையையே எரிக்கிறாள்... அப்போது சுந்தராம்பாள் பாடுவதாகக் காட்சி. அந்த வரி இப்படி இருந்தது... 'அன்று கொல்லும் அரசின் ஆணை வென்றுவிட்டது, நின்று கொல்லும் தெய்வம் எங்கே சென்றுவிட்டது?' 'தெய்வம் எங்கே சென்று விட்டது' எனக் கடவுளையே கேள்விகேட்கும் பாடலை நான் பாட மாட்டேன் என கே.பி. சுந்தராம்பாள் சொல்லிவிட்டார். விடயம் கருணாநிதியிடம் வந்தது... ஒரு நொடி யோசித்தார். 'நின்று கொல்லும் தெய்வம் இங்கே வந்துவிட்டது' என மாற்றினார். 'தெய்வம் வந்துவிட்டது' என்று சொன்னதில் சுந்தராம்பாளுக்கு மகிழ்ச்சி. கண்ணகியைத் தெய்வமாக்கிவிட்டதில் கருணாநிதிக்கு மகிழ்ச்சி. இதுதான் சாதுர்யம்.

### இலக்கியப் பக்கங்கள்

எவ்வளவு பேசினாரோ, அவ்வளவு எழுதினார். சரித்திர நாவல்களின் பட்டியல் ஒரு பக்கம், கவியரங்கக் கவிதைகள் ஒரு பக்கம், சமூகக் கதைகளின் பட்டியல் ஒரு பக்கம், சிறுகதைகளின் அணிவகுப்பு ஒரு பக்கம், திருக்குறள் உரை, தொல்காப்பிய உரை, தாய்க் காவியம் என விளக்கவுரை எழுதிய நூல்கள் ஒரு பக்கம். இப்படி கருணாநிதியின் பக்கங்கள் எண்ணற்றவை. திரைக்கதை வசனங்கள், நாடகங்கள், கடிதங்கள், கேள்வி பதில்கள், கட்டுரைகள் என எழுதிக் குவித்தவையும் சேர்த்தால், 'இந்த மனிதர் பிறந்ததிலிருந்து எழுதிக் கொண்டேதான் இருந்திருப்பார்' என இவரை அறியாதவர்கள் நினைக்கக் கூடும்.

சரித்திரக் கதை எழுதுவது சாதாரணம் அல்ல. அந்தக் காலத்தில் பயன்படுத்திய உடை, உணவு, போர்க்கருவிகள், பயணிக்கும் முறை, மன்னர்கள் மற்றும் புலவர்களின் பெயர்கள், மொழிப் பிரயோகம், கால வித்தியாசம், தூர வித்தியாசம் அனைத்தும் மனதுக்குள் இருக்க வேண்டும். இலங்கைமீது போரிட்டான் என்றால் எப்படி படைக்கருவிகளைக் கொண்டுசென்றான், உணவுக்கு என்ன வழி செய்தான், வீரர்களுக்கு என்ன பயிற்சிகள் அளிக்கப்பட்டன, எதற்காகப் போரிட்டான் எனக் கதையைப் பின்னிக்கொண்டு போகவேண்டும். எவ்வளவு நாட்கள் பயணித்தனர். கப்பலைச் செலுத்துபவனின் அறிவு, நாவாய், பாய்மரம், படகு ஆகியவற்றுக்கான வித்தியாசங்கள் என நுணுக்கமாக அறிந்திருக்க வேண்டும். அதற்கெல்லாம் நேரம் அவருக்கு ஒத்துழைத்ததா... நேரத்துக்கு அவர் ஒத்துழைத்தாரா என்ற ஆச்சர்யம்தான் அந்தச் சரித்திரக் கதைகளைவிடவும் முக்கியம்.

குறளோவியம் என ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு சிறுகதை எழுதி விளக்கியது குறள் மீது அவருக்கு இருந்த ஈர்ப்பை விளக்கும். அரசு சார்பில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்துக்குக் குறளகம் எனப் பெயர் வைத்திருப்பதும் அந்த ஈர்ப்புக்கு இன்னொரு அடையாளம். அவருடன் தி.மு.கவில் பங்காற்றிய நெடுஞ்செழியன், அன்பழகன் போன்றவர்கள் எம்.ஏ படித்தவர்கள். நல்ல தமிழறிஞர்கள். ஆனால், எழுதும் ஆர்வத்தோடு ஒப்பிட்டால் கருணாநிதியை நெருங்க முடியாத தூரத்தில் இருந்தனர். நெஞ்சுக்கு நீதி எனத் தன் வாழ்க்கையைத் தானே பதிவு செய்ய நினைத்து, அதிலும் ஆறு பாகங்களை எழுதி முடித்துவிட்டார் கருணாநிதி.

### சோதனைகள்... சாதனைகள்!

ஆட்சியில் இல்லாத நிலையிலும் அரசியல் நடத்துவதும், கட்சியைக் கட்டிக்காப்பதும் அவருக்கு இருந்த சவால். முரசொலியில் எழுதுகிற கடிதங்களை வைத்தே, 13 ஆண்டு காலம் ஆட்சியில் இல்லாத நிலையிலும் உடன்பிறப்புகளை உடன் தொடர வைத்தார். சுயமரியாதை திருமணத்தை சட்டரீதியாக செல்லுபடி ஆக்கியது, அனைவரும் அர்ச்சகராகும் உரிமை தந்தது எனச் சட்டத்துக்கு உட்பட்டுப் போராட வேண்டிய கடமைகள் அவருக்கு இருந்தன. 'முதல்வரின் இலவசக் காப்பீட்டுத் திட்டம்', தமிழக ஏழை எளிய மக்களுக்கு ஒரு வரமாக இருந்தது. மாநில பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தொழிற்றுறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஐ.டி துறையை மாநிலத்தில் வரவேற்கும் விதமாக, அவரது பதவிக்காலத்தில், தரமணியில் டைடல் மென்பொருள் பூங்காவை உருவாக்கினார். இணைய மாநாடு நடத்தினார். உழவர் சந்தை, சமத்துவபுரம் போன்றவை இவருக்குப் பெருமை சேர்த்த திட்டங்கள்.

திருவள்ளுவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், 'வள்ளுவர் கோட்டத்தை' நிறுவினார். ஐயன் திருவள்ளுவருக்கு 133 அடியில் குமரியில் அமைத்த சிலை, வரலாற்றுச் சின்னமாக தென்திசையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. சிலப்பதிகாரம் நினைவாக பூம்புகாரைப் புதுப்பித்தவர். குடிசை மாற்றுவாரியம், கைரிக்ஷா ஒழிப்பு, கண்ணொளி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களால் ஏழை எளியவர்கள் பயன் அடைந்தனர். மாநில சுயாட்சிக் கொள்கை இவருடைய மகத்தான முழக்கமாக இருந்தது.

'உன்மீது அடித்த வெயில்
பசிபிக் கடல்மீது அடித்திருந்தால்
பாதி கடல்
பாலையாகப் போயிருக்கும்'

எனக் கவிஞர் வைரமுத்து எழுதியிருந்தார். இது கவி நயத்துக்காகச் சொல்லப்பட்டதுதான். ஆனால் இதில் உண்மையில்லாமல் இல்லை!

ஜூனியர் விகடன்

## facebook

# தண்ணீர்த் தாகம்

சென்றவார தொடர்ச்சி

ஒரு மின்னல் மன்னியது போல் இருந்தது. உலகமே இருண்டு மடமடத்து அவள் தலையில் கவிழ்ந்தது போல் இருந்தது. பூமியே அவள் கால்களிலிருந்து நழுவி விட்டது. இரத்தம் நெற்றியிலிருந்து குபீரிட்டது. களங்கமற்ற பார்வைக் கண்ணீரோடு இரத்தமும் சேர்ந்து ஓடியது. செம்பு அலங்கோலமாய் உருண்டு போய்விட்டது. அது அவள் கனிவாயை பற்றப்போய்த் தோல்வியடைந்ததற்காக அழுது கண்ணீர வடித்துக் கொண்டிருந்தது.

"மூதேவி. இனி இந்தப்பக்கம் தலைகாட்டு. உன் தலையை நுள்ளி எடுத்துவிடுகிறேனோ இல்லையோ பார். உனக்கு இது போதாது போ வெளியே. வீட்டில் வந்து கூசாமற் கால் வைக்குதுகள்"

தங்கச்சிலைபோல இவ்வளவும் நின்ற உருவம் இரத்த ஆற்றோடு பெயரத் தொடங்கியது. பெட்டியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு மெதுவாக வெளியே போய்விட்டாள். அவர் எறிந்தபோது வாய்ச்செம்பு அவள் நெற்றியில் நன்றாகக் கணீரிட்டுவிட்டது. தீண்டாமை அசுரனின் அசுரத்தன்மை அவள் பிறைநுதலில் இரத்தத்தை வாங்கி விட்டது.

பாவம் தாகவிடாய் தீர்ந்த பாடில்லை. களவுக்கேற்ற தண்டனை கிடைத்து விட்டதல்லவா? ஒரு பிராமணனின் அனுஷ்டானப் பாத்திரத்தைத் தொட்டுவிட்டாளல்லவா? எவ்வளவு பொல்லாத கோரக்களவு. இதற்கு இந்தத் தண்டமை போதுமா? சிவனுடைய அனுஷ்டானத்தை முடிக்க விடாமல் தண்ணீரைத் தொட்டு தீட்டாக்கியவளல்லவா? பெண்ணைத் திட்டிய திட்டுக்களைப் பார்த்துப் பகவான் சிரித்துக் கொண்டிருந்தார். "என் பிள்ளையின் கடூர நாவரட்சியைத் தணிக்காத உனக்கு என்மீது அன்பா? உன்னுடைய அனுஷ்டானம் கொடிய நரகிற்கு வாயிலல்லவா" என்று அழுகையோடுதான் அவர் சிரித்துக் கொண்டிருந்தார்.

சந்திரனுக்கும் இவள் முகத்திற்கும் நெடுங்காலம் ஓர் வித்தியாசம். அது இன்றோடு பூர்த்தியாகி விட்டது. அவள் மதிவதனத்திலும் மறு ஏற்பட்டுவிட்டது.

ஏழையின் தண்ணீர் விடாய் என்றுதான் தீருமோ?

நடுநிசி. எங்கும் ஒரே நிசப்தம். ஆனால் அறைகளில் இருமும் சப்தமும் குழந்தைகளின் கீச்சுக் குரலும் இன்னும் ஒழிந்தபாடில்லை.

"ஐயோ அம்மா" என்று அடுத்த அறைகளில் வியாதிக்காரர் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. குழந்தைகளைத் தாலாட்டும் தாய்மாரின் பல தினுசான குரல். அங்காங்கே மின்சார விளக்குகள் தூங்கிக்கொண்டிருந்தன.

ஒரு கிழவன் பூணுலை இழுத்து விட்டுக் கொண்டு மூலையிலே செருமிக் கொண்டு நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டு முக்கி முனங்கிக் கொண்டு இருந்தான். அவனை யாரும் கவனிப்பார் இல்லை. அவன் சுற்றமெல்லாம் இன்று அவனைக் கைவிட்டுவிட்டன. அவன் அவர்கட்கெல்லாம் என்ன செய்தான்? ஒரே ஒரு பிழை. வாலிபமாய் இருந்த காலத்திலே தெரியாமல் தூரத்திலே உள்ள வெள்ளாளப் பெண்ணைப் பார்ப்பணத்தி என்று கல்யாணம் செய்தான். சில நாட்கள் சென்றதன் பின் சுற்றம் எல்லாம் அவனை இகழ்ந்துதள்ளி விட்டது. அதன் பின்புதான் அவனுக்கு விடயம் புரிந்தது. தான் வெள்ளாளப் பெண்ணைக் கட்டி விட்டான் என்று உணர்ந்ததும் மெல்ல அவளைக்கைவிட்டான்.

பெண்வழியால்லாபமும்இல்லை. இனசனமும் இல்லை. இன்று வரையும் தனியேதான் காலந் தள்ளினான். இன்றைக்கு வியாதியாய்ப் போனான். கவனிப்பார் இல்லை. தர்ம ஆஸ்பத்திரியிலே கிடக்கிறான்.

அவனுக்கு மேலும் மேலும் மூச்சுவாங்கத் தொடங்கியது. தண்ணீர் விடாயெடுத்தது. அடி நாவிலே ஈரலிப்பில்லை. இருமி இருமி வரண்டு போயிற்று. தாக விடாய் வரவர அதிகரித்தது. பேச்சுக் கொடுத்தாலோ இருமல் வாட்டுகிறது.

அம்மா. தண்ணீர்! நாவை வறட்டுகிறது" என்று சொன்னான் அந்தக் கிழவன் கெஞ்சும் குரலில். பதிலே இல்லை. அடுத்த அறையில் இருந்து ஒரு இருமல் அதற்குப் பதில். கொஞ்சநேரம் நிசப்தம்.

"அம்மா. என்னால் சகிக்க முடியவில்லை. தண்ணீர் விடாயால் செத்துப் போய்விடுவேன். தண்ணீர கொடுங்களம்மா" யாருமே மூச்சு விடவில்லை. தாதிகள் எல்லாம் ஒரே உறக்கம் போலும்.



ஒரு பெண்ணுருவம் அந்த மூலையருகே வந்தது. ஆமாம் அவளும் ஒரு தாதிப் பெண்தான். அந்த ஆஸ்பத்திரியில். காலதேவன் கீறிய கோடுகள் பதிந்த அவன் முகத்தை உற்றுப் பார்த்தது. ஆனாலும் அந்த முகம் அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. கிழவன் தண்ணீருக்காக வாயைத் திறந்தான். "ஐயா. பறைச்சி தொட்டுத் தண்ணீர் தந்தால் குடிப்பீர்களா? தாங்கள் பிராமணரல்லவா?" என்றாள் அவள்.

"அம்மா. அம்மா. குழந்தாய் பிராமணனானாலென்ன? பறையனானாலென்ன? என் தாகத்திற்கு நீர் கொடம்மா! கொடியமரண தாகம் நெஞ்சை அடைக்கிறது. அவள் ஒரு சின்னப் பாத்திரத்தில் இளஞ்சூடான நீரைக் கொண்டு வந்தாள். கிழவன் விடாய் அவதியால் வாயைத் திறந்தான். ஆகா! உள்ளம் பூரிக்க ஆத்மா சாந்தியடைய மெல்ல மெல்ல நீரை வார்த்தாள் பெண்மணி.

அம்மா, இந்த மரணவிடாயில் என்னைக் காப்பாறினாய் உன் குலம் நன்றாக வாழட்டும். நீ யாரம்மா?

"ஐயா. என்னைத் தெரியாதா? நன்றாக உற்றுப் பாருங்கள்" என்று குனிந்தாள் அந்தத் தாதி. "ஞாபகம் இல்லையே?"

தன் நெற்றியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தாள். "இதோ பாருங்கள் இந்த மறுவை. தண்ணீர் விடாய்த்து அன்றொருநாள் உங்கள் வீட்டில் வந்தேனல்லவா? தாகவிடாய் தாங்காமல் சிறுபிள்ளைத்தனத்தால் ஏதோ அனுஷ்டானச் செம்பைத் தொட்டுவிட்டேனென்று நீங்கள் செம்பால் எறிந்த காயம் இதுதான் அவள் நெற்றியைக் காட்டினாள் கிழவனுக்கு.

கிழவன் முகம் காட்டிய குறியின் உணர்ச்சி. ஏதோ புதிதாய் இருந்தது. "ஆமாம், கதிரவன் மகளல்லவா? எப்படியம்மா இங்கே வந்தாய்? தாதியாவும் வேலை பார்க்கிறாயே?"

"ஆம். ஐயா. எல்லாம் அந்தக் கிறிஸ்தவப் பெரியாரின் கிருபைதான். அன்றைக்கு நீங்கள் தீர்க்காத தாகத்தை அந்தப் பெரியார்கள் தீர்த்தார்கள். கல்வியுமளித்து இந்த நிலையில் வைத்தார்கள்."

கிழவன் உள்ளம் வெடித்து விட்டது. "என் ம்ரணதாகத்தை நீக்கிய கரங்களுக்கா அன்று இரத்தக்கறைஏற்படவேண்டும்! இந்த விடாய் தானே அந்தப் பசலைக்கும் அன்று"

"அம்மா என்னை மன்னி. ஜாதிக் கர்வத்தால் அன்று உன்னை எறிந்த என்னை மனப்பூர்வமாய் மன்னி!" கிழவன் அவள் காலடியில் விழ எழுந்தான், பாவம்! அப்படியே தொப்பென்று விழுந்தான். விடாய் அடங்கியதோடு. அவன் கண் திறக்கவேயில்லை. (முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1484

### கஜன்

வாழ்க்கைப் புத்தகத்தில்
முதல் பக்கம்- கருவறை கடைசிப் பக்கம்- கல்லறை



இடையிலுள்ள பக்கங்களை புன்னகையால்
எழுது, கண்ணீரால் நனைக்காதே...!

### மணிமாறன்



இரண்டு வயது ஆவதற்குள் நாம்
பேசக் கற்றுக்கொள்கிறோம். எத்தனை வயது
ஆனாலும் "என்ன பேச வேண்டும்" என்று
கற்றுக்கொள்ள முடிவதில்லை

### துஷாந்

அழுகின்றவனுக்குக்கூட
யாராவது இரக்கப்படுகின்றனர்



ஆனால் உழுகின்றவனுக்கு
உதவிக்குக்கூட யாரும் இல்லை

### கௌசியன்

இறப்பதற்கு ஒரு நொடி
துணிச்சல் போதும் ஆனால்..



வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் வேண்டும்...!

### ரூபன்



உன்னை மதிப்பவரிடம் தாழ்ந்து பேசனும்
உன்னை மிதிப்பவரிடம் வாழ்ந்து பேசனும்

### ஐங்கரன்

இறப்பதற்கு ஒருநொடி துணிச்சல்போதும் ஆனால்



வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் வேண்டும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 143

## நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி?



மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அத்திபாரம் அவன் கருப்பையில் இருக்கும் போது இடப்படுகிறது. தாயின் மனமகிழ்ச்சி, போதுமான உடற்பயிற்சி, ஆரோக்கிய உணவுகள் சிசுவின் ஆரம்ப ஆரோக்கிய வளர்ச்சிக்கு அடிநாதமாய் திகழ்கின்றன. அந்தச் சின்னஞ்சிறு மனிதன் இந்தப் பூவுலகில் பிறப்பெடுக்கும் பொழுது பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கிறான்.

அந்தச் சவால்களை வெற்றி கொள்ளப் போராடுவது தான் சுக வாழ்வுக்கான தேவையாகி நிற்கிறது.



உலகம் இயந்திரமயமாகி சுதந்திரங்கள் பறிபோய் பூமிக் காற்றுப் புகையாகி, புழுதிமண்டலமாகி, ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து, பூமியைக் கதிர்வீச்சுக்கள் தாக்க, இலட்சக்கணக்கான பச்சை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு, பாவப்பட்ட மண் பாலைவனமாகிக் கொண்டிருக்கிறது.

இயற்கையான இனிய கனிகளுக்குக்கூட இரசாயனம் தெளிக்கப்பட்டுப் பகட்டான நச்சுக் கனிகள் ஆக்கப்பட பொலித்தீன்கள் எம்மை ஆக்கிரமிக்க மனிதன் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச் சவால்களை எதிர்கொள்ள சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு பரந்துபட்ட அளவில் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.



எமது சிறார்களுக்கு சுகம் சம்பந்தமான அறிவைச் சிறுவயதிலேயே புகட்டுவோம். உடற்பயிற்சி, ஆரோக்கிய உணவுமுறை, உடல் நிறை பேணுதல், ஆரோக்கிய வாழ்க்கை முறை, சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை அவர்களின் மனது ஏற்றுக்கொள்ளும் வகையில் சொல்லிக் கொடுப்போம்.

ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு ஆரோக்கியமானவன், சுகதேகி என்று எண்ணிக்கொள்வது அவனைப் பல நோய்நிலைகளிலிருந்து காக்கும்.

சிறுசிறு உடல் நலக்குறைவுகளும் நோய்நிலைகளும் அவ்வப்பொழுது ஏற்படுவது இயற்கை. அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்து தொடர்ந்து நாம் ஆரோக்கியமாக வாழமுடியும் என்ற நம்பிக்கை அனுகூலமாக அமையும்.

கடுமையான நோய்நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்டவேண்டும்.

இயந்திரமயமாகிவிட்ட இந்த உலகை நாம் புத்திசாதுரிய்மாக சாதகமாக பயன்படுத்த கற்றுக்கொள்வோம். விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் சராசரியாக வாழும் வயதெல்லை அதிகரித்திருக்கிறது. கற்கை, கற்பித்தல் செயற்பாடுகளில் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினால் உலகம் ஒரு குடும்பம் போல நெருங்கி வந்திருக்கின்றது. இந்த நல்ல மாற்றங்களை எமது சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்வோம்.

மனச்சோர்வு, உலக சவால்களை எதிர்கொள்வதில் ஏற்படும் கஷ்டநிலை என்பன பல சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தி நிற்



கின்றன. இவை தற்கொலைகளில் கூட முடிகின்றன. தற்கொலை என்பது வாழ்ந்தது போதும் என்ற எண்ணமே அன்றி இறப்பதற்கான விருப்பம் அல்ல. அவ்வாறான எண்ணம் தற்காலிகமானது என்பது உணரப்படுவதில்லை.

தற்கொலையில் ஈடுபடுபவரில் பலர் ஒரு கண நேரத்தில் இவ்வாறான முடிவை எடுத்துவிட்டு இறுதியில் தாம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் வைத்திய சேவைகளை நாடுகின்றனர்.

இவ்வாறு அதிகரித்துவரும் தற்கொலை முயற்சிகளை தடுத்து நிறுத்த சமூக மட்டத்திலே பல்வேறுபட்ட தரப்புகளின் கூட்டு முயற்சி அவசியமாகின்றது.

உலகிலே உடற்பருமன் அதிகரிப்பால் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் இறக்கின்றனர். எனும் அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது. உடல் நிறை பராமரிப்பு உயிர்காக்கும் என்ற தகவல் ஒவ்வொருவரையும் சென்றடைய வேண்டும்.

மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், மருந்து, சுவாசக் காற்று, நிழல், குளிர்ச்சி, மன அமைதி, மழை, நீர், எரிபொருள், மகிழ்ச்சி என அனைத்தையுமே தொடர்ந்து அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் தாவரங்களையும் மரங்களையும் நட்டு வளர்ப்பதில் பெருமிதம் கொள்வோம்.

மனதிற்கு பிடித்த நல்ல காரியங்களில் மனதை செலுத்துவோம். மனதையும் உடலையும் சுற்றாடலையும் தூய்மையாகப் பேணி சுகம் பெறுவோம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

## எவ்வாறு பல்துலக்குவது?



- சரியான பற்பசையைத் தெரிந்தெடுத்தல்.
- மென்மையான பற்தூரிகையைச் சரியான அளவில் பெற்றுக்கொள்ளல்.
- பற்தூரிகையை நனைத்துச் சிறிதளவு பற்பசையை அதில் போடுதல்.
- பின்னர் இடப்பக்க மேல் வாய்ப்பல்லின் பக்கத்தினைத் துலக்குதல்.
- பற்தூரிகையை 45 பாகை கோணத்தில் வைத்து வட்டமான திசையில் துலக்குதல். இவ்வாறு கீழ் வாய்ப் பற்களின் பக்கத்தினைக் குறைந்தது 20 செக்கன்களுக்குத் துலக்குதல்.
- பின்னர் மேல் முன் வாய்ப்பற்களைத் துலக்குதல்.



- பின்னர் கீழ் முன்வாய்ப் பற்களைத் துலக்குதல்.
- பின்னர் வாயின் உட்பக்கம், நாக்கு என்பவற்றை 30 செக்கனில் துலக்குதல்.
- பின்னர் வாயின் உட்பக்கம், நாக்கு என்பவற்றை 30 செக்கனில் துலக்குதல்.
- பின்னர் வாயை நீர் அல்லது ஏதாவது வாயலசி பாவித்துக் கழுவுதல் வேண்டும்.

**யாழ். மருத்துவ குழு**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 468 5555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள், அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்